# உதயன்



27

www.onlineuthayan.com

32: பக்கங்கள் | சுடர் 27 கதிர் 272 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 08 வெள்ளிக்கிழமை (24/08/2012) UTHAYAN - A Lively National Tamil Daily | விலை ரூபா 25.00


# சேகுதாவூத் திடீர் பதவி விலகல் அதிர்ச்சியில் உறைந்தது மு.கா.!

## அவரது முடிவு குறித்து கட்சி உயர்பீடத்துக்கு எதுவுமே தெரியாது என்கிறார் ஹஸனலி

கொழும்பு, ஓக. 24

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பசீர் சேகுதாவூத் பிரதியமைச்சர் பதவியிலிருந்து எந்தவித முன்னறிவித்தலுமின்றி திடீரென விலகியுள்ளார். அவரது முடிவு கட்சிக்குள் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது.

தனது பதவி விலகல் குறித்து கட்சியின் தலைவருக்கும் செயலாளருக்கும் அறியப்படுத்தியிருப்பதாகத் தவிசாளர் பசீர் சேகுதாவூத் அறிக்கையொன்றில் தெரிவித்திருந்தார்.



**தனக்கு அமைச்சுப் பதவி மீது ஆசை இல்லை என்பதை வெளிப்படுத்தவும், தேர்தலில் இதய சுத்தியோடு பணியாற்றவுமே இந்த முடிவு என்கிறார் சேகுதாவூத்.**

எனினும் எதுவித அறிவித்தல்களும் தமக்கு கிடைக்கவில்லையென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசனலி நேற்று 'உதயனி'டம் தெரிவித்தார்.

''பிரதியமைச்சர் பதவியிலிருந்து பசீர் விலகியமை தொடர்பான விடயத்தை நான் இப்போதே அறிகிறேன். இப்படி எந்த முடிவும் கட்சி மட்டத்தில் எடுக்கப்படவில்லை. நான் அறிந்தவரை இப்படியான ஒரு தீர்மானம் குறித்து எமது கட்சித் தலைவரும் அறிந்திருக்கவில்லை'' – என்றும் ஹசனலி குறிப்பிட்டார்.

இதற்கிடையில் பிரதியமைச்சர் பதவியிலிருந்து

பார்க்க பக்கம் 4

### பயங்கரவாதத்துக்கான நிதி முடக்கல் சட்டமூல மீளாய்வுக்கு அனுமதி

கொழும்பு, ஓக. 24

2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பயங்கரவாதிகளுக்கான நிதி முடக்கல் தொடர்பிலான சட்டமூலத்தை மீளாய்வு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜி - 7 நாடுகளின் சிபார்சுக்கமைய வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் விடுத்த வேண்டுகோளுக்கமையவே குறித்த சட்டமூலத்தில் சீர்திருத்தம்

பார்க்க பக்கம் 4

### புலிகளின் பின்னடைவுக்கு பழ.நெடுமாறனே காரணம்

சொல்கிறார் கருணாநிதி

சென்னை, ஓக. 24

இலங்கைப் போரில் விடுதலைப் புலிகளுக்கு பின்னடைவு ஏற்பட்டதற்கு பழ. நெடுமாறன் போன்றோரே காரணம். இத்தகையவர்கள் அங்கும் இங்கும் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்ததாலேயேபுலிகள்தோல்வி அடைய

பார்க்க பக்கம் 4

2 — வருடந்தோறும் 20 ஆயிரம் பேருக்கு அடைக்கலம் வழங்க ஆஸி. முடிவு.

8 — மன்மோகன் சிங்கும், ப.சிதம்பரமும் ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பாக விளக்கமளிக்க வேண்டும்.- பா.ஜ.க. போர்க் கொடி.

9 — பிரிட்டன் அரசின் இணையத் தளங்களை முடக்கினர் அசாஞ்சே ஆதரவாளர்கள்.

10 — கென்யாவில் மூண்டது பெரும் இனக் கலவரம். 11 குழந்தைகள் உட்பட 52 பேர் உயிரிழப்பு.

## அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்தி சீன நிதியுதவியில்

இலங்கை அரசு தீர்மானம்

கொழும்பு, ஓக. 24

இலங்கை சீனாவின் பக்கம் சாயும் போக்கைக் கடைப்பிடிப்பதால் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படும் இவ்வேளையில், சீனாவின் நிதியுதவியுடன் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் இரண்டாம்கட்ட அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுப்பதற்கு இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் முதற்கட்ட அபிவிருத்திப் பணியின் கீழ் துறைமுகத்தின் சகல உட்கட்டமைப்பு வசதிகளும் சீன வங்கியொன்றின் உதவியுடன் பூர்த்திசெய்யப்பட்டமை தெரிந்ததே.

இந்த நிலையில், துறைமுகத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்காக சீன எக்சிம் வங்கி 600 மில்லியன் டொலரையும், சீன அரசு சலுகைக் கடனாக ஒரு மில்லியன் யுவான்களையும் வழங்கவுள்ளன.

மேற்படி கடன் உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு நிதியமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

பார்க்க பக்கம் 4

## பசீர் துணிச்சல் முடிவு பஸில் வரவேற்கிறார்

கொழும்பு, ஓக. 24

பிரதியமைச்சர் பதவியை இராஜினாமா செய்ததன் மூலம் பசீர் சேகுதாவூத் மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்திருக்கிறார். அவரின் நேர்மையையும், துணிச்சலையும் நான் வரவேற்கிறேன்.

- இவ்வாறு நேற்று 'உதயனி'டம் கருத்து வெளியிட்டார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

பிரதியமைச்சர் பதவியிலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பசீர் சேகுதாவூத் இராஜினாமா செய்திருப்பது குறித்து கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தற்போதைய இந்தச் சூழ்

பார்க்க பக்கம் 4

## கிழக்கில் தேர்தல் வன்முறைகள் தலைதூக்காதிருக்க நடவடிக்கை

அரசு தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 24

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் வன்முறைகள் தலைதூக்குவதைத் தடுப்பதற்கு அரசு தன்னாலான அனைத்துவித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல நேற்றுத் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் அரசதகவல்திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது, கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் வன்முறைகள் ஏற்படாமல் இருப்பது தொடர் பில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார் என்ற விடயத்தைச் சுட்டிக்காட்டி இது தொடர்பில் அரசு எடுக்கவுள்ள நடவடிக்கைகள் என்னவென்றும், அரசின் பங்காளிக் கட்சியான மு.காவுக்கும், கிழக்கில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்குமிடையே மோதல்கள் ஏற்படுகின்றனவே என்றும் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளிக்கையிலேயே ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேற் கண்டவாறு தெரிவித்தார்.

பார்க்க பக்கம் 4

## வடக்கில் 21,000 படையினர் குறைப்பு

சொல்கிறார் கோத்தபாய

கொழும்பு, ஓக. 24

2009ஆம் ஆண்டு முதல் வடக்கில் 21,000 படையினர் குறைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்திருக்கிறார் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ. அத்துடன் பலாலி இராணுவத் தளத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வீடுகள், காணிகளைக் கொண்டிருக்கும் மக்களுக்கு இழப்பீட்டையும் மாற்றுக் காணிகளையும் அரசு வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.



கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாதுகாப்புச் செயலர் இதனைக்கூறினார். அவர் அங்கு

பார்க்க பக்கம் 4

## அகாஷி இன்று கிளி, யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஓக. 24

இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு வந்துள்ள ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாஷி யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு இன்று வருகை தரவுள்ளார்.

சமயத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதி

பார்க்க பக்கம் 4

## நல்லூரில் நல்ல வருமானம்!

மாநகர முதல்வர் மகிழ்ச்சி

யாழ்ப்பாணம், ஓக. 24

கடந்த ஆண்டிலும் பார்க்க இந்த ஆண்டு நல்லூர் உற்சவ காலத்தில் யாழ். மாநகர சபைக்கு 20 லட்சம் ரூபா மேலதிக வருமானம் கிடைத்துள்ளதாக மகிழ்ச்சி தெரிவித்தார் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா.

நல்லூர் உற்சவகால செயற்பாடுகள் இம்முறை முன்னைய காலங்களைவிட சீராகவும் சிறப்பாகவும் இடம்பெற்றிருந்ததாகவும் அவர் கூறினார். வெளிநாடுகளில் இருந்துகூட தமிழ் மக்கள் நல்லூர்திருவிழாவுக்கு வருகை தந்தமை மகிழ்ச்சியைத் தந்ததாகவும் தெரிவித்தார்.

பார்க்க பக்கம் 4

## தமிழக மீனவர் மீது மீண்டும் இலங்கைப் படை தாக்குதல்

இராமேஸ்வரம், ஓக. 24

நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்களின் வலையை இலங்கைக் கடற்படையினர் வெட்டி கடலில் மூழ்கடித்து, மீனவர்களை சரமாரியாகத் தாக்கினர் என தமிழக மீனவர்கள் நேற்றுத் தெரிவித்தனர்.

இராமேஸ்வரத்தில் இருந்து நேற்றுமுன்தினம் சுமார் 300 இற்கும் குறைவான விசைப் படகுகளில் மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றனர். மீன்வளம் நிறைந்த கடல் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு 3 போர்க் கப்பல்களில் ரோந்து வந்த இலங்

பார்க்க பக்கம் 4


இன்றைய உதயன் பத்திரிகையுடன் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது. பாடசாலைகள் மற்றும் தேவையானவர்கள் 021 5677222 என்ற தொலைபேசி இலக்கத்துடன் குறித்த தினத்துக்கு முன்னர் தொடர்பு கொண்டு பதிவு செய்தால் 5 ரூபா செலுத்தி வினாத்தாள்களை மட்டும் பெற்றுக்கொள்ளலாம்.

# வருடமொன்றுக்கு 20 ஆயிரம் பேருக்கு புகலிடம் வழங்க ஆஸி. அரசு முடிவு

### ஆபத்தான கடற்பயணங்களை தடுக்கவே இந்தத் தீர்மானம்

கொழும்பு, ஓக.24

வருடந்தோறும் தலா 20 ஆயிரம் புகலிடக் கோரிக்கையாளர்களை தமது நாட்டுக்குள் அனுமதிக்க உள்ளதாக ஆஸ்திரேலிய அரசு அறிவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களின் வருகை அதிகரித்ததைத் தொடர்ந்தே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து அதிகளவானோர் சட்டவிரோதமாகப் படகுகள் மூலம் ஆஸ்திரேலியாவுக்கு செல்வது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பதிலளிக்கையிலேயே இந்தத் தகவலை தெரிவித்தார்.

இதேவேளை ஆஸ்திரேலியா ஒவ்வொரு ஆண்டும் வழமையாக அனுமதிக்கும் அகதிகளின் எண்ணிக்கையை இனிவரும் காலங்களில் நாற்பது சதவீதத்தால் அதிகரிக்கவுள்ளோம் என்று ஆஸிப் பிரதமர் ஜூலியா கிலார்ட் அறிவித்துள்ளார்.



தொலைதூர பசுபிக் தீவுகளில் தடுப்பு முகாம்களை அமைத்து, அகதிகளாக தஞ்சம் கோருபவர்களை அங்கு தங்க வைக்கும் நடவடிக்கையை முன்னெடுப்பதன் மூலமும், ஆஸ்திரேலியாவில் குடியேற விரும்புகிறவர்கள் முன்கூட்டியே அதற்கான விண்ணப்பத்தை அனுப்புவதை வலியுறுத்த முடியும். இந்த நடவடிக்கையின் மூலம், புகலிடத் தஞ்சம் கோரும் நோக்கில் ஆபத்தான கடற்பயணத்தை மேற்கொள்வதை தடுக்க முடியும் .எனவும் ஜூலியா கிலார்ட் தெரிவித்துள்ளார்.

கூடுதலான அகதிகளை உள்வாங்குவது எனும் அரசின் முடிவு, சுயாதீனமான ஒரு குழுவின் பரிந்துரைகளை அடுத்தே நடைமுறைக்கு வந்துள்ளது.

ஆஸ்திரேலியாவை சென்றடையும் நோக்கில், மோசமான நிலையில் உள்ள படகுகள் மூலம் ஆபத்தான கடற்பயணத்தை மேற்கொண்டவர்களில் 600 இற்கும் அதிகமானவர்கள் கடந்த ஓராண்டில் மட்டும் கடலில் மூழ்கியுள்ளனர். ஆஸ்திரேலியாவின் புதிய முடிவின்படி சட்டபூர்வமாக அந்த நாட்டுக்குள் செல்வதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. இதனால் ஆபத்தான கடற்பயணங்களை மேற்கொண்டு அங்கு செல்ல முனைவோரின் எண்ணிக்கை குறையக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வலி.தெற்குப் பிரதேசசபைக் கட்டடம் மீதான கழிவுஒயில் வீச்சுக்கு கண்டனம்

யாழ்ப்பாணம், ஓக.24

வலி.தெற்கு பிரதேச சபைக்கென அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தின் மீது நடத்தப்பட்ட கழிவுஒயில் வீச்சு தாக்குதல் தொடர்பாக பல்வேறு தரப்புகளும் கண்டன அறிக்கைகளை விடுத்துள்ளன.

இது தொடர்பாக வலி. தெற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சார்பாக இ.அரிகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:- .

வலி.தெற்கு பிரதேச சபைக்கான புதிய கட்டடம் மீது மிலேச்சத்தனமாக கழிவு ஒயில் ஊற்றப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த அநாகரிக சம்பவத்தில் ஈடுபட்டவர்களை கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இதேவேளை, கட்டட ஆரம்ப விழாவை அங்கத்தவர்கள் அழைக்கப்பட்டு எது வித தீர்மானங்களும் நிறைவேற்றப்படாமல் தவிசாளர் தன்னிச்சையாக முடிவெடுத்து உறுப்பினர்களுக்கு அழைப்பிதழ்களை அனுப்பியதாலேயே நாம் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை - என்றுள்ளது.

சாவகச்சேரி நகரசபை சார்பில் அதன் தவிசாளர் விடுத்துள்ள கண்டனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனநாயக ரீதியிலான தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகளில் தனித்துவத்தை கேவலப்படுத்தும் வகையில் இவ்வாறான இழி செயல்களில் சிலர் ஈடுபட்டு வருவது வேதனைக்குரியது.

மக்களின் வரிப் பணத்தில் உருவாக்கப்பட்ட இத்தகைய கட்டடங்கள் மீது கழிவு ஒயில் வீசுவது கண்டிக்கத்தக்க விடயம். இவ்வாறான இழி செயல்கள் மூலம் மக்களுக்கான செயற்றிட்டங்களை தடுக்க முனைவது குறித்த பிரதேச மக்களுக்கு விடுக்கப்படும் சவாலாகவே எடுத்துக் கொள்ள வேண்டும். - என்றார்.

## டெல் றொக்ஷனின் உடற்கூற்று பரிசோதனை அறிக்கை இன்னமும் கிடைக்கவில்லை

### சிறைச்சாலை மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் தகவல்

யாழ்ப்பாணம், ஓக.24

வவுனியா சிறைச்சாலையில் இடம்பெற்ற அசம்பாவிதம் காரணமாக கோமா நிலையிலிருந்து உயிரிழந்த மரியதாஸ் டெல்றொக்ஷனது (வயது 36) உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை இன்னமும் கிடைக்கப் பெறாததால், அது தொடர்பிலான விசாரணை அறிக்கை இன்னமும் வெளியிடப்படவில்லையென சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் எஸ்.சதீஸ்குமார் 'உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த ஜூன் மாதம் 29 ஆம் திகதி வவுனியா சிறைச்சாலையில் கைதிகளின் போராட்டத்தை எதிர்த்து அவர்கள் மீது கடுமையான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு பின்னர் அனைவரும் அநுராதபுரம் சிறைக்கு மாற்றப்பட்டனர். இந்தக் தாக்குதல்களில் படுகாயமுற்ற கைதிகளான க.நிமலரூபனும், டெல்றொக்ஷனும் உயிரிழந்திருந்தனர். இவர்களது மரணம் தொடர்பிலான உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று மனித உரிமை ஆர்வலர்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் டெல்றொக்ஷன் உயிரிழந்து 17 நாள்கள் கடந்த நிலையிலும் அவரது மரணம் தொடர்பான உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்றும், இதனாலேயே டெல்றொக்ஷனின் மரணம் தொடர்பான விசாரணை அறிக்கை வெளியிடப்படவில்லை என்றும் சிறைச்சாலை மற்றும் மறுசீரமைப்பு புனர்வாழ்வு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் தெரிவித்தார். (ங-5)

## வடமாகாணத்தில் நோய்களை தடுக்க 19 மில்லியன் டொலர் நிதி ஒதுக்கீடு

### உலக நிதி நிறுவனம் வழங்கியது

வடமாகாணத்தில் எயிட்ஸ், காசநோய், மலேரியா போன்ற நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான உட்கட்டுமானங்களை வழங்குவதற்கென உலக நிதி நிறுவனம் 19 மில்லியன் அமெரிக்க டொலரை ஒதுக்கியுள்ளது.

வடமாகாணத்தில் சமுதாய நோக்குடைய அடிப்படைச் சுகாதார நலனை வலுப்படுத்துவதற்காகவே மேற்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ர.விஜயலட்சுமி தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிதியிலிருந்து முதற்கட்டமாக 13 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இனங்காணப்பட்ட 22 செயற்பாடுகளை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதில் 19 செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 5 செயற்றிட்டங்கள் ஏற்கனவே பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டப் பணிகள் கடந்த வருடம் ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அடுத்த வருடம் ஜூன் மாதம் அந்தப் பணிகள் நிறைவு பெறும். இரண்டாம் கட்டப் பணிகள் அடுத்தவருடம் ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நிறைவுபெறும்.

இந்தச் செயற்றிட்டங்களுக்கு என 520 சமூக சகாதாரத் தொண்டர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (16-4)

## வீரவன்ஸவின் உடல்நலம் பாதிப்பு



கொழும்பு, ஓக. 24

வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ஸ திடீர் சுகவீனமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் அவரது உடல் நிலை தேறியதால் நேற்று மாலையே வீடு திரும்பினார்.

திருகோணமலையில் நடைபெறவிருந்த தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொள்வதற்காக சென்றுகொண்டிருந்த போது அமைச்சர் சுகவீனமடைந்துள்ளார்.

அமைச்சர் குருணாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் அங்கு அவருக்கு உடனடியாக வழங்கப்பட்ட சிகிச்சைகளின் பின்னர் நேற்று மாலையே வீடு திரும்பியுள்ளார். அவரது உடல் நலக் குறைவு சாதாரணமாக ஏற்பட்டது ஒன்றே என்றும், கவலைப் படும்படியாக ஏதும் இல்லை என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## புதிய கட்டடத் திறப்புவிழா அமைதியான முறையில்

### வலி.தென்மேற்கு பிரதேசபை தீர்மானம்

400 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தலைமைக்காரியாலயத்திறப்பு விழாவை உள்ளூர் பிரமுகர்கள் சகிதம் அமைதியான முறையில் திறந்து வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையிலான மாதாந்தக் கூட்டத்தின்போதே இந்த முடிவு ஏகமனதாக எடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அநாவசிய செலவுகளை கட்டுப்படுத்தி ஆடம்பரமற்ற முறையில்புதிய கட்டடத் திறப்பு விழாவை அமைதியான முறையில் நடத்த உறுப்பினர்கள் அனைவரும் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

## கட்சி தாவுவார் ரோஹித?

கொழும்பு, ஓக.24

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம, மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொள்ளவுள்ளதாக அந்தக் கட்சியின் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் நெருங்கிய ஆதரவாளராக இருந்த போகொல்லாகம, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் அழைப்பின் பேரில், அரசுடன் இணைந்து கொண்டார். எனினும் அவர் தொடர்ந்தும் ரணில் விக்ரமசிங்கவுடன் தொடர்புகளை பேணி வந்தார்.

இந்த நிலைமையில், பாரம்பரியமாக ஐக்கிய தேசியக்கட்சியின் கீழ் செயற்பட்டு வந்த ரோஹித போகொல்லாகமவை மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைத்து கொண்டு, குருநாகல் மாவட்டத்தின் தலைமை பொறுப்பை அவரிடம் வழங்குவதற்கு, குருநாகல் மாவட்டத்தின் சிரேஷ்ட தலைவரான காமினி ஜயவிக்ரம பெரேரா இணக்கம் தெரிவித்துள்ளதாக தெரிய வருகிறது.

## பெரும் வெற்றியளித்துள்ள பரீட்சார்த்த பப்பாசிச் செய்கை

யாழ்ப்பாணம்,ஓக.24

நல்லூர் பிரதேச சபையால் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட பப்பாசிச் செய்கை பெரும்வெற்றியளித்துள்ளது என்று பிரதேச சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

கோண்டாவில் ஆயுள்வேத வைத்தியசாலை வளாகப் பகுதியில் இந்தப் பப்பாசிச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் பசளையைப் பயன்படுத்தி இந்த பப்பாசி செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் செய்கை பெரு வெற்றியளித்துள்ளதோடு சபைக்கு இதனால் வருமானமும் கிடைத்துள்ளது.

அதைவிட இந்த வளாகத்தில் விவசாய நிலையத்தில் உள்ளூர் மரக்கறி செய்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-17)

## மேல் மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக அனோமா குதிக்கிறார்

கொழும்பு, ஓக.24

அடுத்து நடத்தப்பட உள்ள மேல் மாகாண சபைத் தேர்தலில், தனது மனைவியான அனோமா பொன்சேகாவை, முதலமைச்சர் வேட்பாளராக களம் இறக்க முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, பிரதான எதிர்க்கட்சிகளின் உதவியை நாடியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்க்கட்சி கூட்டணியின் கீழ் அனோமா பொன்சேகாவை தேர்தலில் நிறுத்த சரத் பொன்சேகா உத்தேசித்துள்ளார். பொன்சேகா இந்த விடயம் தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சியின் கரு ஜயசூரிய, சஜித் பிரேமதாச ஆகியோருடன் மறைமுகமாக கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டுள்ளார். எனினும் எவரும் தெளிவான பதிலை வழங்கவில்லை என கூறப்படுகிறது.

நீதிமன்ற தீர்ப்பு காரணமாக தேர்தலில் போட்டியிட முடியாது போயுள்ளதால், சரத் பொன்சேகா, தனது மனைவியைஅரசியலில்இறக்கி, தமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## 50 லட்சம் ரூபாவை விழுங்கி கண்மூடியிருக்கும் பஸ் நிலையம்

50 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பளை பஸ் நிலையம் பயணிகளின் பாவனையின்றி மூடிக் கிடப்பது குறித்துப் பொது மக்கள் கவலை தெரிவித்தனர்.

ஏ-9 வீதியில் தினமும் நூற்றுக்கு மேற்பட்ட பயணிகள் வாகனங்கள் பஸ் நிலைய வீதியோரத்தில் நிறுத்தப்பட்டு பயணிகளை ஏற்றிச் செல்கின்றன. இதனால் பயணிகள் பஸ் நிலையத்தைப் பயன்படுத்துவதில்லை.

பஸ் நிலையக் கட்டடம் பொது மக்களின் பாவனைக்கு விடப்பட்டது தமக்குத் தெரியாது என்று பயணிகளும் வாகனங்களின் சாரதிகளும் தெரிவித்தனர். முன்னைய காலத்தில் பளை ஊடாகச்செல்லும் அனைத்து வாகனங்களும் பஸ் நிலையத்தில் உணவுக்காகவும் தேநீருக்காகவும் நிறுத்தப்பட்டு வந்தன.

அதனால் அங்கிருந்த பஸ் நிலையத்தை பயணிகள் பயன்படுத்தினர். ஆனால் தற்போது பயணிகள் வாகனம் எதுவும் தரிக்காமல் வீதியோரத்தில் வைத்து பயணிகளை இறக்கி, ஏற்றி விட்டுச் செல்வதாகவும் இரவு வேளைகளில் வரும் வாகனங்களும் வீதியோரத்தில் நிறுத்தப்படுவதாகவும் கூறப்பட்டது. இந்த பஸ் நிலையம் கடந்த மாதம் திறந்து வைக்கப்பட்டபோதும் இங்கு வாகனங்கள் நிறுத்தப்படுவதில்லை என்று கூறப்படுகிறது. (ம-9)

## வீதி அகலிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கக் கோரிக்கை

வடமராட்சி, ஓக.24

வீதி அகலிப்பு வேலைகளை தாமதமின்றி ஆரம்பிக்க பருத்தித்துறை நகர வர்த்தகர்கள் உரிய ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று பருத்தித்துறை பிரதேச செயலரும் பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தினரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நகரில் வீதி அகலிப்புக்காக எல்லைப்படுத்தப்பட்ட இடங்கள் வரை கடைக் கட்டடங்களையோ ஏனைய கட்டடங்களையோ இடித்து இடம் ஒதுக்கீடு செய்து தருமாறு ஏற்கனவே விடுக்கப்பட்ட கோரிக்கையைப் பலர் நடைமுறைப்படுத்தியுள்ளனர்.

ஒரு சிலர் இன்னமும் நடைமுறைப்படுத்தாத நிலையில் மீண்டும் இந்தக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

நெல்லியடிக்கும் பருத்தித்துறைக்கும் இடையேயான நான்கு மைல் வீதியை அகலிக்கும் பணி இன்னமும் நிறைவடையவில்லை. தற்போது நெல்லியடியில் வீதி அகலிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல் பருத்தித்துறை நகரில் இருந்து வீதி அகலிப்பு ஆரம்பிக்கப்பட்டு நெல்லியடி வரை நடைபெறவுள்ளதாக் தெரிவிக்கப்பட்டது. (ம-8)

# குறித்த திகதியில் வேதனம் கிடைப்பதில்லை

# பருத்தித்துறை இ.போ.ச. ஊழியர்கள் விசனம்

### வருமானம் பிராந்திய அலுவலகத்துக்கு மாற்றப்பட்ட பின்னர் நிலைமை

*வடமராட்சி,ஓக.24*

*பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவின் நாளாந்த வருமானம் பிராந்திய அலுவலகத்துக்கு மாற்றப்பட்ட பின்னர் ஊழியர்களுக்கான மாதாந்த வேதனம் குறித்த திகதியில் கிடைப்பதில்லை என்று ஊழியர் தொழிற்சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.*

*இதனால் சாலை ஊழியர்கள் மிகுந்த நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

இது தொடர்பாக "போக்குவரத்து ஊழியர் சங்கத்தின் பருத்தித்துறைக் கிளை ஊழியர்கள் அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்துள்ளனர்" என்ற தலைப்பில் பத்திரிகைகளுக்கு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை போக்குவரத்துச் சபை பருத்தித்துறைச் சாலை ஊழியர்கள் தமக்குரிய வேதனத்தை குறித்த திகதிகளில் வழங்கப்படாமையால் தமது அன்றாடத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது ஒரு மனித உரிமை மீறல் என்றும் தொழிற்சங்கத் தலைவரிடம் முறையிட்டு இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டோம்.

இதற்கமைய 21 ஆம் திகதி தொழிற்சங்கத் தலைவர், சாலை முகாமையாளர் ஆகியோரின் முன்னிலையில் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இதன்போது அந்தந்த மாதாந்த வேதனத்தைக் குறித்த திகதிகளில் வழங்குமாறும் தவறும் பட்சத்தில் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவோம் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்த நிலையில் ஊழியர்கள் வங்கிகளில்தமது சொந்தத் தேவைக்காக பெற்ற கடன்களை குறித்த திகதிகளில் செலுத்த முடியாமலும் அன்றாட தேவைகளுக்காக கடைகளில் பொருள் கொள்வனவு செய்த கடனை செலுத்த முடியாமலும் பெரும் பாதிப்புகளுக்கு ஆளாகியுள்ளனர்.

இதனால் கடன் பெற்றுக் கொண்டோர் மத்தியில் எமது நன்மதிப்புக் குறைவதுடன் சபையின் நற்பெயரும் குறைவடைகின்றது.

இது போன்ற மற்றும் சில பிரச்சினைகள் குறித்த திகதிகளில் வேதனத்தை வழங்க முடியாதவிடத்து எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எமது பருத்தித்துறை சாலையில் இதுவரை காலமும் அந்தந்த மாதத்துக்குரிய வேதனம் குறிக்கப்பட்ட திகதிகளில் வழங்கப்பட்டு வந்துள்ளது.

எமது சாலையின் நாளாந்த வருமானத்தைப் பிராந்திய அலுவலகத்துக்கு மாற்றிய பின்னரே இவ்வாறான நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

எமது சாலையின் நாளாந்த வருமானத்தை எமது சாலையின் வைப்பில் இருந்தால் இவ்வாறான நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்காது.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-8)

## மூத்த ஊடகவியலாளர் சங்கர் காலமானார்



யாழ்ப்பாணம், ஓக.24

மூத்த ஊடகவியலாளரும், தமிழின உணர்வாளரும், அரசியல் ஆர்வலரும், சமூகப்பற்றாளரும் அச்சுத்துறை நிர்வாகியுமான இ.சங்கர் நேற்றிரவு தமது எழுபத்தைந்தாவது வயதில் காலமானார். அவர் கடந்த சில நாள்களாக யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

தமது இளவயதில் சென்னையில் கல்வி கற்ற காலத்திலேயே, அரசியல் நாட்டம் கொண்டிருந்த இவர், 1956 ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் செயலாளராகத் துடிப்புடன் செயற்பட்டவர்.

தமிழரசுக் கட்சியின் சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரியராகவும் பின்னர் வீரகேசரியிலும் பணியாற்றினார். 1983 ஆடிக் கலவரத்தின் பின்னர் யாழ்ப்பாணம் வந்த அவர் இந்து சாதனம் பத்திரிகையில் ஆசிரியர் பீடத்தில் இணைந்துகொண்டார்.

சில காலத்தின் பின்னர் யாழ். வண்ணார்பண்ணை செட்டியார் அச்சகத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்தினார். பின்னர் பாரதி பதிப்பகத்தை நிறுவினார்.

பாடசாலைகள், ஆசிரியர்கள் மற்றும் கல்விப் புலத்தைச் சேர்ந்த பல தரப்புகளுடனும் நெருங்கிய தொடர்புகளை பேணிவந்தார். சமூக மற்றும் கல்விசார் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவியவரும் ஆவார். அவர் தமது இரு புதல்வர்களை விட்டுச் செல்கிறார்.

ஊடகவியலாளர்களுடனும் ஊடகத்துறைசார் நிறுவனங்களுடனும் மிக நெருங்கிய தொடர்புகளை இறுதிக் காலம் வரை பேணி வந்தார். உதயன் பத்திரிகை குழுமத்தின் நெருங்கிய அபிமானியும் ஆதரவாளரும் ஆவார்.

அவரது இறுதிக்கிரியைகள் நாளை மு.ப. 10 மணிக்கு ஆனைப் பந்தியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். (அ)

## சீன வர்த்தகக் கண்காட்சிக்கு யாழ். வர்த்தகர் பயணம்

யாழ்ப்பாணம், ஓக.24

சீனாவில் நடைபெறவுள்ள சீன கன்ரோன் வர்த்தகக் கண்காட்சிக்கு யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கத்தின் சார்பில் வர்த்தகப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர். எனவே இதற்கு செல்ல விரும்பும் வர்த்தகர்கள் தமக்கான பதிவுகளை யாழ். வணிகர் கழகத்தில் மேற்கொள்ளுமாறு வணிகர் கழகத் தலைவர் இ.ஜெய்சேகரம் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 4 ஆம் திகதி இக் கண்காட்சி சீனாவில் நடைபெறவுள்ளது. எனவே இதில் பங்குகொள்ள விரும்பும் வர்த்தகர்கள் பிரயாண விவரங்கள் தொடர்பில் வணிகர் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

(16)

## பஸ் மோதியதில் முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ்.பஸ் நிலையத்தில் வைத்து அரச பஸ் மோதியதனால் இரண்டு கால்களும் முறிந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்ட வயோதிபர் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் பிற்கல் இடம் பெற்றது. சம்பவத்தில் பண்டத்தரிப்பு, வடலியடைப்பைச் சேர்ந்த நாகலிங்கம் பாலேந்திரன் (வயது 70) என்பவரே மரணமானவராவார்.

யாழ். - கொழும்பு சேவையில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்ஸே வயோதிபரை மோதியதாகத் தெரிவித்து அதன் சாரதியான தென் பகுதியைச் சேர்ந்தவரை பொலிஸார் கைது செய்து அவ்விடத்திலிருந்து பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகச் சென்று வீடு செல்வதற்காக யாழ்.பஸ் நிலையம் சென்ற போதே அங்கு பஸ் மோதியதில் அவரது இரண்டு கால்களும் முறிந்தன.

வைத்தியசாலையில் கிசிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் இரவு அவர் உயிரிழந்தார். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். உடற் கூற்றுப் பரிசோதனை யின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(16-4)

## குமுதினி குணமடைந்தாள்

யாழ்ப்பாணம், ஓக.24

நெடுந்தீவுக்கான அரச படகு குமுதினி நேற்று வியாழக்கிழமை வழமையான சேவைக்கு வந்தது.

நீண்டகாலம் பழுதடைந்ததன் காரணமாக ஊர்காவற்றுறைக்குக் கொண்டு செல்லப்பட்ட இந்தப் படகு பல தடவைகள் திருத்தம் செய்தபோதும் தொடர்ந்தும் பழுதாகிக் கொண்டிருந்ததால் ஒரு மாதத்துக்கு மேலாக சேவையை வழங்க முடியாமல் இருந்தது.

சுமார் 50 வருடங்களுக்கு மேலாகப் பாவனையில் உள்ளதால் அடிக்கடி பழுதடையும் இந்தப் படகுக்குப் பதிலாக இதேபோன்ற இரண்டு படகுகளையாவது கட்டி நெடுந்தீவு சேவைக்கு விட வேண்டும் என்பதே மக்களது எதிர்பார்ப்பு. (ம-7)

## பொலிஸ் நடமாடும் சேவை சன்மார்க்க வித்தியாலயத்தில்

யாழ்ப்பாணம், ஓக.24

யாழ்.பொலிஸார் இலவச நடமாடும் சேவை ஒன்றை நாளை சனிக்கிழமை நடத்தவுள்ளதனால் பொதுமக்கள் அதில் கலந்துகொண்டு பயன் பெறுமாறு யாழ்.பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

யாழ். மணிக்கூட்டு வீதியிலுள்ள ஜே/80 கிராம அலுவலர் பிரிவில் உள்ள யாழ்.சன்மார்க்க வித்தியாலயத்தில் முற்பகல் 9 மணி தொடக்கம் மதியம் ஒரு மணிவரை இந்தச் சேவை இடம்பெறவுள்ளது.

ஆள் அடையாள அட்டை, வாகன அனுமதி பத்திரம் உள்ளிட்ட ஆவணங்களை தவறவிட்டவர்கள் அது தொடர்பில் முறைப்பாடு செய்து முறைப்பாட்டுப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். அதனை வைத்து குறுகிய காலத்தில் தவறவிடப்பட்ட ஆவணங்களின் மூலப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள முறைப்பாட்டுப் பத்திரம் உதவும். தவிர, அன்றை தினம் மருத்துவ பரிசோதனை இடம்பெற்று இலவசமாக மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(16-4)



## கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், தேர்தல் நடைபெறும் மாவட்டங்களிலும் அரசு தன்னாலான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளது எனவும் குறிப்பிட்டார்.

அதேவேளை, தேர்தல் பிரசார நடவடிக்கையின்போது அரச வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன என எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு, அவை தற்போது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. இவ்விடயத்தில் ஜனாதிபதியும் கவனம் செலுத்தியுள்ளார் என்றார் அமைச்சர்.

இதற்கிடையில் கொழும்பு தேசிய நூதனசாலையில் பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டதன் பின்னணியில் அரசியல் உள்ளது என ஹெல உறுமய தெரிவித்துள்ள கருத்து தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு,

''அரசியல் பின்னணி இல்லை என்று நான் நம்புகின்றேன். மீண்டும் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படாமல் இருக்கும்வண்ணம் அரசு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அதேவேளை, குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பொருட்களும் மீளப் பெறப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## தமிழக மீனவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைக் கடற்படையினர் மீனவர்களை மீன் பிடிக்க விடாமல் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி விரட்டினர்.

இதனையடுத்து இராமேஸ்வரத்தைச் சேர்ந்த வழிவிட்டான், பாண்டி உள்ளிட்டோரின் 6 விசைப் படகுகளை மடக்கிப்பிடித்த இலங்கைக் கடற்படையினர், படகில் இருந்த விலையுயர்ந்த மீன்பிடி வலைகளை வெட்டிக் கடலில் வீசினர்.

மேலும் படகில் இருந்த மீனவர்கள் தவசி, ராமசாமி, அருளானந்தம் உள்ளிட்ட 20 மீனவர்களை கம்பு, கயிறு, கம்பியால் இலங்கைக் கடற்படையினர் சரமாரியாக தாக்கினர். அப்போது வலி தாங்க முடியாமல் மீனவர்கள் அலறி துடித்துள்ளனர். இனிமேல் எங்கள் கடல் எல்லைக்குள் மீன்பிடிக்க வரக் கூடாது என இலங்கைக் கடற்படையினர் எச்சரிக்கை செய்து மீனவர்களை விரட்டியுள்ளனர்.

இதன் பின்னர் 6 விசைப் படகுகளில் இருந்த மீனவர்கள் நேற்றுமுன்தினம் இரவோடு இரவாக இராமேஸ்வரம் கரைக்கு திரும்பினர் என தமிழக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

## பயங்கரவாதத்துக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்படவுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது அமைச்சரவையின் பேச்சாளரும், ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல இந்தத் தகவலை வெளியிட்டார்.

## அகாஷி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை இன்றைய தினம் யசூசி அகாஷி சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.கொழும்பு இரத்மலானையிலிருந்து விசேட விமானம் மூலம் பலாலிக்கு 9.30 மணியளவில் வந்தடையும் யசூசி அகாஷி தலைமையிலான குழுவினர் மு.ப. 10 மணிக்கு யாழ். ஆயர் இல்லத்தில் சர்வமதத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இதன் பின்னர் நண்பகல் 12.30 மணியளவில் உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சிக்கு செல்லவுள்ளார். (த)

## நல்லூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லூர் உற்சவம் குறித்து அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

இந்த ஆண்டு நல்லூர் உற்சவ காலத்தில் ஒரு கோடியே 9 லட்சத்து 76 ஆயிரத்து 763 ரூபா யாழ். மாநகர சபைக்கு வருமானமாகக் கிடைத்தது.

உற்சவம் குறித்த பத்திரிகைச் செய்திகள் உடனுக்குடன் கவனத்தில் எடுக்கப்பட்டு அவற்றுக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

கடைகள் டெண்டர்கள் மூலமே விநியோகிக்கப்பட்டன. சில கடைகள் தொடர்பில் உத்தியோகத்தர்கள் நடந்து கொண்ட விதங்கள் குறித்து முறைப்பாடு கிடைத்ததும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எதிர்காலத்தில் ஒவ்வொரு பகுதிகளாகக் கடைகளைப் பிரித்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 460 கடைகளை வழங்குவதற்கு வசதிகள் இருந்தபோதும் 205 கடைகளையே வழங்க முடிந்தது - என்றார். (உ-7)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரிட்டது. இவ்வாறு தி.மு.க. தலைவர் கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கையில் போர் நடந்தபோது நான் (கருணாநிதி) வாய் மூடிக் கொண்டிருந்தேன் என்று பழ.நெடுமாறன் குற்றம் சாட்டியுள்ளார்.

புலிகளுக்கு இடையே சகோதர யுத்தம் தூண்டிவிடப்பட்டதற்கும், அதனால் தளபதிகளும் மாவீரர்கள் பலரும் பலியாகி அந்தப் போரில் பின்னடைவு ஏற்பட்டதற்கும் நெடுமாறன் போன்றோர் அங்கும் இங்கும் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்ததுதான் காரணம் என்பதை நடுநிலையாளர்கள் நன்றாகவே அறிவர்.

நெடுமாறன் கூற்றின்படி நானாவது போரின்போது வாய் திறக்காமல் இருந்தேன் என்பது உண்மையாக இருக்கட்டும். ஆனால் முதல்வர் ஜெய்லலிதா சட்டப் பேரவையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக தீர்மானமே கொண்டு வந்தார். இலங்கையில் போர் தீவிரமாக நடைபெற்று தமிழர்கள் கொல்லப்பட்ட நேரத்தில், போர் என்றால் அப்பாவி பொது மக்கள் கொல்லப்படுவது சகஜம்தான் என்று ஜெயலலிதா சொன்னார். அவை நெடுமாறனுக்கு நினைவு இருக்கிறதா?

மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் என்னைச் சந்தித்தபோது, தனி ஈழம் தொடர்பாக டெசோ மாநாட்டில் தீர்மானம் கூடாது என்று வலியுறுத்தியதாகவும், அதனை நான் ஏற்றுக் கொண்டதாகவும் நெடுமாறன் கூறியிருக்கிறார். இது பொய். சென்னை வரும்போதெல்லாம் என்னைச் சந்திக்கும் வழக்கமுடைய சிதம்பரம் அன்றும் என்னை அப்படித்தான் சந்தித்தார். மாநாட்டுத் தீர்மானங்கள் தொடர்பாக என்னிடம் அவர் பேசவும் இல்லை. விவாதிக்கவும் இல்லை - என்று தெரிவித்துள்ளார்.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் கூறியதாவது:-

வடக்கில் இருந்து 28 பட்டாலியன்கள் கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளுக்கு நகர்த்தப்பட்டுள்ளன. அதாவது 2009ஆம் ஆண்டு முதல் 21,000 படையினர் வடக்கில் குறைக்கப்பட்டுள்ளனர்.

பலாலி இராணுவத் தளத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள காணிகள், வீடுகளில் கடந்த 20 முதல் 25 ஆண்டுகளாக மக்கள் இல்லை. அவர்களுக்கு வேறு இடங்களில் காணிகளையும் இழப்பீடுகளையும் அரசு வழங்கும்.

வடக்கில் உள்ள மக்கள் இப்போது ஜனநாயக உரிமைகளை அனுபவித்து வருகிறார்கள். அரசின் சேவைகளையும் அவர்கள் தடைகள் ஏதுமின்றி, சரிசமமாகப் பெற்று வருகிறார்கள். ஆனால் அங்கு இன்னும் புலிகள் ஆதரவு எச்சசொச்சங்கள் இருக்கின்றன. அத்தோடு குறுகிய இனவாதச் சிந்தனையுள்ள அரசியல் கட்சிகளும் காணப்படுகின்றன.

சந்தர்ப்பத்தைக் கொடுத்து விட்டால் அவர்கள் தற்போதைய அமைதியைக் கெடுத்துவிடுவார்கள். வடக்கில் இருக்கும் மக்கள் இனிமேல் தங்களை ஒதுக்கப்பட்டவர்களாகவோ புறக்கணிக்கப்பட்டவர்களாகவோ கருதத் தேவையில்லை.

இலங்கையர்களாக எமது கடமை, கடந்த காலங்களை அப்படியே ஒதுக்கி வைத்துவிட்டு எமது நாட்டின் பிரகாசமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதே.

மக்களை ஜனநாயகத்துக்கு மாறான வழிகளை நாடவைக்கும் சிறுமைப்படுத்தல்கள் குறித்த சந்தேகங்களோ, ஒதுக்கப்படுதல்களோ, இனங்களிடையே சமத்துவமற்ற தன்மைகளோ இனிமேல் இருக்காத நிலை ஏற்பட்டால்தான் நாட்டின் பிரகாசமான எதிர்காலத்தைக் கட்டி எழுப்ப முடியும். அப்போதுதான் பிரிவினைகளையும் தடுக்க முடியும் - என்றார் கோத்தபாய ராஜபக்ஷ. (உ-01)

## பசீர் துணிச்சல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் தனது பதவியை தூக்கி எறிந்திருப்பதன் மூலம் பசீர் தாம் நேர்மையான ஒரு தலைவர் என்பதை நிரூபித்துள்ளார். அங்குமிங்குமாக இரண்டு கால்களை வைத்துக் கொண்டு தடுமாறாமல், பயப்படாமல் ஒரு தெளிவான முடிவை அவர் எடுத்துள்ளார். இது முழு முஸ்லிம் சமூகத்துக்கும் அளிக்கப்பட்ட ஒரு கௌரவமாகும்.

அவர் பதவியில் இருந்து விலகினாலும்கூட தேர்தலின் பின்னர் மீண்டும் அரசுடன் இணைந்து செயற்படலாம். அதில் எந்தத் தடையுமில்லை. எவ்வாறாயினும், முஸ்லிம் மக்கள் மத்தியில் போலி முகம் காட்டும் அரசியல்வாதிகளுக்கு மத்தியில் பசீர் பதவியை இராஜிநாமா செய்து அவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்துவிட்டார்.

- என்றும் குறிப்பிட்டார் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

## அம்பாந்தோட்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் முடிவடைந்ததும் அது கொள்கலன்களை ஏற்றியிறக்க தெற்காசியாவின் முக்கிய கேந்திர நிலையமாக மாறும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேவேளை, மாத்தறை - கதிர்காமம் புகையிரதப் பாதையில் மாத்தறையிலிருந்து பெலியத்தை வரையான பகுதியைப் புனரமைப்பு செய்வதற்கும் சீனா நிதியுதவி வழங்கியுள்ளது.

இதற்கான முழுத் தொகையான அமெரிக்க டொலர் 278.2 மில்லியனில் சீன எக்சிம் வங்கி 200 மில்லியன் டொலர்களையும், அரசின் சலுகைக்கடனாக 508 மில்லியன் யுவான்களும் கிடைக்கப்பெறவுள்ளன. இந்தக் கடன் உடன்படிக்கையை மேற்கொள்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

## சேகுதாவூத் திடீர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பசீர் சேகுதாவூத் விலகிய பின்னணியில் கட்சிக்கெதிரான சில சக்திகள் செயற்பட்டிருக்கக் கூடுமென்றும், தேர்தல் காலத்தில் இப்படியான ஒரு வேலையைச் செய்து கட்சிக்குள் குழப்பம் இருப்பதுபோல் தோற்றுவிப்பது அவர்களின் சதி வேலையாக இருக்கலாமென்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பசீர் சேகுதாவூத் பிரதியமைச்சர் பதவியிலிருந்து விலகியதை அடுத்து நேற்றுமாலை ஏறாவூர் பிரதேசத்திற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் சென்றிருந்தார்.

முன்னதாக, கூட்டுறவு உள்நாட்டு வர்த்தகப் பிரதியமைச்சரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பசீர் சேகுதாவூத், தனது பிரதியமைச்சர் பதவியில் இருந்து விலகினார்.

அவர் தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்வுக்கு நேற்றுக்காலை அனுப்பினார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் ஆகியோருக்கும் கடிதங்கள் மூலம் அறிவித்தார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், ஆழ்ந்த சிந்தனையின் பின் பிரதியமைச்சர் பதவியில் இருந்து விலக மனச்சாட்சியின்படி முடிவு எடுத்துள்ளார் எனத் தெரிவித்துள்ள பசீர் சேகுதாவூத் -

பதவி விலகியதன் ஊடாக அரச வளங்கள் பாவிக்கப்படாத தூய்மையான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பிராக, எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த முடிவு, சமுதாயத்தையும் கட்சியையும் விட்டு விலகி, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியைப் பெறுகின்ற நோக்கமற்றவர் எனத் தன்னை நிரூபிக்கும் எனத் தான் நம்புகிறார் எனவும், தனது ஸ்தாபன ரீதியான அரசியல் நம்பகத் தன்மையையும், கட்சிக்கான தனது பங்களிப்பின் பெறுமானத்தையும் நிலை நிறுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளமையாலும், பிரதியமைச்சர் பதவியில் இருந்து விலகினார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பதவி விலகல் தொடர்பாக பசீர் சேகுதாவுத் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

கிழக்கு மாகாண சபைக்குத் தேர்தல் வியூகம் அமைப்பது தொடர்பிலான கட்சிக் கலந்துரையாடல் நடைபெற்றபோது ஒன்றில் அரச கூட்டணியுடன் சேர்ந்து தேர்தலில் போட்டியிட வேண்டும் அல்லாவிடின் எதிரணிக் கூட்டணியுடன் இணைந்து போட்டியிட வேண்டும். அப்போதுதான் இலங்கை முஸ்லிம்களின் அரசியல் அந்தஸ்தை நிரூபிக்கும் வகையில் கிழக்கில் ஒரு முஸ்லிம் முதலமைச்சரைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று நான் வாதிட்டிருந்தேன்.

அதுமட்டுமன்றி தனித்துக் களத்தில் இறங்குவதாக இருந்தாலும் நாம் வகிக்கும் அமைச்சுப் பதவிகளை தூக்கி எறிந்து விட்டு, தூய முஸ்லிம் காங்கிரஸாக கிழக்கில் போட்டியிட்டு முஸ்லிம்களுக்கு எந்தத்தடையும் அப்பழுக்கும் அற்ற உரத்தொலிக்கும் குரலாக மத்திய அரசிலும், மாகாணத்திலும் நாம் விளங்க வேண்டும் என்ற கருத்தையும் முன்மொழிந்திருந்தேன்.

இந்த வாதங்களுக்கும் முன்மொழிவுக்கும் அமைய தேர்தல் வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட நாள் தொடக்கம் இன்றுவரை, என் மனச்சாட்சி நடத்திய போராட்டத்தின் முடிவாகவே எனது பிரதியமைச்சர் பதவியை தூக்கி எறிந்தேன்.

அகமாகவும் புறமாகவும் நான் பதவியாசை கொண்டவன் என்றும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக முயற்சிக்கிறேன் என்றும் எனக்கெதிரான பிரசாரங்கள் முடுக்கி விடப்பட்டிருப்பதால், நான் அப்படியானவன் அல்லன் என்று நிரூபிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பதவிகளை மட்டும் பற்றிய பிரக்ஞையுள்ளவன் என்ற பிரசார சிறைக்குள்ளிருந்து என்னை விடுவிக்கும் கடப்பாடும் எனக்கிருக்கிறது.

நான் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியை பிரதி அமைச்சர் பதவி ஒன்றை 1994 இல் ஐக்கிய தேசியக் கட்சி எனக்கு வழங்குவதாக இருந்த நிலையில்கூட அதை நான் நிராகரித்திருந்தேன். ஏனெனில் தமிழ் மக்களுடைய அனுசரணையுடனேயே அன்று நான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பெற்றிருந்தேன். போராட்டத்திற்கு ஆதரவான மன நிலையில் இருந்த மக்களின் விருப்பத்துக்கு மாறாக தேசியக் கட்சியில் இணைந்து அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொள்வது எந்த வகையிலும் நியாயமற்றது என்ற எனது மனசாட்சியின் அடிப்படையிலேயே அதை நான் நிராகரித்திருந்தேன்.

1990களில் ஏற்பட்ட வன்முறையின் வெளிப்பாடுகளும், அரசியல் புரிந்துணர்வின்மையும் தொடர்ந்தும் தமிழ்த் தேசிய அரசியல் செய்ய முடியாத நிலைக்கு என்னைத் தள்ளின. ஐக்கிய தேசியக் கட்சியில் சேர மறுத்த நான் தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து வெளியேறி முஸ்லிம் தேசிய அரசியலில் ஈடுபடும் அவாவோடு, மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் தலைமைத்துவத்தை ஏற்று, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொண்டேன்.

2007 ஆம் ஆண்டு கட்சியின் முடிவுக்கமைய நான் வகித்த அமைச்சரவை அந்தஸ்தற்ற மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் பதவியை இராஜினாமா செய்தேன். 2008 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தல் அறிவிப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட அசாதாரணமான சூழ்நிலைகளின்போது நமது கட்சியின் இருப்பைப் பாதுகாப்பதற்காகவும் கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் அந்தஸ்தை நிலைநிறுத்துவதற்காகவும் அன்று நான் வகித்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தலைவருடனும், செயலாளர் நாயகத்துடனும் சேர்ந்து உதறிவிட்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டேன்.

தலைவரும், செயலாளர் நாயகமும் தேசியப்பட்டியல் மூலம் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக ஆனபோதிலும் நான் தொடர்ந்தும் நாடாளுமன்றத்தைவிட அதிகாரம் குறைந்த மாகாணசபையிலேயே எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தேன். புதிய அரசியல் சூழ்நிலைக்கேற்ப என்னைத் தகவமைத்துக் கொள்ள எனது இந்த பதவி விலகல் உதவும் என நம்புகிறேன்.

அத்துடன் முஸ்லிம் தேசிய அரசியலில் எந்த அதிகாரச் சார்புமற்று சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிட எனக்கு இந்தபதவி விலகல் வாய்ப்பளிக்கும் எனவும் நம்புகிறேன்.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அடுத்த சந்ததியின் நல்வாழ்வுக்காக இந்தத் தேர்தலில் வாக்களிப்போம்



## இலட்சியத்துக்காகப் போராடுவோம் என்கிறார் கோணேஸ்

திருகோணமலை,ஓக.24

எமது அடுத்த சந்ததி இந்த நாட்டில் எவ்வித இன்னல்களும் இன்றி நல்வாழ்வு வாழ்வதற்கு வழிவகுக்கும் வகையில் இந்தத் தேர்தலைப் பயன்படுத்தி இதன்மூலம் கௌரவமான அபிவிருத்திகளை ஏற்படுத்தும் வகையில் எமது இலட்சியத்துக்காகப் போராடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் கந்தவனம் கோணேஸ்வரன் கூறினார்.

இலிங்கநகர்ப் பகுதி மக்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது:-

தமிழர்களின் ஈழ விடிவுக்காக எங்கள் தலைமுறை இளைஞர்கள் தங்கள் ஆசாபாசங்களைத் துறந்து இன்னுயிரையே ஈந்தார்கள். பெண்கள், முதியவர்கள் என்று முள்ளிவாய்க்காலில் புதிய முகவுரை எழுதிச் சென்றார்கள். எனவே, எமது உறவுகளின் தியாகங்களை மனதில் கொண்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கரங்களை வலுப்படுத்த வேண்டியது மானமுள்ள ஒவ்வொரு தமிழனதும் கடமையாகும்.

எங்கள் பெற்றோர்கள், நாங்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதற்காகப் போராட்டத்தை ஆரம்பித்து துன்பங்களைச் சுமந்தார்கள். இப்போது நாங்கள் போராடுவது எமது வாழ்வுக்காக அல்ல. எமது அடுத்த தலைமுறையின் தலைநிமிர்ந்த வாழ்வுக்காக என்பதை நாம் மனதிற் கொண்டு கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கரங்களை வலுப்படுத்த வேண்டும். வடக்குக் கிழக்கு இணைந்த தாயகத்தில் எமது அடுத்த சந்ததியேனும் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்ற இலட்சியத்துடன் நாம் செயற்படுவோம். இவை நிறைவேற வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்வது தமிழர்களது தலையாய கடமையாகும் - என்றார். (ச-40)

### கல்கிசையில் ஒருவர் வெட்டிக் கொலை

கொழும்பு, ஓக.24

கல்கிஸையில் ஒருவர் வெட்டிப்படுகொலை செய்யப்பட்டுள்ளார். மேலும், அவரது மனைவி கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூரச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இரு குழுவினருக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறே இந்தச் சம்பவத்திற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்ப டுகிறது.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் வீட்டிற்குள் நுழைந்த 15 பேர் அடங்கிய குழுவொன்று வீட்டின் உரிமையாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியும் வெட்டியும் படுகொலை செய்துள்ளதுடன் அவரது மனைவி மீது தாக்குதல் நடத்தி காயப்படுத்தியதுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் இடமாற்றம்!

கொழும்பு, ஓக.24

அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டு அவர்களுக்குப் பதிலாக அப்பதவிகளுக்குப் புதிய பொலிஸ் உயரதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செய்த முறைப்பாட்டுக்கமைய பொலிஸ் திணைக்களம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது எனத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார் என்று மு.கா. பொதுச் செயலாளரும், எம்.பியுமான ஹசனலி நேற்றுத் தெரிவித்தார்.

அத்துடன், அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரேமலால் ரணகலவை அம்பாறைத் தேர்தல் தொகுதியில் மட்டும் தேர்தல் பணிகளில் ஈடுபடுமாறு பொலிஸ் திணைக்களம் அவருக்குப் பணித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் தேர்தல்கள் ஆணையாளருக்கும் கட்சிகளின் பொதுச் செயலாளருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடல் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் பக்கச்சார்பான முறையில் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என நாம் தேர்தல்கள் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்திருந்தோம். இந்த முறைப்பாடுகள் தொடர்பில் நீங்கள் என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளீர்கள் என நாம் தேர்தல்கள் ஆணையாளரிடம் கேட்டபோது,

அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்யட்சகரும் பக்கச் சார்பான முறையில் செயற்படுகின்றார் என நாம் செய்த முறைப்பாட்டுக்கமைய,

அம்பாறைமாவட்டசிரேஷ்ட பொலிஸ் அத்யட்சகர் பிரேமலால் ரணகலவை அம்பாறைத் தேர்தல் தொகுதியில் மட்டும் தேர்தல் பணிகளில் ஈடுபடுமாறும் பொலிஸ் திணைக்களத்தால் பணிப்பு விடுக்கப்பட்டுள்ளது எனத் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் திணைக்களமும், பொலிஸ் திணைக்களமும் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதோடு, கட்சிகளால் செய்யப்படுகின்ற முறைபாடுகளுக்கு அமையவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார் என ஹசனலி எம்.பி. தெரிவித்தார்.

தாம் செய்த முறைபாடுகளுக்கமைய தேர்தல்கள் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்குத் தாம் நன்றி தெரிவிக்கின்றார் எனவும் அவர் தெரிவித்தார்.



'அனைத்து இன மக்களும் சகல உரிமைகளையும் பெற்றுக்கொள்வதற்காக அணிதிரள்வோம்.' என்ற தொனிப்பொருளில் மனித உரிமை செயற்பாட்டுக்கான அமைப்பு திருகோணமலையில் நேற்று நடத்திய கையெழுத்து வேட்டையின் போது.


## தெல்லி இந்து இளைஞர் சங்க மூத்த உறுப்பினரும் அம்பாளின் அடித் தொண்டனுமாகிய இரவீந்திரன் அவர்களின் மறைவை ஒட்டிய கண்ணீர் அஞ்சலி.



அன்னை துர்க்கை தாயின்
தொண்டனாய்
அரும்பணி புரிந்த இரவீந்திரன் நீயே
இன்றோ அன்னை மகோற்சவ
நாளில்
இனிதே மறைந்தது ஏனோ சொல்வீரே
உன்னை நாங்கள் மறப்பது எப்படி?
உள்ளம் நொந்து அழுகிறோம்
அண்ணா
என்னதான் செய்வோம் எங்கள்
அன்னை
உன்னை அழைத்தான் என்றே
ஆறுவோம்.

தெல்லிப்பழை இந்து
இளைஞர் சங்கம்.

(சி/2432)(3.14)



## அந்தியேட்டி அழைப்பு



அமரர் திருமதி
தம்பையா நல்லபிள்ளை

மாந்தராய்
12.06.1937

தெய்வமாய்
10.08.2012

அன்புடையீர், கடந்த 10.08.2012 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்ப விளக்கு அமரர் திருமதி தம்பையா நல்லபிள்ளை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 25.08.2012 சனிக்கிழமை அன்று காலை 7 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

முக்கிய குறிப்பு:- எமது அன்பு தாயாரின் துயரச் செய்தி அறிந்து நேரில் வந்து பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று எமது அன்புத் தாயின் அந்தியேட்டி கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

தகவல்
திரு.திருமதி.குகா ஐயர்
குடும்பத்தினர்

3ஆம் சந்தி, கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு.

(c/2430)(9.14)

**Genesis Academy Lanka (Pvt) Ltd.,**
A BOI APPROVED COMPANY
National Franchisee for **UCMAS** MENTAL ARITHMETIC SRI LANKA
Corporate Office: No. 60/2, Hampden Lane, Wellawatta, Colombo-6
Mental Arithmetic Sri Lanka

**UCMAS அபாக்கஸ் மனக்கணிதப் பயிற்சிநெறி**

இளம் சிறார்களிடையே இயற்கையாகவே நிறைந்திருக்கும் கணக்கியல் மற்றும் பொது அறிவுத் திறனை மென்மேலும் கூர்மைப்படுத்தவென சீன நாட்டவர்களால் இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கண்டுபிடிக்கப்பட்டு, வளர்ச்சி கண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க அபாக்கஸ் என்று அழைக்கப்படும், மணிச்சட்டத்தைப் பயன்படுத்தி நுண்ணறிவை வளர்த்திடும் நவீன கல்வித்திட்டமே, **UCMAS.**

- 5 முதல் 13 வயது வரையான மாணவர்களுக்கு அபாக்கஸ் மணிச்சட்டத்தைப் பயன்படுத்தி கணக்கியலில் வேகமாகவும், துல்லியமாகவும் விடை காண்பதற்குப் பயிற்சிகள் வழங்கப்படும். உங்களது குழந்தைகளை இப் பயிற்சி நெறியில் இணைக்க விரும்புகிறீர்களா?......
- பயிற்சிநெறியைக் கற்பிக்க அவசியமான பயிற்சிகளைப் பெற்றுக் கற்பித்தலை மேற்கொள்வதற்கு நீங்கள் ஆர்வம் காட்டும் யுவதிகளா? (Course Instructors) (யாழ்ப்பாணம், வலிகாமம், தீவகம், கிளிநொச்சி, முல்லைத்தீவு)
- பயிற்சி நெறியைப் பொறுப்பெடுத்து, வலிகாமம், தீவகம், கிளிநொச்சி, முல்லைத் தீவுப் பகுதிகளில் நடாத்த விரும்புகிறீர்களா? (Franchise)

**Hotline:- 0773164399, 0772087698**

# மாணவனின் உயிரை பறித்தாள் கடல் அன்னை



ஒலுவில்,ஓக.24

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்கள் நான்கு பேர் ஒலுவில் கடலில் குளிக்கச் சென்றதில் ஒரு மாணவன் கடலில் மூழ்கி சடலமாக நேற்று வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

நேற்றுமுன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற இந்தத் துயரச் சம்பவத்தினால் ஒலுவில் பிரதேசத்தைச் சேர்ந்த அஸ்ரப் இஹ்ஜாஸ் முபாரக் (வயது19) என்ற மாணவனே உயிரிழந்தான்.

பழைய தபாலக வீதி, ஒலுவில்- 02 ஆம் பிரிவில் வசித்து வந்த இந்த மாணவன் உயர்தர விஞ்ஞானப் பிரிவில் மருத முனையில் கல்வி கற்று, இந்த முறை நடைபெற்று வரும் பரீட்சையையும் எழுதியுள்ளார்.

ஒலுவில் கடற்கரைப் பிரதேசத்தில் உயர்தரப் பரீட்சை எழுதும் இந்த மாணவர்கள் நான்கு போரும் கடலில் நீராடிய வேளை கடலலை மூலம் இழுத்துச் செல்லப்பட்டதை அங்கிருந்த மீனவர்களும், பொதுமக்களும் கண்டுள்ள னர்.

இதனையடுத்து மீன்பிடி படகு ஒன்றின் மூலம் சென்ற மீனவர்கள் மூன்று மாணவர்களைக் காப்பாற்றியதில் இருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர். அஸ்ரப் இஹ்ஜாஸ் முபார்க் உயிரிழந்தமையை அடுத்து ஒலுவில் பிரதேச மெங்கும் பெரும் சோகமாகவே காணப்படுகிறது. (ச)

# சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் தென்மராட்சி.

## பதவி வெற்றிடம்

### விற்பனைப் பிரதிநிதி சந்தைப்படுத்தல் முகாமையாளர் (தற்காலிகம்)

மேற்குறிப்பிட்ட பதவிக்கு தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தினை சங்க காரியாலயத்தில் பெற்று பூர்த்தி செய்து 'தலைவர் சாவகச்சேரி கால்நடை வளர்போர் கூட்டுறவுச் சங்கம், இல.11, இராமலிங்கம் வீதி, சாவகச்சேரி' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ 2012.09.10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். மேற்படி விண்ணப்பத்தினை தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விற்பனைப் பிரதிநிதி சந்தைப்படுத்தல் முகாமையாளர் (307/11) பதவிக்கான விண்ணப்பம் எனக்குறிப்பிடல் வேண்டும்.

பதவி: விற்பனைப் பிரதிநிதி (307/11) சந்தைப்படுத்தல் முகாமையாளர் (தற்காலிகம்)

சம்பள அளவுத்திட்டம்: 10450-100 x 10 - 110 x 10, 12550 (66/2006 இன்படி)

வயதெல்லை: 18- 45 வரை

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

அ. கூட்டுறவுப் பணியாளர் 12 ஆவது சம்பள அளவுத்திட்டம் தொடர்புபட்ட துறையிலான மேற்பார்வைமட்ட அல்லது இயக்கமட்ட பதவியொன்றில் இரண்டு (2) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 13ஆவது சம்பளத்திட்ட அடிப்படை பதவியொன்றில் நான்கு (4) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

ஆ. கூட்டுறவு அல்லாது பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த உயர்தரம் 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனமொன்றின் களஞ்சிய முகாமையுடன் தொடர்புடையதாக இரண்டு (2) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

மேலதிக தகைமைகள்:-

1. சந்தைப்படுத்தல் துறையில் அனுபவம்
2. சந்தைப்படுத்தல் முகாமை தொடர்பான கற்கை நெறி
3. கணினி அறிவு
4. ஆங்கிலத்தில் பேச, எழுத தெரிந்தவராக இருத்தல்

நிர்வாகத்தால் கோரப்படும் பிணை செலுத்தப்படல் வேண்டும். விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகள் இனைக்கப்படுதல் வேண்டும். பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும், சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

நிறுவனத்துடன் தற்போது கடமையாற்றுபவர்கள் நிறுவனத்தின் ஊடாக சிபார்சு செய்து விண்ணப்பிக்க வேண்டும்.

தலைவர்
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்
சாவகச்சேரி,
தென்மராட்சி.

(சி/9354)(3.14)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் பாலேந்திரன்

(இ.போ.ச. முன்னாள் சாலை பரிசோதகர்- காரைநகர்)

அளவெட்டியைப்பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பாலேந்திரன் நேற்று (23.08.2012) வியாழக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.
(சி/2599)(3.14)
தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### மாணிக்கம் அன்னம்மா

வடலியடைப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் அன்னம்மா நேற்று (23.08.2012) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து மாணிக்கத்தின் மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காயா வீதி, வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.
(22110)(9.14)
தகவல்
மகன் மா.புலேந்திரன்

## கண்ணீர் அஞ்சலி



### கந்தையா ரவீந்திரா

எமது கல்லூரியின் பாடசாலை அபிவிருத்தியில் முன்னின்று உழைத்தவரும் பாடசாலை மேம்பாட்டுக் குழுச் செயலாளரும் கந்தையா ரவீந்திரா அவர்கள் நேற்று (23.08.2012) வியாழக்கிழமை காலமா கிய செய்தி கேட்டு பாடசாலைச் சமூகம் ஆறாத்துயரில் ஆழ்ந்துள்ளது. அவரது பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்திருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை.
(சி/2431)(3.14)

## மரண அறிவித்தல்

### கந்தையா ரவீந்திரா (ரவி அண்ணா)

(யூரோவில் Project officer)

(மாரிசன் கூடல் கலப்பிராகிரி ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர், தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய நிர்வாக உறுப்பினர், DRC பட்டினிக்கெதிரான நிறுவன (முன்னாள் ஊழியர்)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், மாரிசன்கூடல் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ரவீந்திரா நேற்று (23.08.2012) வியாழக்கிழமை மு.ப 10.30 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் சுசீலா தேவியின் அன்புக் கணவரும் துரந்தரன், காலஞ்சென்ற சுவந்திரன் மற்றும் தபேந்திரன், லலிசாம்பவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் சாவித்திரியின் அன்பு மகனும் நடராஜா காலஞ்சென்றவர்களான மரகதவல்லியின் அன்பு மருமகனும், யோகேந்திரா, கிரியேந்திரா யோகலா, ரதிகலா ஆகியோரின் சகோதரனும், கதிர்காமநாதன் - சிவபாக்கியம் (சுவிஸ்), காமினிதேவி, விக்னேஸ்வரன், கோகிலாம்பாள், நாதாம்பாள், கிருஸ்ணமூர்த்தி, ஜோகாம்பிகை ஆகியோரின் மைத்துனரும், ராகவன், சத்தியா, சத்தியராம், கோமதி, லவக்குமாரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 24.08.2012 வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக மாரிசன்கூடல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாரிசன்கூடல், இளவாலை.
(22105)(3.14)
தகவல்:
மனைவி,பிள்ளைகள்.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# தேர்தலில் வெல்ல எதனையும் சொல்லும் நிலை இங்கு மாள்வது எப்போது...?

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் எந்தக் காணியும் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்படவில்லை. அதேவேளை தமிழ் மக்களின் காணிகளை அரசு ஆக்கிரமிக்கப் போவதுமில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறுவது போன்று நில ஆக்கிரமிப்பு எதனையும் அரசாங்கம் நடத்தவில்லை. வடக்கு, கிழக்கில் இதுவரை ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை இராணுவத்தினர் கைப்பற்றியதாகக் கூறப்படுவதில் எவ்வித உண்மையுமில்லை. அந்தப் பகுதிகளில் இராணுவ முகாம்களைத் தவிர எந்த நிலப்பரப்பும் ஆக்கிரமிக்கப்படவில்லை.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெருமா. அடுத்த மாதம் 8 ஆம் திகதியன்று நடைபெறவுள்ள மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் கள நிலைவரம் குறித்து கொழும்பில் மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்திய ஊடகவியலாளர்கள் மாநாட்டில் வைத்தே அமைச்சர் அழகப்பெருமா மேற்கண்டவாறு அடித்துக் கூறினார்!

கிழக்கில் நடைபெறும் மாகாண சபைத் தேர்தலுக்கான பிரசாரக் கூட்டங்களில் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் அரச ஆதரவுடன் அபகரிக்கப்படுவதாகப் பிரசாரம் செய்யப்படுவது மட்டும்தான் அமைச்சர் அழகப்பெருமாவுக்குத் தெரியும் போலிருக்கிறது.

கிழக்கில் மட்டுமன்றி வடக்கிலும் போர் முடிவுற்றதும் அதனால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களின் புனர்வாழ்வுக்கும், அந்தப் பிரதேசங்களின் புனரமைப்புக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அரசு அவ்வாறு செய்வதனைச் சுமார் ஒரு வருடத்துக்குப் பின்தள்ளி வைத்துவிட்டு, இராணுவ முகாம்களை வேகவேகமாக நிறுவி, இராணுவ மற்றும் கடற்படையினரை நிலைகொள்ளச் செய்வதிலேயே அதீத அக்கறை காட்டியது. கண்ணிவெடிகள் மற்றும் ஆயுதக் கழிவுகளைத் துப்புரவு செய்வதிலும் அக்கறை காட்டியதை மறைப்பதற்கில்லை.

பாதிப்புற்ற மக்களை மீளக் குடியமர்த்தும் பணிகளை இயன்றளவு விரைந்து செய்யவேண்டும் என்று அனைத்துலகத்தின் அழுத்தங்கள் அதிகரித்த பின்னரே, போரில் சிக்குண்டு, உயிர் போய் மீண்டுவந்த, பல விதத் தாக்கங்களைச் சுமந்து நின்ற மக்கள் மீது அரசின் கடைக்கண் பார்வை திரும்பியது.

போரின் பின்னரான புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் ஆரம்பத்திலிருந்தே மிகவும் மந்த கதியில் மேற்கொள்ளப்பட்டமை குறித்து அனைத்துலகத் தொண்டு நிறுவனங்களும், இங்குள்ள வெளிநாட்டுத் தூதரகங்களும் அடிக்கடி கொழும்பு அரசுக்கு நினைவூட்ட வேண்டிய தளநிலைமை நிலவியதை அரசாங்கமும் அதன் அமைச்சர்களும் வசதியாக மறந்திருக்கலாம். ஆனால் பாதிக்கப்பட்டு, நிம்மதி என்றால் என்ன என இன்றுவரை கேட்டுக்கொண்டிருக்கும் தமிழ் மக்களால் அவ்வாறு மறக்கமுடியாதே.

தமிழ் மக்களின் நிலப்பரப்புகள்- காணிகள் -பாதுகாப்புத் தேவைக்கெனக் கபளீகரம் செய்யப்பட்டுள்ளமைக்கு பின்வரும் உதாரணங்கள் வெறும் சிறு துளிகளே:

*யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் வடக்கிலும் வடமராட்சி கிழக்கிலும் மிகப்பெரும் நிலப்பரப்பு படைத்தரப்புக்குரிய உயர் பாதுகாப்பு வலயங்களாக அரசினால் மாற்றப்பட்டுள்ளன.

* முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களின் குடியிருப்புகள் அமைந்திருந்த அவர்களின் சொந்தக் காணிகள், கேப்பா புலவு கிராமத்தில் கொஞ்ச நஞ்சமல்ல, 5,000 ஏக்கர் நிலப்பரப்பு இராணுவத்தினரின் தேவைக்கென குறித்தொதுக்கப்பட்டுள்ளது.

* முல்லைத்தீவு மாவட்டத்தில், புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மந்துவில் பகுதியில் பெரும் நிலப்பரப்பு படையினரின் தேவைக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

* கிளிநொச்சி மாவட்டம், (இரணைமடு) கனகாம்பிகைக்குளப் பிரதேசத்தில் பல ஏக்கர் நிலப்பரப்பும், ஸ்கந்தபுரத்தில் 300 ஏக்கர்களும், சாந்தபுரம் பகுதியில் 100 ஏக்கர்களும், புளியம்பொக்கணை மற்றும் தர்மபுரம் பகுதிகளில் மொத்தம் 1,000 ஏக்கர் மிகப் பரந்த நிலப்பரப்பும் படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

*மன்னார் மாவட்டத்தில் மரமுந்திரிகைச் செய்கைக்குப் பெயர்பெற்ற கொண்டைச்சிப் பகுதியில் சிங்களப் பெரும்பான்மையின மக்களைக் குடியமர்த்தும் பணிக்கு அத்திபாரம் இடப்பட்டுவிட்டது.

* மன்னார் மாவட்டம் முள்ளிக்குளம் பிரதேசம், போர் முடிவுற்ற பின்னர் கடற்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் உட்படுத்தப்பட்டு கடற்படைத் தளமாக மாற்றப்பட்டுவருகிறது. காலாதிகாலமாக அங்கு குடியிருந்த தமிழ் மக்கள் மீண்டும் அந்தப் பிரதேசத்தில் குடியமர அனுமதிக்கப்படவில்லை.

* மன்னார் மாவட்டத்தின் தென்கரையோரப் பிரதேசங்களில் சிங்களவர்களைக்குடியமர்த்தும்முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்படுகின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்களது பூர்வீகக் காணிகளில் உத்தேசமாக் ஆகக் குறைந்தது 75 சதவீதம், பெரும்பான்மை இனத்தவர் குடியேற்றம் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் என்பவற்றால் கபளீகரம் செய்யப்பட்டதால். இந்த மாவட்டம், பெரும்பான்மையின மக்களின் பிரதேசம் என்றாகிவிட்டது என்பதே இன்றைய நிலை. தமிழர் தொடர் நிலப் பரப்பாக இருந்த அங்கு கல்லோயா அபிவிருத்தித் திட்டம் என்ற வர்ணப் போர்வையுடன் மேற்கொள்ளப்பட்டது காணிக் கபளீகரமாகக் காலூன்றி விட்டது.

சம்பூர் அனல் மின் நிலையப் பிரதேசத்தில் இருந்து 2006ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள், இன்னமும் மீளக்குடியமர்த்தப்படவில்லை. வேறு இடங்களில் வசிக்க மாற்று வசதி செய்து தரப்படும் என்ற ஆசை வார்த்தை வருடக்கணக்காகத் தொடர்கிறது.

நிலைமை இவ்வாறிருக்க, யதார்த்தம் இதுவாகவே இருக்க, வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்படவில்லை என்று அமைச்சர் அழகப்பெருமா தெரிவித்திருப்பது முழுப் பூசினிக்காயைச் சோற்றில் புதைப்பது போன்றதாகும். தேர்தல் காலம் வந்ததும், இல்லாத எதையும் உள்ளதாகக் கூறி வாக்கு வேட்டையாடுவது இலங்கை அரசியல் வாதிகளுக்குக் கைவந்த கலையே! ஆயினும் கிழக்குத் தேர்தலில் அரசு தரப்பு வென்றுவிட வேண்டும் என்பதற்காக, தமிழ் மக்கள் தங்கள் பக்கமே என்று காண்பிப்பதற்காக, தாம் போடும் பொய்க் கணக்குகளை உண்மையாக்க முயல்வது ஏற்றுக்கொள்ள முடியாதது மட்டுமன்றி அவை நின்று நிலைக்கவும் மாட்டா!

உள்ளதைச் சொல்வேன், சொன்னதைச் செய்வேன், நல்லதைச் செய்வேன் என்பதனை எமது நாட்டு அரசியல் வாதிகள் எப்போது ஏறெடுத்துப் பார்க்கப் போகிறார்களோ?!

# இலங்கையை இலக்கு வைத்தே இந்திய 'அக்கினி' ஏவுகணைகள்

## சிங்கள ஊடகம் தகவல்

அக்னி ரகத்தைச் சேர்ந்த நீண்டதூர ஏவுகணைகளை இலங்கையின் கேந்திர நிலைகளை இலக்கு வைத்து இந்தியா நிறுத்தியுள்ளதாக சிங்கள செய்தி ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்கள், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம், இரத்மலானை, மற்றும் மத்தால விமான நிலையங்கள், இராணுவத் தலைமையகம், புத்தளம் அனல் மின்நிலையம். கெரவலப்பிட்டிய- களனிதிஸ்ஸ மின்நிலையங்கள் உள்ளிட்ட பல கேந்திர நிலைகளை இலக்கு வைத்தே இந்திய ஏவுகணைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த வழிகாட்டுதல் தொழில்நுட்ப ஏவுகணைத் திட்டத்தின் கீழ் இந்த அக்னி ஏவுகணைகள் தற்போது மேம்படுத்தப்பட்டுள்ளன.

இதன் மூலம் 1000 தொடக்கம் 2000 கிலோ எடையுள்ள அணுவாயுதத்தைச் சுமந்து கொண்டு 1000 தொடக்கம் 8000 கிலோ மீற்றர் வரை சென்று தாக்கும் வகையில் அக்னி 5 ஏவுகணை விரிவாக்கப்பட்டுள்ளது.

அக்னி 5 ஏவுகணை மூலம் சிறிலங்கா உள்ளிட்ட தெற்காசியாவில் உள்ள எந்தவோர் இலக்கையும் தாக்கமுடியும்.

ஈரான், பாகிஸ்தான், ஸ்ரீலங்கா, பங்களாதேஷ், மியன்மார் வழியான சீனாவின் விநியோகப் பாதையை துண்டிப்பதற்கு அமெரிக்காவும் இந்தியாவும் இரகசியமாக இணைந்துள்ளன.

பாகிஸ்தான் மற்றும் சீனாவிடம் இருந்து ஏவுகணைத் தாக்குதல்களைத் தடுப்பதற்கான பாதுகாப்பு கட்டமைப்புகளையும் இந்தியா விருத்தி செய்து வருகிறது என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (3)

# ஆஸி. செல்ல முயன்ற நால்வருக்கு மறியல்

வடமராட்சி, ஓக. 24

வடமராட்சி கிழக்கு, தாளையடியில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாகப் பயணிக்க முயன்ற 4 பேரையும் இருவாரகாலம் விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த 4 பேரும் தாளையடி கடற்கரையில் இருந்து 4 கடல் மைல் தொலைவில் வைத்து வள்ளம் ஒன்றில் பயணித்த வேளை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

இவர்களை விசாரணை செய்த பருத்தித்துறைபொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் பதில் நீதிவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் முற்படுத்தினர். நான்கு பேரையும் இருவாரகாலம் விளக்க மறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

பருத்தித்துறை மற்றும் திருகோணமலையைச் சேர்ந்த இந்த நால்வரும் கடந்த 16 ஆம் திகதி அதிகாலை 12.04 மணிக்கு கைது செய்யப்பட்டிருந்தனர். (ம-8)

# தென்மராட்சியிலும் குடிதண்ணீர் தட்டுப்பாடு

தென்மராட்சி, ஓக. 24

தென்மராட்சி பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியினால் பல இடங்களில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் குடிதண்ணீருக்காக மக்கள் தூர இடங்களுக்குச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடும் வறட்சியால் பல கிணறுகளில் நீர் வற்றியதால் பொது மக்கள் தமது அத்தியாவசிய தேவைகளுக்கும் நீரின்றி தவிக்கின்றனர்.

பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளுக்கு தண்ணீர் இல்லாத நிலையில் வீடுகளில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்குத் தண்ணீர் வைப்பதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதேவேளை, விவசாய நிலங்களில் உள்ள குளங்கள் அனைத்தும் நீரின்றி காய்ந்து வறண்டு காணப்படுகின்றன. மேய்ச்சலுக்காக விடப்பட்ட கால்நடைகள் நீருக்காக அலைகின்றன.

இதேவேளை, தென்மராட்சி தெற்கில் உள்ள ஆயிரத்து 800 இற்கு மேற்பட்ட ஏக்கர் வயல் நிலங்களில் உள்ள குளங்கள் நீரின்றிக் காணப்படுவதால் அந்தப் பகுதியில் கட்டாக்காலியாக அலையும் மாடுகள் நீரின்றி இறக்கும் நிலையில் உள்ளன. (ம-9)

# சுகாதார விஞ்ஞான அலகுக்கு ரூபா 50 மில்லியனில் கட்டடம்

## விரைவில் திறந்துவைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்துடன் இணைக்கப்பட்டுள்ள சுகாதார விஞ்ஞான அலகுக்கு 50 மில் லியன் ரூபா செலவில் மூன்று மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இக் கட்டடம் அடுத்த மாதம் திறந்து வைக்கப்படும் என்று பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்குப் பின்புறமாக பல்கலைக்கழக மைதானத்தை அண்மித்து இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

சுனாமித் திட்டத்தின் கீழ் குவைத் அரசால் வழங்கப்பட்ட நிதியின் மூலமாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக மருத்துவமாணவர் விடுதி நிர்மாணிக்கப்பட்டது. அதன் எஞ்சிய தொகையான 50 மில்லியன் ரூபாவை இலங்கை அரசின் பணிப்புக்கு அமைய இணைந்த சுகாதார விஞ்ஞான அலகு ஒன்றை நிர்மாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதனடிப்படையில் இந்த மூன்று மாடிக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ பீடத்தில் இந்த அலகுக்குத் தனியான இடம் இல்லாமையால் யாழ்.பலாலி வீதியில் உள்ள இரண்டு தனியார் வீடுகளிலேயே வாடகை அடிப்படையில் இந்த அலகு இயங்கி வருகிறது.

அங்கு மூன்று பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 150 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடம் விரைவில் திறந்து வைக்கப்படும் பட்சத்தில் மாணவர்களுக்கு அது பயனுள்ளதாக அமையும் என்று மேலும் சுட்டிக்காட்டப்பட்டது. (ம-4)

# உரமானியப் படிவத்தை நிரப்ப அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 24

உரமானியப் படிவத்தை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து வலி.தென்மேற்கு விவசாயிகளும் பூரணப்படுத்தி வழங்க வேண்டும்.

இதற்கான படிவங்களை கமநல சேவை நிலையங்களிலும்- விவசாய சம்மேளன காரியாலயங்களிலும் பெற்று பூரணப்படுத்துங்கள்.

யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் க.முதலியார் இவ்வாறு தெரிவித்தார்.

வலி.தென்மேற்கு பிரதேச பெரும்போக நெற்செய்கை தொடர்பான அபிவிருத்திக் கூட்டம் சண்டிலிப்பாய் கமநலசேவைகள் நிலையத்தில் இடம்பெற்றது.

உரமானிய படிவம் தற்போது யாழ்.மாவட்டத்தில் சகல விவசாய சம்மேளனங்கள் ஊடாகவும் வழங்கப்படுகின்றன.

இந்தப் படிவங்களை காலதாமதம் செய்யாது விவசாயிகள் உடன் பூரணப்படுத்தி அந்தந்த சம் மேளனங்களில் ஒப்படைக்க வேண்டும்.

இதன் மூலம் விரைவாக உரமானியங்களை இரு கட்டங்களாக வழங்கி உதவலாம் என்று அவர் மேலும் கூறினார். (ம-41)

# வலி.வடக்கு மக்களுக்கு அடிப்படை வசதிகள்

யாழ்ப்பாணம், ஓக.24

வலி.வடக்கில் மீளக்குடியமர்வு செய்யப்பட்ட மக்களுக்கான அடிப்படைத் தேவைகளைபெற்றுக்கொடுக்க யுனிசெப் நிறுவனம் முன்வந்துள்ளது.

யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் செய்யப்படவுள்ள வேலைத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் வலி.வடக்குப் பிரதேச சபை மண்டபத்தில் பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

வலி.வடக்கில் மீளக்குடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் சரியாகப் பெற்றுக்கொடுக்கப்படாத நிலையில் யுனிசெப் நிறுவனம் மலசலகூடம், பொதுக்கிணறு என்பவற்றை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளன.

இதற்கமைவாக கூவில், சேந்தாங்குளம், வலித்தூண்டல் கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட 25 பயனாளிகளுக்கு மலசலகூடங்களும் தெல்லிப்பழை, மாவிட்டபுரம், வித்தகபுரம் ஆகிய கிராமங்களின் ஜே/288, ஜே/231, ஜே/223 கிராம சேவகர் பிரிவுகளில் 10 பொதுக் கிணறுகளும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

குடிதண்ணீர் மற்றும் மலசல கூட வசதிகளால் அல்லற்படும் குடும்பங்களுக்கு இதன் மூலம் தீர்வு காணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-14-36)

# வவுனியா தமிழ்ச் சங்கத்தின் நாயன்மார் நால்வர் விழா

**வைரவபுளியங்குளம் ஆலய மண்டபத்தில்**

வவுனியா, ஓக. 24

வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்தும் நாயன்மார் நால்வர் விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா வைரவபுளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலய கலா மண்டபத்தில் தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய நாயன்மார்கள் நால்வரின் திருவிக்கிரகங்கள் ஆலயத்தில் இருந்து விழாமண்டபத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டதும் விழா முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும். சிவஸ்ரீ சி.திவாகரக் குருக்கள் திருவடிவழிபாடு நிகழ்த்துவார். க.குலேந்திரன் திருமுறை ஓதுவார். தேசமான்ய சுந்தரம் குமாரசுவாமி தம்பதிகள் மங்களவிளக்கேற்றுவர். திருமதி.சிவவதனி பரந்தாமன் தமிழ் வாழ்த்துப் பாடுவார். வவுனியா தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் வை.சத்தியநாதன் தொடக்க உரை ஆற்றுவார்.

வவுனியா மெய்கண்டார் ஆதின குருமகாசந்நிதானம் சிவக்கொழுந்து சுவாமிகள் "வையகம் துயர் தீர்க்கவே" எனும் பொருளில் சிறப்புரையாற்றுவார். அதனைத் தொடர்ந்து ''நால்வர் நற்றமிழ்'' எனும் பொருளில் இடம்பெறும் கருத்தரங்கத்திற்கு வவுனியா சேக்கிழார் மன்றத்தலைவர் க.ஜயம்பிள்ளை நடுவராகக் கடமையாற்றுவார். சம்பந்தர் தமிழ்பற்றி சிவ.கஜனும் அப்பர் தமிழ் பற்றி ல.சதீஸ்குமாரும் சுந்தரர் தமிழ் பற்றி ஆ.லோகேஸ்வரனும் மணிவாசகர் தமிழ் பற்றி எஸ்.ஸ்ரீனிவாசனும் உரையாற்றுவார்கள்.

''நால்வரும் சந்தித்தால்'' எனும் பொருளில் வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்கள் நாயன்மார்களாக வேடம் புனைந்து உரையாடலில் ஈடுபடுவர். (ஒ)

# வன்னியில் கடுமையான வறட்சி ஆயிரக்கணக்கானோர் பாதிப்பு

**தண்ணீர் இல்லாத பிரதேசங்களில் பவுஸர் மூலம் அங்கு தண்ணீர் விநியோகம் செய்து வருகின்ற போதிலும் நிலைமை சிரமமாக இருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.**

கிளிநொச்சி, ஓக. 24

வன்னியில் ஒருபோதும் இல்லாத வகையில் இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் 30 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் வன்னி மக்கள் தண்ணீருக்காக தூர இடங்களுக்கு அலைய நேரிட்டிருக்கின்றது. வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு பவுஸர்கள் மூலம் தண்ணீர் விநியோகம் மேற்கொண்டு வருகின்றது. இருப்பினும் போதிய அளவு நீரைப் பெறமுடியாதிருப்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வன்னியில் மல்லாவி போன்ற பகுதிகளிலும் தண்ணீருக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுவதாகவும், இதனால் பணம் செலவழித்து தூர இடங்களில் இருந்து தண்ணீரைப் பெற வேண்டியிருப்பதாகவும் அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் பூநகரி பிரதேசத்தில் வறட்சியினால் கிணறுகள் வற்றியிருப்பதுடன் பல கிணறுகள் உவர் நீராகியிருப்பதனால் அங்கு நிலைமை மோசமாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 4 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று அந்தப் பகுதி மக்கள் தண்ணீர் எடுத்துவர வேண்டியுள்ளது.

பவுஸர் மூலம் அங்கு தண்ணீர் விநியோகம் செய்து வருகின்ற போதிலும் நிலைமை சிரமமாக இருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் மன்னார் மாவட்டத்தின் பெரிய குளமான கட்டுக்கரைக்குளம் நீரின்றி வற்றியிருக்கின்றது. இதனால் அதன் கீழுள்ள பெரும் எண்ணிக்கையான குளங்களும் வற்றிக்கிடக்கின்றன.

அந்தப்பகுதியில் 1400 ஏக்கர் பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டிருக்கின்றது. நன்னீர் மீன்பிடி தொழில் பாதிக்கப்பட்டிருப்பதனால் சுமார் 750குடும்பங்கள் வறுமை நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் மன்னார் மாவட்ட உதவிப் பணிப்பாளர் மொகமட் ரியாஸ் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் வறட்சி நிவாரண நடவடிக்கைகளுக்கென 39 லட்சம் ரூபா நிதி அரசினால் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அந்த நிதியைப் பயன்படுத்தி வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்படுவதாகவும் மன்னார் மாவட்டத்தின் இடர் முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் எஸ்.சுகுணதாஸ் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வறட்சியினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள துணுக்காய்ப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருப்பதாக துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் செல்லையா அமிர்தலிங்கம் தெரிவித்தார். (எ)

# முருங்கை மர உற்பத்தியில் வவுனியா விவசாயத் திணைக்களம்

**வவுனியாவில் ஒரு கிலோ முருங்கைக் காய் 300 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.**

வவுனியா, ஓக. 24

வவுனியாவில் முருங்கை மர உற்பத்தியை அதிகரிக்க வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதிப் பணிப்பாளர் சகிலாபானு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்து முருங்கைக்காயை நம்பி இருந்த வவுனியா மக்களுக்கு வவுனியாவிலேயே உடன் முருங்கைக்காயை பெறக்கூடிய வகையில் முருங்கை மர உற்பத்தியை அதிகரிக்க வவுனியா விவசாயத்திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

வவுனியாவில் ஒரு கிலோ முருங்கைக்காய் 300 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. வழமையாக முருங்கை மரங்கள் தடியை நட்டு முருங்கைக் கன்றுகளை உற்பத்தி செய்கின்றோம்.

குறுகிய காலத்தில் மிகவும் அடர்த்தியாக வளர்ந்து அதிகளவு காயை இந்த முருங்கை மரங்கள் வழங்க வல்லது. இந்த முருங்கை மருத்துவ குணங்கள் கொண்டதால் எதுவித செயற்கை மருந்தும் பயன்படுத்தாது உற்பத்தி செய்வது பற்றிய விளக்கத்தை வழங்க நாம் முன்வந்துள்ளோம்.

இந்த முருங்கை மரங்களைப் பெற்றுக் கொள்ள விரும்புவர்கள் எம்மிடம் தொடர்பு கொள்ள முடியும் என்றார். (எ-402)



மன்னார் மடு திருத்தலத்தில் அமைக்கப்பட்டுள்ள மடு தேவாலய உணவகத்தை மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை திறந்து வைக்கிறார். (எ-12)

## 70ஆயிரம் ரூபா தண்டம்

கிளிநொச்சி, ஓக. 24

கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளில் கசிப்பு மற்றும் கோடா என்பவற்றுடன் கைது செய்யப்பட்டவர்களுக்கு 70ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி செல்வாநகர் பகுதியில் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் கோடா வைத்திருந்த மற்றொருவரை கிளிநொச்சிப் பொலிஸார் கடந்த சனிக்கிழமை கைது செய்து நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதை அடுத்து குறித்த குற்றவாளிக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டது.

அதே நாளில் இரண்டு போத்தல் கசிப்பை வைத்திருந்த ஒருவரை கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்து இவரையும் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதை அடுத்து 20 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டது. மேற்படி குற்றவாளிகள் இருவரிடமும் 70 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டது. (எ-6)

# வறட்சியால் பாதிப்புற்ற மக்களுக்கு உதவி வழங்கக் கோரிக்கை

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள ஏனைய மாவட்ட மக்களுக்கு ஜனாதிபதியினால் வழங்கப்படும் உதவிகளைப் போன்று, கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மன்னார் மாவட்ட மக்களுக்கும் வழங்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் தன்னிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என்று மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி முகமட் றியாஸ் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் தற்போது நிலவுகின்ற கடும் வறட்சியால் விவசாயங்கள் பாதிப்படையும் நிலையில் உள்ளன. அதிகமான கிராமங்களில் குடிதண்ணீர் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. 1400 ஏக்கர் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 10,000 இற்கும் அதிகமான மக்களுக்கு குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

60 முதல் 70 நாள்களுக்குள் அறுவடை செய்யவுள்ள நெற்பயிரை பாதுகாப்பதற்காக குழாய்க் கிணறுகளை துப்புரவு செய்துதந்து நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்குமாறும் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, இடர் முகாமைத்துவ அமைச்சும் பொருளாதார அபவிருத்தி அமைச்சும் விவசாயத் திணைக்களமும் இணைந்து மக்களுக்கு குடிதண்ணீரை வழங்குவதற்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ-12)

## மின்சாரத்தை வழங்குமாறு வேண்டுகை

அக்கராயன், ஓக. 24

துணுக்காய் ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி, புத்துவெட்டுவான் கிராம மக்கள் மின்சார வசதியை ஏற்படுத்தித் தருமாறு துணுக்காய் பிரதேசசெயலரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

துணுக்காய் பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்கள் மின்சார வசதியை ஏற்படுத்திக் கொடுத்தால் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் எனத் தெரிவிக்கின்றனர்.

இதன் மூலமே அந்தப் பகுதிகளில் உள்ள மாணவர்களின் கல்வி தொடக்கம் தனியார் தொழில் நிறுவனங்கள் வரை சீராக இயங்க முடியும் என்று தெரிவிக்கின்றனர். (எ-18)

# பட்டாணிச்சூர் ஒழுங்கையூடான போக்குவரத்தில் மக்கள் சிரமம்

வவுனியா, ஓக. 24

பட்டாணிச்சூர் 3ஆம் ஒழுங்கை நீண்ட நாள்களாகச் செப்பனிடப்படாததால் போக்குவரத்தில் ஈடுபடுவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதியில் மன்னார் வீதியின் மூன்றாம் ஒழுங்கையே நீண்டகால மாகச் செப்பனிடப்படாமல் காணப்படுகின்றது.

இந்த வீதியின் மருங்கில் கழிவு நீர் வழிந்தோடுவதற்கான வாய்க்கால்களும் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றிலிருந்து எடுக்கப்பட்டுள்ள மண் மற்றும் பொருள்கள் வீதியில் போடப்பட்டுள்ளதால் போக்குவரத்தில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது மட்டுமல்லாது இந்த வீதி பல இடங்களில் குண்டும் குழியுமாகவும், கற்குவியல்களும் காணப்படுவதால் இரவு நேரங்களில் பயணம் செய்வோர் விபத்துக்களுக்கு உள்ளாகக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்தப் பகுதியால் பயணம் செய்யும் மக்களின் நலன் கருதி இந்த வீதியை உடன் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு அந்தப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-400)

## நெல் அழிவடையும் சூழல் ஏற்பட்டுள்ளது

அக்கராயன், ஓக. 24

அக்கராயன் குளத்தின் கீழ் பிந்திய விதைப்புகளில் ஈடுபட்டவர்களின் சிறுபோக நெற்செய்கை அழிவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

உரிய காலத்தில் நெல் விதைப்பில் ஈடுபட்ட விவசாயிகள் அறுவடையில் ஈடுபடும் நிலையில் ஒரு மாதம் பிந்திய விதைப்புகளில் ஈடுபட்ட விவசாயிகள் அழிவுகளை எதிர்கொள்ள வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. (எ-18)

## நூல் நிலையம் திறந்திருக்கும் நேரம் நீடிப்பு

வலி.தென்மேற்கு,ஓக.24

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன்கருதி வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் கீழ் இயங்கும் உப அலுவலகத்திலுள்ள நூல் நிலையம் திறந்திருக்கும் நேரம் ஒரு மணித்தியாலத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வழமையாக மாலை 5 மணிக்கு மூடப்படும் இந்த நூல் நிலையம் தற்போது 6 மணிக்கு மூடப்படுகின்றது.

தற்போது உயர்தரப் பரீட்சை இடம்பெற்று வருவதைத் தொடர்ந்து இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன்கருதி ஆனைக்கோட்டை உபஅலுவலகத்தில் இயங்கும் நூல் நிலையத்தில் வாசிப்பு நேரம் மாலை 5 மணியிலிருந்து 6 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

வாசிப்பு நேரம் நீடிக்கப்பட்டுள்ளதால் அநேகமான மாணவர்கள் நன்மையடைந்துள்ளார்கள் என்று நூலகப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (ம-115)

## தொண்டமனாறு கடல் நீரேரியில் தற்காலிக நடைபாதை பாவனைக்கு

வடமராட்சி, ஓக.24

செல்வச்சந்நிதி வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு பக்தர்கள் வந்து செல்வதற்கு வசதியாக தொண்டமனாறு கடல் நீரேரியில் குறுக்காக அமைக்கப்பட்டுள்ள தற்காலிக நடைபாதை நேற்றுமுன்தினம் நண்பகல் பக்தர்களின் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது.



பலாலி படைத் தலைமையகத்தின் அனுமதியுடன் வலி.கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் அ.உதயகுமார், வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ், சந்நிதி ஆலயத்தைச் சேர்ந்த சி.மாதவராஜா ஐயர் ஆகியோர் மேற்கொண்ட நடவடிக்கையால் கடல் நீரேரிக்கு ஊடாக இந்த நடைபாதை அமைக்கப்பட்டது.

இந்த நடைபாதையை அமைக்க இடையூறாக இருந்த மண் அணைகள், கற்கள் போன்றவற்றை அப்புறப்படுத்துவதிலும் நடைபாதைக்கான மண் அணைகளை ஏற்படுத்துவதிலும் பெரும் எண்ணிக்கையான படையினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். 30 வருட கால இடைவெளிக்குப் பின்னர் பதது அடி அகலம் கொண்டதாக அமைக்கப்பட்ட இந்தப் பாதை நடுவே நீர் ஓடுவதற்கு வசதியாக சுமார் 15 அடி நீளமுள்ள தற்காலிக பாலமும் அமைக்கப்பட்டுள்ளது.

தற்காலிக நடைபாதையில் இரவு வேளைகளிலும் சென்று வர வசதியாக பாதை வழியே மின்சார ஒளி வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தற்காலிக நடைபாதை ஊடாக மோட்டார் சைக்கிள், சைக்கிள்களையே கொண்டு செல்ல முடியாது எனவும் பெருந்திருவிழா நிறைவுற்றதும் இந்த நடைபாதை உடனடியாக அப்புறப்படுத்தப்படும் என்றும் கூறப்பட்டது. (ம-8-253)

## இயற்கைப் பசளைக்கு கிடைத்தது 'மவுசு'

யாழ்ப்பாணம், ஓக.24

நல்லூர் பிரதேச சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் இயற்கை பசளைக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

காரைக்காடு இந்து மயானத்துக்கு அருகில் உள்ள இந்த இயற்கைப் பசளை உற்பத்தி நிலையத்தில் பொதி செய்யப்பட்டு விற்பனை இடம்பெறுகின்றது.

இந்தப் பசளையை உள்ளூர் மற்றும் வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கையாளர் கொள்வனவு செய்வதில் அதிக கவனம் செலுத்தியுள்ளனர். குறிப்பாக நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் அகற்றப்படும் கழிவுப் பொருள்கள் இந்த முகாமைத்துவ நிலையத்தில் உள்ள இயந்திரங்கள் மூலம் பசளையாக மாற்றி விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## பப்பாசிச் செய்கையாளருக்கு விசைத் தெளிகருவிகள்

குறைந்த கடன் அடிப்படையில் விநியோகம்



யாழ்ப்பாணம், ஓக.24

தேசிய அபிவிருத்தி வங்கி யாழ்.மாவட்டத்தில் உள்ள பப்பாசிச் செய்கையாளருக்கு குறைந்த கடன் அடிப்படையில் தெளிகருவிகளை வழங்கியுள்ளது.

யாழ்.மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வின்போதே குறித்த பயனாளிகளுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன என்று யாழ். மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.ஸ்ரீபால சுந்தரம் தெரிவித்தார்.

விவசாயிகள் தமக்குக் கடன் அடிப்படையில் வழங்குமாறு கேட்டுக்கொண்டதற்கு அமைவாக 14 விவசாயிகளுக்கு இந்தக் கருவிகள் வழங்கப்பட்டன.

ஒவ்வொருவருக்கும் 16 ஆயிரம் ரூபா பெறுமதியில் குறைந்த வட்டியில் இவை வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் தற்போது பப்பாசிச் செய்கை 104 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் இடம்பெற்று வருகின்றது. ஆயிரத்து 400 விவசாயிகள் பப்பாசிச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

சராசரி விளைச்சல் ஹெக்ரெயர் ஒன்றுக்கு 30 மெற்றிக்தொன் கிடைக்கும். இந்தப் பப்பாசியில் வெண் மூட்டுப்பூச்சிகளின் தாக்கம் பெரிய பிரச்சினையாக உள்ளது.

இந்தத் தாக்கம் முதன் முதலாக 2009 ஆம் ஆண்டளவிலேயே இனங்காணப்பட்டது.

இந்தப் பூச்சியின் தாக்கம் சூழலுக்கு ஏற்படாத வகையில் கட்டுப்படுத்துவதற்கு அதன் மீது தெளி கருவி மூலமே தண்ணீர் வீச முடியும். இதனால் வெண் மூட்டுப் பூச்சி, நீரின் விசையால் இலகுவில் அகற்றப் படும்.

தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் இவ்வாறான ஒரு செய்கை முறை மேற்கொள்ளப்பட்டு வெற்றியளித்தது. இதனையடுத்தே பப்பாசிச் செய்கையாளருக்கு விசைத் தெளி கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)

## மக்களுக்குப் பாதுகாப்பான குடிதண்ணீர் சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டும்

### வலி. மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஓக.24

பாதுகாப்பான குடிதண்ணீர் பொதுமக்களுக்குக் கிடைப்பதை பிரதேச சபையும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் உறுதிப்படுத்தவேண்டும்.

உள்ளூராட்சி சபைகள் தங்கள் நிர்வாக பரப்பினுள் உள்ள சகல கிணறுகளுக்கும் குளோரின் வழங்கி உதவுவதுடன் அளவுப் பிரமாணப்படி அதனை பாவிப்பதற்கும் பிரதேச சபை உதவ வேண்டும். வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினரும் தொழில்நுட்பக் குழு தலைவருமான த.நடனேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

பாதுகாப்பான குடிதண்ணீர் பொதுமக்களுக்குக் கிடைத்திட உள்ளூராட்சி சபைகள் உதவ முன்வர வேண்டும் என்ற தொனிப் பொருளில் கருத்துக் கூறும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் 2 லட்சத்துக்கும் அதிகமான கிணறுகள் தற்போது பாவனையில் உள்ளன.

இந்தக் கிணறுகளின் தண்ணீரைக் குடிக்கும் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாவது குறித்த முறைப்பாடுகள் கிடைத்தவாறு உள்ளன.

உள்ளூராட்சி சபைகள், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எனப் பல தரப்பினரும் இந்த விடயத்தில் கவனம் எடுத்து பாதுகாப்பான குடிதண்ணீரை மக்கள் பெறுவதை உறுதிப்படுத்த வேண்டும்- என்றார்.

தீவகப் பிரதேசத்தில் நீர்நிலைகள் யாவும் வற்றியுள்ளதால் வெளியிடங்களில் இருந்து கொண்டு வரப்படும் குடிதண்ணீர் பரிசோதிக்கப்பட்டே மக்கள் பாவனைக்கு விடப்படவேண்டும்.

கடந்த வாரம் முதல் குடிதண்ணீர் இன்றிக் கால்நடைகள் இறக்கும் நிலை தீவகத்தில் அதிகரித்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை தீவகத்தில் குடிதண்ணீர் இன்றி 14 மாடுகள் வழிவழியே இறந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (ம-41)

### 'ஒரேஞ் ஜூஸ்' நிறத்தில் வலி.தெற்குக்கு குடிதண்ணீர்

சுன்னாகத்தில் இருந்து கந்தரோடைப் பகுதிக்கு நேற்று வரை வழங்கப்பட்ட குடிதண்ணீர் நிறம் மாறி ஒரேஞ் ஜூஸ் நிறத்தில் காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். தற்போது குடிதண்ணீர் பெறுவதில் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வரும் நிலையில் இவ்வாறு தண்ணீர் நிறம் மாற்றமடைந்து வருகிறது என்று வேதனை தெரிவிக்கின்றனர்.

இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வலி.மேற்குக்கு குடிதண்ணீர் விநியோகம் இந்தக் காரணங்களால் இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த விடயம் குறித்த தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் எந்திரி எஸ். செல்வகுமாரிடம் கேட்டபோது:- இந்தப் பிரச்சினை காரணமாக சுன்னாகம் மின்சார சபைப் பகுதியில் உள்ள கிணற்றில் இருந்து தண்ணீர்த் தாங்கிக்கு அடிக்கப்பட்ட நீர் முழுவதும் வெளியேற்றப்பட்டுள்ளது. தற்போது வேறு கிணற்றிலிருந்தே நீர் விநியோகம் இடம்பெறுகிறது. ஒரு சில குழாய்களூடாக சில நாள்களுக்கு நிறம் மாறி தண்ணீர் செல்வதற்கான வாய்ப்பு உள்ளது.- என்றார். (ம)

## சைக்கிள் திருடன் நகரில் மாட்டினான்

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ்.நகரில் சத்திரச் சந்திக்கு அருகில் கே.கே.எஸ் வீதியோரம் பூட்டி வைக்கப்பட்ட சைக்கிளைக் களவாட முயன்ற நபர் ஒருவரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பூட்டை உடைத்து சைக்கிளை களவாடிச் செல்ல முற்பட்ட சமயம் திருடன் மாட்டிக்கொண்டான் என்று சாட்சிகள் கூறினர். சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கடந்த வாரத்திலும் இந்தப் பகுதியில் ஒரு சைக்கிள் காணாமற் போயுள்ளதாக மக்கள் தெரிவித்தனர். (உ-17)

## ஏ-9 வீதி உயர்த்தப்பட்டதால் பள்ளத்தில் இணைப்பு வீதிகள்

பளை, ஓக.24

வீதி அகலிப்பின்போது ஏ-9 வீதி உயர்த்தப்பட்டதால் நான்கு கிராமங்களுக்குச் செல்லும் மக்கள் வாகனங்களை இந்த வீதியில் பயன்படுத்த முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இயக்கச்சி ஏ-9 வீதியிலிருந்து மாசார், கரந்தாய், முருகானந்தநகர், மல்வில் ஆகிய கிராமங்களுக்குச் செல்லும் பிரதான வீதியாக களுவில் வீதி உள்ளது.

ஒன்றரைக் கிலோ மீற்றர் நீளமான இந்த வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையிலும் மக்கள் சிரமங்களின் மத்தியில் தமது போக்குவரத்துக்கு இந்த வீதியைப் பயன்படுத்தி வந்தனர்.

ஏ-9 வீதி அகலிப்பு செய்யப்படும்போது உயர்த்தப்பட்டதால் சுமார் நான்கு அடிக்கு கீழிறங்கிய நிலைக்கு இந்த வீதி வந்துள்ளது.

இதனால் வீதியைப் பயன்படுத்தும் மக்கள் வாகனங்களில் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதனால் இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் பளைப் பிரதேச சபை மற்றும் உரிய அதிகாரிகளைக் கோரியுள்ளதாகத் தெரிவித்தனர் (ம-[illegible])

## சட்டவிரோதமாக கடல் அட்டை பிடித்தோர் மீது நடவடிக்கை

கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஓக.24

குருநகர் கடற்பகுதியில் சட்டவிரோதமாகக் கடல் அட்டை பிடித்த கடற்றொழிலாளர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று யாழ். கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

குருநகர் இறங்கு துறையூடாக கடல் அட்டை பிடித்துக் கொண்டு சென்ற கடற்றொழிலாளர்களை படையினர் பிடித்தனர்

கடந்த ஞாயிற்றுக்கிழமை குருநகர் இறங்குதுறையூடாக கடல் அட்டை பிடித்துக் கொண்டு சென்ற கடற்றொழிலாளர்களை பிடித்த படையினர் அவர்களைக் கடற்றொழில் நீரியல்வள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

கடல் அட்டையுடன் பிடிபட்ட இவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

குடாநாட்டு கடற்பகுதியில் இவ்வாறு சட்டவிரோதமாக கடல் அட்டை பிடிக்கும் கடற்றொழிலாளர் மீது கடற்றொழில் திணைக்களம் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளது.

அதனைவிட அரசால் தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-17)

## அஸாமில் மீண்டும் கலவரம்

### 2 பேர் சாவு

அஸாமில் மீண்டும் கலவரம் வெடித்ததைத் தொடர்ந்து 2 பேர் உயிரிழந்தனர். இது வரை நடைபெற்ற கலவரத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 80 ஆக அதிகரித்துள்ளது.

துப்ரி மாவட்டத்தின் பங்கல்டோபா பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது அடையாளம் தெரியாத கும்பல் துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதில் 2 பேர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட கலவரத்தில் 78 பேர் உயிரிழந்தனர். நிலைமை சீரடையும் நிலையில் தற்போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கலவரத்தைத் தொடர்ந்து துப்ரி பொலிஸ் துணை ஆணையாளர் குமுத் சந்திரா கலிதா மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர் என்று தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# '2 ஜி' ஊழல் விவகாரத்தில் திடீர் திருப்பம் பா.ஜ.கவின் அழுத்தத்தால் அரசுக்கு நெருக்கடி

டில்லி, ஓக. 24


'2ஜி' ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரத்தில் திடீர் திருப்பம் ஏற்பட்டுள்ளது. இது குறித்த விசாரணைக்காக நாடாளுமன்றக் கூட்டுக் குழு முன், நேரில் முன்னிலையாகி விளக்கம் அளிக்குமாறு பிரதமர் மன்மோகன் சிங், மத்திய நிதி அமைச்சர் சிதம்பரம் ஆகியோருக்கு அழைப்பு விடுக்க வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளதால், மத்திய அரசுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

ஸ்பெக்ட்ரம் ஒதுக் கீட்டில், 1.76 லட்சம் கோடி ரூபா அளவுக்கு முறைகேடு நடந்ததாக, மத்திய கணக்குத் தணிக்கை அலுவலகம், அறிக்கை தாக்கல் செய்தது. நாடு முழுவதும் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்திய இந்த விவகாரத்தில், தொலைத் தொடர்புத் துறை முன்னாள் அமைச்சர் ராஜா மற்றும் தொலைத் தொடர்புத் துறையின் சில அதிகாரிகள் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டு, பிணையில் வந்துள்ளனர்.

இந்த ஊழல் விவகாரம் குறித்து, பி.சி.சாக்கோ தலைமையிலான நாடாளுமன்றக் கூட்டுக் குழு விசாரித்து வருகிறது. இந்தக் குழுவில், லோக்சபா மற்றும் ராஜ்யசபாவைச் சேர்ந்த, நாடாளுமன்ற உறுப்பினர் 30 பேர் இடம் பெற்றுள்ளனர். காங்கிரஸ் சார்பில் சாக்கோ உட்பட, 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் குழுவில் உள்ளனர். நாடாளுமன்றக் கூட்டுக் குழு, தன் விசாரணை அறிக்கையை, இந்தாண்டு இறுதியில் தாக்கல் செய்யவுள்ளது.

இந்த நிலையில், ஸ்பெக்ட்ரம் விவகாரம் தொடர்பாக, யார், யாரிடம் விசாரணை நடத்துவது என்பதை இறுதி செய்வதற்காக, கூட்டுக்குழு கூட்டம், நேற்று முன்தினம் டில்லியில் கூடியது. இதில் பங்கேற்ற, பா.ஜ.க. உறுப்பினர்கள், ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு விவகாரம் தொடர்பாக, பிரதமர் மன்மோகன் சிங், நிதி அமைச்சர் சிதம்பரம் ஆகியோரிடமும், விசாரணை நடத்த வேண்டும். கூட்டுக் குழு முன், நேரில் முன்னிலையாகி விளக்கம் அளிக்கும்படி, இவர்களுக்கு அழைப்பு விடுக்க வேண்டும். பிரதமரின் முதன்மைச் செயலர் புலோக் சட்டர்ஜி, பிரதமரின் ஆலோசகர் டி.கே. ஏ.நாயர் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்க வேண்டும்' என்று வலியுறுத்தினர்.

இதற்கு, காங். உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத்தெரிவித்தனர். காங்கிரஸ் கட்சித் தலைவர்களை, நேரில் முன்னிலையாகி விளக்கம் அளிக்கும்படி வலியுறுத்தினால், ஏற்கனவே மத்திய நிதி அமைச்சர்களாக பதவி வகித்த, பா.ஜ.,வைச் சேர்ந்த ஜஸ்வந்த் சிங், யஷ்வந்த் சின்கா ஆகியோருக்கும், முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்க வேண்டும் என்று காங்கிரஸ் உறுப்பினர்கள் வலியுறுத்தினர். (வ)






ஸ்பெக்ட்ரம் விவகாரம் தொடர்பாக, யார், யாரிடம் விசாரணை நடத்துவது என்பதை இறுதி செய்வதற்காக, கூட்டுக்குழு கூட்டம், நேற்று முன்தினம் டில்லியில் கூடியது.

## ஜெயாவை விமர்சித்த வழக்கு: நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவு



தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் புகழுக்கு களங்கம் ஏற்படும் வகையில் விமர்சனம் செய்ததாகக் கூறி தி.மு.க. தலைவர் கருணாநிதி, பொருளாளர் மு.க.ஸ்டாலின், பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ், தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் மீது குற்றம் சுமத்தி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சம்பந்தப் பட்ட நால்வரையும் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு சென்னை மாவட்ட முதன்மை செஷன்ஸ் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு நீதிபதி பொன் கலையரசன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. இதையடுத்து கருணாநிதி கடந்த 10 ஆம் திகதியும், ராமதாஸ் கடந்த 9 ஆம் திகதியும், விஜயகாந்த் கடந்த 15 ஆம் திகதியும் நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும் என்று அழைப்பாணை அனுப்ப நீதிபதி உத்தரவிட்டார். இவர்களது உரையை வெளியிட்ட பத்திரிகை ஆசிரியர்களுக்கும்அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது.



டில்லியில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங் கள் வழங்கும் விழாவில் கலந்து கொண்ட, காங்கிரஸ் பொதுச் செயலர் ராகுலை கட்டியணைத்து மகிழும் மாற்றுத் திறனாளி.

## குஜராத்தில் டிராக்டர் கவிழ்ந்து 18 பேர் சாவு

குஜராத் மாநிலத்தில் டிராக்டர் ஒன்று பள்ளத்தில் விழுந்து கவிழ்ந்ததில் 18 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

குஜராத் மாநிலம் அம்பாஜி மாவட்டம் அருகே பிரசித்தி பெற்ற இந்துக் கோயில் உள்ளது. அங்கு சென்று கொண்டிருந்த பக்தர்களின் டிராக்டர் பெரிய பள்ளத்தில் உருண்டு விழுந்து விபத்துக்குள்ளானதில் 18 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் காயம் அடைந்த 50இற்கும் மேற்பட்டவர்கள் பாலான்புர் என்ற பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (வ)

## ஆண்மைச் சோதனைக்கு அவகாசம் கோரும் நித்திக்கு எதிராக இன்று மனு

### கர்நாடக அரசு நடவடிக்கை

பாலியல் குற்றச்சாட்டில் சிக்கிய நித்தியானந்தாவை ஆண்மை பரிசோதனைக்கு முன்னிலையாக கர்நாடக புலனாய்வுத்துறைப் பொலிஸ் 7 முறை நோட்டீஸ் அனுப்பியது.



பெங்களூ, ஓக.24

ஆண்மை பரிசோதனை மேற்கொள்வதற்கு கால அவகாசம் கோரும் நித்தியானந்தாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கர்நாடக அரசு சார்பில் இன்று ஆட்சேபனை மனுத் தாக்கல் செய்யப்பட உள்ளது.

பாலியல் குற்றச்சாட்டில் சிக்கிய நித்தியானந்தாவை ஆண்மை பரிசோதனைக்கு முன்னிலையாக கர்நாடக புலனாய்வுத்துறைப் பொலிஸ் 7 முறை நோட்டீஸ் அனுப்பியது. ஆனால் ஆணும் இல்லை பெண்ணும் இல்லை என்று கூறிவரும் நித்தியானந்தாவோ ஆண்மை சோதனைக்கு வராமல் இழுத்தடித்தார். வேறுவழியில்லாமல் கர்நாடக சி.ஐ.டி. பொலிஸார் ராம்நகர் நீதிமன்றத்தில் முறையிட்டனர்.

இதையடுத்து ஜூலை 30 ஆம் திகதி பெங்களூர் விக்டோரியா மருத்துவமனையில் ஆண்மை சோதனை, குரல் சோதனை செய்வதற்காக நித்தியானந்தா முன்னிலையாக நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீதிமன்றத்தின் உத்தரவுக்கு எதிராக கர்நாடக உயர்நீதிமன்றத்தில் கால அவகாசம் கோரும் மனுவை தாக்கல் செய்ய சொல்லிவிட்டு கைலாயயாத்திரை கிளம்பிவிட்டார் நித்தியானந்தா. இந்தமனு மீது உயர் நீதிமன்ற நீதிபதி ஜெகந்நாதன் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணை நடத்தப்பட்டது.

அரச தரப்பில் ஆட்சேபனை மனுத்தாக்கல் செய்ய நீதிபதி உத்தரவிட்டார். இதற்கு அரசுத் தரப்பில் இருநாள்கள் அவகாசம் கோரப்பட்டது. அதையடுத்து இன்று வரை விசாரணையை ஒத்தி வைத்தார் நீதிபதி. ஆண்மை சோதனைக்கு கால அவகாசம் கோரும் நித்தியாணந்தா மனுவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஆட்சேபனை மனுவை இன்று தாக்கல் செய்கிறது கர்நாடக அரசு.

## நாடாளுமன்ற நிலைக்குழுவிலிருந்து விலகுவது குறித்து பா.ஜ.க. யோசனை

நிலக்கரிச் சுரங்க ஊழல் தொடர்பில் பிரதமர் மன்மோகன் சிங் பதவி விலகுவது வரை நாடாளுமன்றத்தைப் புறக்கணிப்பது என்று முடிவு எடுத்திருந்த பாரதீய ஜனதா தற்போது, நாடாளுமன்ற நிலைக்குழுக்களிலிருந்து விலகுவது குறித்தும் ஆலோசனை மேற்கொண்டு வருகிறது.

தொடர்ந்து கடந்த இரு நாள்களாக நாடாளுமன்ற அவை நடவடிக்கைகளை ஸ்தம்பிக்க செய்த பா.ஜ.க. நேற்று முன்தினம் 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலை விசாரிக்கும் நாடாளுமன்ற கூட்டுக்குழு கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்தது. இந்தநிலையில் நாடாளுமன்ற நிலைக் குழுக்களில் அங்கம் வகிக்கும் மொத்தம் 114 இடங்களிலிருந்து பா.ஜ.க. விலக முடிவு செய்தால், அது காங்கிரஸுக்கு பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நிலைக் குழுக்களில் வெற்றிடமாகும் 114 இடங்களை நிரப்ப வேண்டுமாயின் அதற்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும். அத்தகைய சூழ்நிலையில் காங்கிரஸ் கூட்டணியில் உள்ள கட்சிகளிடம் போட்டி ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ)

## இணையங்களைத் தவறாகப் பயன்படுத்தினால் சட்ட நடவடிக்கை

### கபில் சிபல் எச்சரிக்கை

இணையங்களை தவறாகப் பயன்படுத்துவோருக்கு, சட்ட ரீதியான தண்டனை அளிக்கப்பட வேண்டும். இதற்குள்ள, சட்ட ரீதியான வாய்ப்புகள் குறித்து, அரசு ஆய்வு செய்து வருகிறது. எதிர்காலங்களில், இணையத்தளங்களை தவறாகப் பயன்படுத்துவோர், தண்டிக்கப்படுவர் என்று மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் கபில் சிபல் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இணையத்தளங்கள் மூலமாக வதந்தியை பரப்புவோரை அடையாளம் காண்பது, மிகவும் சிரமமாக உள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சி, தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க, சமூக வலைத்தளங்களுடன் சேர்ந்து, அமைப்பு ரீதியான நடைமுறையை உருவாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப வளர்ச்சி, தவறாக பயன்படுத்தப்படு வதைத் தடுக்க, சமூக வலைத்தளங்களுடன் சேர்ந்து, ஓர் அமைப்பு ரீதியான நடைமுறையை உருவாக்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சில வலைத்தளங்கள், அரசுக்கு ஒத்துழைப்பு அளிக்க, சம்மதம் தெரிவித்துள்ளன - என்றார்.

## 300 கி.மீ. இலக்கைத் தாக்கும் ஏவுகணை ஈரானில் அறிமுகம்

தரைவழியில் 300 கிலோ மீற்றர் வரையிலான குறுகியதூர இலக்கைத் தாக்கக் கூடிய ஃபடே-110 என்ற மேம்படுத்தப்பட்ட ஏவுகணையை ஈரான் ஜனாதிபதி அகமதி நிஜாத் கடந்த செவ்வாய்க்கிழமை அறிமுகம் செய்தார்.

இதுதொடர்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில், பாதுகாப்புத்துறை அதிகாரிகள் மத்தியில் அவர் உரையாற்றுகையில், ''பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு மேம்படுத்தப்பட்டுள்ள இந்த ஏவுகணை, நம் நாட்டின் ராணுவ பலத்துக்கு மேலும் வலுச்சேர்க்கும் ''- என்றார்.

ஃபடே-110 என்ற ஏவுகணை, விரைந்து செலுத்துதல், நீடித்து உழைக்கும் திறன் மற்றும் எத்தகைய தட்பவெப்ப சூழ்நிலையிலும் செயற்படக்கூடியது ஆகிய சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இந்த ஏவுகணை, கடந்த சில வாரங்களுக்கு முன்புதான் வெற்றிகரமாக பரிசோதித்துப் பார்க்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (வ)



ரோம் நகரில் நடைபெற்ற வாரந்திர கூட்டத்தில் கலந்து கொண்டு ஆசி வழங்கினார் பாப்பாண்டவர் 16 ஆம் ஆசீர்வாதப்பர்.

## ஒபாமாவுக்கு கொலைமிரட்டல் விடுத்தவர் கைது

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு கொலை மிரட்டல் விடுத்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மின்னஞ்சல் மூலம் மிரட்டல் விடுத்துள்ளார். உடனே அந்த முகவரி கண்டறியப்பட்டு உளவுத்துறை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் கடந்த செவ்வாய்க் கிழமைஅவரது வீட்டைச் சோதனையிட்டனர்.

மிரட்டல் விடுத்தவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் அப்போது அவரிடம் ஆயுதம் இருந்தது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (வ)

# அணிசேரா மாநாட்டில் பங்கேற்க பான் கீ-மூனுக்கு அமெ. எதிர்ப்பு

வொஷிங்டன், ஒக.24

ஈரானில் நடக்கும் அணிசேரா நாடுகளின் மாநாட்டில், ஐ.நா., பொதுச் செயலர் பான் கீ மூன் கலந்து கொள்வதற்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஈரான் நாடு அணு ஆயுதங்களைத் தயாரிப்பதாக, அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகள் குறைகூறி வருகின்றன. இதன் காரணமாக, ஈரான் மீது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத் தடை விதித்துள்ளன. ஈரானிலிருந்து கச்சா எண்ணெய் வாங்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு இதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.



இதற்கிடையே ஈரான் தலைநகர் தெஹ்ரானில், வரும், 30, 31ஆம் திகதிகளில், அணிசேரா நாடுகளின் மாநாடு நடைபெற உள்ளது. ஐ.நா., பொதுச் செயலர் பான் கீ மூன், பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்ட, 41 நாடுகளின் தலைவர்கள், இந்த மாநாட்டில் பங்கேற்க உள்ளனர். 21 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள், இதில் பங்கேற்க உள்ளனர் என்றும், ஈரான் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரி விக்டோரியா நூலண்ட் தெரிவித்ததாவது:-

ஈரான் தன் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையைத் திசை திருப்ப, இதுபோன்ற தந்திரத்தை கையாளுகிறது. இந்த மாநாட்டில், ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன், எகிப்து ஜனாதிபதி முர்சி உள்ளிட்டோர் கலந்து கொள்ளக்கூடாது.

இந்த மாநாட்டில் அவர்கள் பங்கேற்பது நல்லதல்ல. மற்ற நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்பது, அவர்களின் தனிப்பட்ட விருப்பம். எனினும், இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் தலைவர்கள், அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் நடவடிக்கையைக் கைவிடும்படி, ஈரானுக்கு அறிவுறுத்த வேண்டும்- என்றார். (வ)

## பனிப்பிரதேசத்தில் பறக்கும் விமானம் அமெரிக்க விஞ்ஞானிகள் சாதனை

கடல், தரை மற்றும் பனிப்பிரதேசத்தில் பறக்கும் விமானத்தை அமெரிக்கா விஞ்ஞானிகள் தயாரித்து புதிய சாதனை படைத்துள்ளனர். அமெரிக்காவின் லிசா அகோயா என்ற நிறுவனம் அதி நவீன விமானத்தை வடிவமைத்துள்ளது.

இந்த விமானம் தரையில் பறக்கும்போது அதன் 2 இறக்கைகள் விரியும். தண்ணீரில் பறக்கும் போது அது படகு போன்று மாறும். அதே நேரத்தில் பனி பிரதேசத்தில் செல்லும் போது அதன் 2 இறக்கைகளும் பனிக்கட்டிகளை உடைத்து நொறுக்கி சீரமைத்து அதில், பயணிக்க செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.இதில் 2 பேர் மட்டுமே பயணம் செய்ய முடியும்.

இதில் 2011 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்ய முடியும். மணிக்கு 135 மைல் முதல் 155 மைல் வேகத்தில் பறக்கும் திறன் படைத்தது. இன்னும் 2 ஆண்டுகளில் அதாவது 2014ஆம் ஆண்டு ஐரோப்பா மற்றும் அமெரிக்க நாடுகளில் இது விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு முன்னதாக இந்த விமானங்கள் 70 தடவை வெற்றிகரமாக சோதனை ஓட்டம் நடத்தப்பட்டுள்ளன.

இதன் விற்பனைக் கண்காட்சி அமெரிக்காவின் விஸ்கான்சின் மாகாணத்தில் உள்ள ஒஸ்காஷ் ஏர்வென்ஞ்சர் நிறுவனத்தில் கடந்த மாதம் நடந்தது குறிப்பிடத்தக்கது.

## கியூரியாசிட்டி விண்கலத்தின் காற்றுமானி சேதம்



செவ்வாய்க் கிரகத்தில் தரையிறங்கி ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ள, 'ரோவர் கியூரியாசிட்டி' யின் காற்றை உணரக்கூடிய காற்றுமானிக் கருவி சேதமடைந்துள்ளது.

செவ்வாய்க் கிரகத்தில் உயிர்கள் வாழ்வதற்கான சாத்தியம் இருக்கிறதா என்று ஆராய அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா, அண்மையில் கியூரியா சிட்டிரோவர் விண்கலத்தை அனுப்பியது. உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்திய அது வெற்றிகரமாக செவ்வாயில் தரையிறங்கி படங்களை அனுப்பத் தொடங்கியது. செவ்வாயின் மலைகளில் பாறைகளை கைவடிவில் உள்ள ட்ரில்லர் மூலம் குடைந்து மாதிரி மண் எடுத்து பரிசோதிக்கும் வசதி கொண்டது கியூரியாசிட்டி. இதுதவிர உயிர் வாழ தேவையான ஒட்சிசன், பொஸ்பரஸ் உட்பட பல்வேறு வேதிப் பொருள்கள் இருப்பது பற்றி ஆராய்ந்து தகவல் அனுப்பவல்லது.

அதில் 10 இற்கும் மேற்பட்ட கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில், கியூரியாசிட்டி விண்கலத்தில் முதல் பின்னடைவாக அதன் வானிலை ஆய்வு மைய காற்றுமானிக் கருவி சேதமடைந்தது.

இதுகுறித்து கியூரியாசிட்டி விண்கலத்தைக் கையாளும் நாசா விஞ்ஞானி ஜேவியர் கோம்ஸ் எல்விரா கூறுகையில், இது சிறிய ஏமாற்றம் தான். சரி செய்வதற்கான முயற்சிகள் நடக்கின்றன. இதனால், கியூரியாசிட்டியின் செவ்வாய்க் கிரக ஆராய்ச்சி தடைப்படாது - என்றார்.

## அதிகாரம் மிக்க பெண்மணிகளில் ஜேர்மன் பிரதமர் ஏஞ்சலா முதலிடம்



அமெரிக்காவைச் சேர்ந்த ஃபோர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள உலகின் அதிகாரம் படைத்த 100 பெண்மணிகள் பட்டியலில் ஜேர்மன் நாட்டின் பிரதமர் ஏஞ்சலா மெர்க் கல் முதலிடத்தைப் பிடித் துள்ளார். ஆறாவது இடம் இந்தியாவின் ஐக்கிய முற் போக்குக் கூட்டணியின் தலைவர் சோனியா காந் திக்குக் கிடைத்துள்ளது.

ஃபோர்ப்ஸ் பத்திரிகை ஒவ்வோர் ஆண்டும் உலகின் அதிகாரம் படைத்த 100 பெண்மணிகள் பட்டியலை வெளியிடுவது வழக்கம். இந்த ஆண்டுக்கான பட்டியல் வெளியிடப்பட்டது.

சோனியாவைத் தவிர, பெப்ஸிநிறுவனத்தின்தலைமை நிர்வாக அதிகாரி இந்திரா நூயி (12 ஆவது இடம்), சிஸ்கோ சிஸ்டம்ஸ் நிறுவன அதிகாரி பத்மஸ்ரீ வாரியர் (58வது இடம்), ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியின் தலைவர் சாந்தா கோச்சர் (59 ஆவது இடம்), பயோகான் நிறுவன அதிபர் கிரண் மஜூம்தார் (80வது இடம்) ஆகிய இந்தியப் பெண்களும் இந்தப்பட்டியலில் இடம்பிடித்துள்ளனர். (வ)

## சிரியா போரின் எதிரொலி அயல் நாட்டில் கலவரம்



சிரியா போரின் விளைவாக அயல் நாடான லெபனானில் உள்ள சிரியா ஜனாதிபதி ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இதனை இராணுவத்தினர் தடுக்க முயற்சித்தும், பலனிக்காமல் துப்பாக்கிச் சண்டை நடந்ததாகக் கூறப் படுகிறது. இந்த மோதலில் குறைந்தது 12 பேர் கொல்லப்பட்டனர். 100இற் கும் மேற்பட்டோர் படுகாய மடைந்துள்ளனர்.

பதற்றப்பகுதியான இந்த மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தும் அதை யாரும் பொருட்படுத்தவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி அசாத்தின் ஆதரவு படையினருக்கும், சன்னி முஸ்லிம் பிரிவு போராட்டக்காரர்களுக்கும் இடையே நடக்கும் போர் உச்சகட்டத்தை எட்டியுள்ளது.

## சீன வானொலி, தொலைக்காட்சி ஒளிபரப்புக்கு வியட்நாம் தடை

சீனாவின் தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப வியட்நாம் கட்டுப்பாடு விதித்துள்ளது.

வெளிநாட்டுத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் குறிப்பாக சீனா மற்றும் தென் கொரியா நாட்டு நிகழ்ச்சிகளை வியட்நாமில் ஒளிபரப்ப கட்டுப்பாடு விதித்து வியட்நாம் தகவல் தொடர்புத் துறை அமைச்சகத்தின் ஊடகத் துறை தலைவர் ஹோவா ஹூலியாங் உத்தரவிட்டுள்ளார்.

சீனாவின் வானொலி நிகழ்ச்சிக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. வியட்நாம் நாட்டு கடல் எல்லைக்கு உட்பட்ட ஜிஸா மற்றும் நான்ஸா எனும் தீவுகளை சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. மேலும், அங்கு தனது இராணுவத்தையும் நிறுத்தியுள்ளது.

# அசாஞ்சேவுக்கு ஆதரவான மர்மநபர்களின் அட்டகாசம்

## பிரிட்டன் அரச இணையத்தளங்கள் முடக்கம்

விக்கிலீக்ஸ் நிறுவுநர் அசாஞ்சே மீதான நடவடிக்கைகளை எதிர்க்கும் விதமாக பிரிட்டன் அரசின் இணையத்தளங்களை மர்மநபர்கள் முடக்கியுள்ளனர்.

விக்கிலீக்ஸ் இணையத் தளத்தின் நிறுவுநரான ஜூலியன் அசாஞ்சே அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் அரசு இரகசியங்களை வெளியிட்டு பரபரப்பு ஏற்படுத்தியவர்.

அமெரிக்க அரசு அவர் மீது கடும் கோபத்துடன் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இந்தநிலையில் சுவீடன் நாட்டில் 2 பெண்களை வன்புணர்வுக்குட்படுத்தியாக அசாஞ்ச் மீது வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்குத் தொடர்பாக லண்டனில் இருந்த அசாஞ்சே கைது செய்யப்பட்டார். பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். சுவீடன் கேட்டுக் கொண்டதன் பேரில் அவரை சுவீடனுக்கு நாடு கடத்த பிரிட்டன் முடிவு செய்தது. இதனால் கடந்த 19 ஆம் திகதி அவர் லண்டனில் உள்ள ஈக்குவடோர் நாட்டு தூதரகத்தில் தஞ்சமடைந்தார்.

அவருக்கு அரசியல் தஞ்சம் அளிக்கப் போவதாக கடந்த வாரம் ஈக்குவடோர் அறிவித்தது. தூதரகத்தில் இருந்து எப்போது வெளியே வந்தாலும் அசாஞ்சே கைது செய்யப்படுவார் என்று பிரிட்டன் தெரிவித்தது. இந்தப்பிரச்சினையால் இருநாட்டு உறவு பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், அசாஞ்சே விடயத்தில் பிரிட்டன் நடவடிக்கைகளை கண்டித்து அந்த நாட்டு அரசு இணையத்தளங்களை கணினி ஹேக்கிங் கும்பல் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு முடக்கியது. (வ)

# கென்யாவில் இன மோதல்

## அப்பாவிகள் 52 பேர் வெட்டியும் உயிருடன் எரித்தும் கொலை

நைரோபி, ஒக.24

கென்யாவில் இரண்டு இனக் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் 52பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து அந்த நாட்டு பொலிஸின் மண்டலத் தலைவர் ஜோசப் கிட்டூர் தெரிவித்ததாவது:-

பொகோமோ மற்றும் ஓர்மா எனும் இரண்டு இனக் குழுக்களுக்கு இடையே கடந்த செவ்வாய்க்கிழமை தானா நதி மாவட்டத்தில் மோதல் ஏற்பட்டது.



48 பேர் கொல்லப்பட்டனர், அவர்களில் 31பேர் பெண்கள், 11 குழந்தைகள், 6 பேர் ஆண்கள்.

இது ஒரு மோசமான சம்பவமாகும். இதில் 48 பேர் கொல்லப்பட்டனர், அவர்களில் 31 பேர் பெண்கள், 11 குழந்தைகள், 6 பேர் ஆண்கள்.

கொலையுண்ட 48 பேரில் 34 பேர் கண்டதுண்டமாக வெட்டிக் கொல்லப்பட்டனர். மற்றவர்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர். ஏராளமான குடிசைகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

சம்பவம் நடந்த இடம் கென்யத் தலைநகர் நைரோபியிலிருந்து 300 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது-என்றார்.

இதே மாவட்டத்தில் 2001 இல் ஏற்பட்ட கலவரத்தில் 130 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## ஆப்கனில் இருந்து படைகளை விலக்குகிறது நியூஸிலாந்து

ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளின் தொடர் தாக்குதலால் அதிருப்தியடைந்த நியூஸிலாந்து, தனது வீரர்களை அங்கிருந்து திரும்ப அழைக்க முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து நியூஸிலாந்து பிரதமர் ஜான் கீ தெரிவித்ததாவது:-

ஆப்கானிஸ்தானின் பாமியான் மாகாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தீவிரவாதிகள் நடத்திய் வெடிகுண்டுத் தாக்குதலில் நியூஸிலாந்து படையினர் 3 பேர் கொல்லப்பட்டனர்.

இதில் 2 ஆண்கள், ஒரு பெண்ணும் அடங்குவர். கடந்த 4 ஆம் திகதி தோபே பகுதியில் தீவிரவாதிகளின் துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் இறந்துள்ளனர். 6 பேர் காயமடைந்தனர்.

2003 ஆம் ஆண்டுக்குப் பின்னர், ஆப்கானிஸ்தானில் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள நியூஸிலாந்து நாட்டு படையினர் மீது நடந்த தாக்குதல்களில் இதுவரை 10 பேர் இறந்துள்ளனர்.

இவர்களில் 5 பேர் இந்த மாதத்தில் நடந்த தாக்குதலில் இறந்துள்ளனர் ஆவர். எனவே, தொடரும் தாக்குதலைக் கருத்தில் கொண்டு, பாமியான் மாகாணத்தில் உள்ள எங்கள் நாட்டு வீரர்கள் 145 பேரை திரும்ப அழைப்பது தொடர்பாக ஆலோசித்து வருகிறோம் - என்றார். (வ)

## ஒசாமாவை கொல்ல அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் தளபதி மறைமுக உதவி

சர்வதேச தீவிரவாதி ஒசாமா பின்லேடனைக் கைது செய்யும் முயற்சியில், அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் உளவுப்பிரிவான ஐ.எஸ்.ஐ.யைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் உதவினார் என்று தற்போது தகவல் வெளியாகி உள்ளது.

பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் அல்குவைதா இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின்லேடன் கடந்தாண்டு மே மாதம் அமெரிக்க அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு ஐந்து மாதங்களுக்கு முன்னதாகவே, பாகிஸ்தான் இராணுவத்தளபதி அஷ்பக் பர்வேஸ் கயானிக்கு அமெரிக்கா மறைமுகமாக தகவல் தெரிவித்ததாகஒ; கூறப்படுகிறது.

தி வால் ஸ்ட்ரீட் ஜேர்னல் மற்றும் தி வாஷிங்டன் போஸ்ட் ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றிய, ரிச்சர் மினிடெர் என்ற அமெரிக்க செய்தியாளர் எழுதியுள்ள நூலில் இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

பாகிஸ்தானின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஒசாமா பின்லேடன் குடும்பத்தாருடன் பதுங்கியிருந்த தகவலை, ஐ.எஸ்.ஐ அதிகாரி ஒருவரின் மூலமாக அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினர் தெரிந்து கொண்டனர்.

ஒசாமாவைச் சுட்டுக்கொல்வது குறித்து 2010ஆம் ஆண்டு இறுதியில், பாகிஸ்தான் இராணுவத் தளபதி கயானிக்கு மறைமுகமாக தகவல் தெரிவித்து அதிகாரபூர்வமற்ற முறையில் அவரின் ஒப்புதலையும் அமெரிக்கா பெற்றது.

எனினும் பாகிஸ்தானுக்குத் தெரியாமலேயே அதிரடிப்படையினரின் தாக்குதலை அரங்கேற்றலாம் என்ற முடிவை கடந்தாண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதி ஜனாதிபதி ஒபாமா மேற்கொண்டார் என்றுள்ளது.

## ஈரான் மீதான தடைகள் சிலவற்றை தற்காலிகமாக நீக்குகிறது அமெரிக்கா

அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் ஈரானுக்கு நிவாரண உதவி களை அனுப்புவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை அமெரிக்கா தற்காலிகமாக நீக்கியுள்ளது.

ஈரானில் பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான நிவாரணங்களை வழங்குவதற்காகவே இந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது. இதுவரை உணவு மற்றும் மருந்துகளை மனிதாபிமானக் காரணங்களுக்காக ஈரானுக்கு அனுப்புவதற்கு அமெரிக்கா அனுமதித்தது. எனினும் பணம் அனுப்புவதை அனுமதிக்கவில்லை.

ஈரானில், அண்மையில் ஏற்பட்ட இரு பூகம்பங்களினால் சுமார் 300 பேர் உயிரிழந்தனர். வெளிநாட்டு உதவிகளை ஈரான் ஆரம்பத்தில் நிராகரித்திருந்தது.

இதேவேளை, பூகம்ப பாதிப்புகளுக்கு ஈரான் அரசு மெதுவான பிரதிபலிப்புகளை காட்டுவதாக விமர்சிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் ஈரானுக்குப் பணம் அனுப்புவதற்கான தடையை நீக்குமாறு வெள்ளை மாளிகையை பல்வேறு அமெரிக்க ஈரானிய அரச சார்பற்ற நிறுவனங்கள் வலியுறுத்தின.

இதையடுத்து, மேற்படி தடை தற்காலிகமாக நீக்கப்படுவதாக அமெரிக்க திறைசேரி அறிவித்துள்ளது. (வ)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

## பேரம்பலம் (E.S.P) மாணிக்கம்

(வாரிவளவு, காரைநகர்)

மண்ணில்
16.02.1932

விண்ணில்
25.07.2012

பேரும் புகழும் மிக்க
பேரம்பலம் கைப்பிடித்து
பார்போற்றும் பாசமிகு
புதல்வரைப் பெற்றீர்!
சிறந்த நல் மருமக்கள்,
சீர்மிகு பேரப்பிள்ளைகள்,
ஊர், உறவு என்று
பேர் சொல்ல வாழ்ந்து வந்தீர்
பெற்றவளே தாயே
பேசாமல் சென்று விட்டீர்
ஏற்றமிகு வாழ்வு தந்தவரே
ஏங்குகின்றோம் உம்மை எண்ணி
உமது ஆத்மா சாந்திபெற
தில்லைக் கூத்தன் திருப்பாதம்
பணிந்து நிற்கின்றோம்.

குடும்பத்தினர் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல.11,பெதெஸ்டா வீதி, off டிக்மன்ஸ் வீதி,
கொழும்பு – 06. தொ.பே.011 2503112, 077 1106323, 011 2542985

(சி/2549)(2-6)




5 மாவட்டங்களிலும் பெரும் பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# சந்நிதி ஆலய நிகழ்வுகள்

வடமராட்சி,ஓக.24

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடைபெற்று வரும் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு எட்டாம் திருவிழாவான இன்று வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு ஆச்சிரம மண்டபத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல் ''தேவிபாகவதம்'' எனும் தலைப்பில் சொற் பொழிவு நிகழ்த்துவார். (3-8)

* * *

ஆலய முன்றிலில் மாலை 4 மணிக்கு ஆ.தங்கமயில் ''திருவருள்மாயம்'' எனும் கருப்பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார்.



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் கடந்த சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பல ஆயிரக்கணக்கான அடியவர்களின் அரோகரா கோஷம் முழங்க ஆரம்பமானது. (3-86)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, ஓக.24

புலோலி, காந்தியூர் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த அபிஷேகம் இன்று 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது. 10 ஆம் நாளான எதிவரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 1008 சங்காபிஷேகம், விசேட பூஜை ஆராதனைகளுடன் மகா சங்காபிஷேகம் நடைபெறும். (3-8)

* * *

பொலிகண்டி இருப்பை மூலை சித்திவிநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறுவதுடன் பெருந்திருவிழா நிறைவு பெறும். (3-8)

* * *

தம்பசிட்டி, மாயக்கைப் பிள்ளையார் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்றுமுன்தினம்(புதன்) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 30 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (3-8)

* * *

வெளிக்குளம்- வவுனியா சித்திவிநாயகர் ஆலயப் பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் இந்தப் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (3)

* * *

கெற்பேலி மேற்கு வல்லியப்பன் ஆலயத்தில் உள்ள விநாயகர் பெருமானுக்கு இன்று மணவாளக் கோல சங்காபிஷேகம் இடம்பெறும்.'கிரியா சிரோன்மணி' சிவஸ்ரீ ந.இராஜேஸ்வரக்குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெறும். (3-9)

* * *

சாவகச்சேரி நுணாவில் மத்தி மணங்குணாய் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் கொடியேற்றத் துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (3-9)



காரைநகர் அரசடிக்காடு கதிர்வேலாயுத சுவாமி கோயிலில் இடம்பெற்ற தேர்த்திருவிழாவில் வேற்பெருமான் தேருக்கு எழுந்தருளுகிறார் பக்தர்கள் புடைசூழ தேர் வலம் வருகிறது. (3-250)



செல்வச் சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு அடியவர்கள் புடைசூழ ஆலயத்தின் பாரம்பரிய முறைப்படி இடம்பெற்றது. செல்வச் சந்நிதி ஆலய வேல் வீதியுலா வருகிறது. (3-253)


## "ஓம் எனும் பிரணவம்"

இந்த உலகம், பிரபஞ்சம், உயிரினங்கள் யாவும் பிரணவத்திலிருந்து தான் தோன்றின. அந்தப் பிரணவத்தின் வடிவமாக விளங்குபவர் பிள்ளையார். அவரின் ஆனைமுகம், வளைந்த தும்பிக்கை ஆகியவற்றைச் சேர்த்துப் பார்த்தால் ''ஓம்'' எனும் ஓங்காரத்தின் அதாவது பிரணவத்தின் வடிவமாகத் தோற்றம் தருவதைக் காணலாம்.

பிள்ளையார் தம்மை அணுகி, மெய்யன்போடு வழிபடுபவர்களுக்கு எவ்வித விக்கினங்கள், இடையூறுகள் வராமல் காத்தருளுவார். இம்மை, மறுமை இன்ப சுகங்களையும் அளிக்க வல்லவர். விக்னேஸ்வரர், விக்கினராஜா, வல்லப கணபதி, விநாயகர் போன்ற பல திருநாமங்களைக் கொண்டிருப்பவர் பிள்ளையார்.

ஞானக்கதிர்

பிள்ளையாரைப் பூவும் நீரும் கொண்டு தினமும் வழிபாடு செய்து வருபவர்களுக்கு,வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம், மாமலரான் நோக்குண்டாம்' என்று ஔவையார் கூறியுள்ளார். சொல்வன்மை, கல்வி வன்மை, நல்லெண்ணம், பொருள்செல்வம் யாவும் கிடைக்கப் பெறுவர்.



ஆடிவேல் ரதபவனி கொழும்பு, இலங்கை வங்கி தலைமை அலுவலகம் முன் வருகை தந்தபோது நடைபெற்ற பூசையில் இலங்கை வங்கி இந்துமன்ற செயலாளர் எஸ். விமலச்சந்திரன், ரதபவனி அமைப்பாளர் வி.ஆர். சுதாகரன், வங்கித் தலைவர், கலாநிதி காமினி விக்கிரமசிங்கா, பொதுமுகாமையாளர் கே.தர்மசிறி இந்துமன்றத் தலைவர் எல். சுகுமார் ஆகியோர் வழிபாட்டில் கலந்துகொண்டனர். (3)

# மரண அறிவித்தல்

## தம்பிமுத்து இரத்தினம்



ஏழாலை அருள்மிகு கண்ணகை அம்மன் தேவஸ்தான சபையின் நிர்வாக உறுப்பினரும், பிரதான உபயகாரருமாகிய தம்பிமுத்து இரத்தினம் 21.08.2012 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற புஸ்பராணியின் அன்புக் கணவரும், தயானந்தன், றமீனா, யசோதா, ஆனந்தரூபன், ரஜீனா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் இராசம்மா , இலட்சுமி, புஸ்பராணி, கந்தசாமி, ஞானமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நளாஜினி, கமல்ராஜ், சற்குணராஜ், சோனாலி, சுதன் ஆகியோரின் பாசமிகு மாமனும், கரூஜன், கவினஜா, கிசோ, மயூத், பிரசன்ஜா, பனிஸ்ராஜ், பிரசாந், டிஸாந், ஆகாஷ், ராகவி, ரித்திகா, இசிதா, நிலோஜன், பிரித்திகா, அஸ்விகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.08.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஏழாலை வடக்கு கண்ணகை அம்மன் கோயிலடி,**
**ஏழாலை.**

தகவல்:
**றமீனா (மகள்).**

(சி/2429)(2-6-7)

# உதயன்

## 05 தரம் 05 புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்


சுட்டெண் : ............................................ **வினாத்தாள் I** நேரம் : 45 நிமிடங்கள்

**01 தொடக்கம் 32 வரையான வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

*** 01ஆம், 02ஆம் வினாக்களில் உள்ள பட உருவங்களுக்கு மிகப் பொருத்தமான சொற் கூட்டத்தைத் தெரிவு செய்க.**


01. 

1) உல்லாசம் - காலம் - பணம்
2) விளையாட்டு - சந்தோசம் - உற்சாகம்
3) சோர்வு - பாடசாலை - விளையாட்டு


02. 

1) மழை - கருவாடு - நீர்
2) நீர் - ஓடும் - உப்பு
3) நீர் - நீந்தும் - கருவாடு

*** 03ஆம், 04ஆம் வினாக்களில் உள்ள உருவங்களை நன்கு கவனித்து, அவற்றுக்குக் கிட்டிய சம்பந்தமுள்ள சோடி உருவங்களைத் தெரிவு செய்க.**

03. 


1) AE 2) CB 3) DF

04. 


1) BD 2) AE 3) AD

*** நான்கு பிள்ளைகளிடம் பாடசாலைக்குத் தாமதமாக வந்தது ஏன் என ஆசிரியை கேட்ட போது அவர்கள் நால்வரும் கொடுத்த பதில் பின்வருமாறு,**

A - அடைமழை நீடித்து இருந்ததால்.
B - பாடசாலை பஸ் நடுவழியில் பழுதுபட்டதால்.
C - நேற்றுக் கொடுத்த வீட்டுப் பாடம் கடுமையானதால்.
D - ஜலதோசம் பீடித்ததனால்.


05. இதற்கு உண்மையான காரணமுள்ள கருத்துத் தொடரைத் தெரிவு செய்க.
1) ABD 2) BCD 3) DAC

06. பெறுமதியான ஒன்றால் எவருக்கும் பிரயோசனம் இல்லை என்பது,
1) நகமும் சதையும் போல 2) காட்டில் எறித்த நிலாப் போல
3) சிறகற்ற பறவை போல

*** கீழே ஐந்து நிகழ்ச்சிகள் தரப்பட்டுள்ளன. அவை சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமான ஒழுங்கு வரிசையில் தரப்படவில்லை. அந்த நிழ்ச்சிகள் எந்த ஒழுங்கிலே தரப்பட வேண்டும் எனக் கண்டு அந்த ஒழுங்கினைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.**


07. A - அடுத்த பாடம் பற்றிய அறிவுறுத்தல்களை வழங்குகிறார்.
B - சரி, பிழை பார்க்கிறார்.
C - ஆசிரியை வகுப்பறைக்கு வருகின்றார்
D - மாணவர்களைக் கொண்டு பயிற்சியைச் செய்விக்கிறார்.
E - கணித பாடத்தைக் கற்பிக்கிறார்.
1) CDEBA 2) CEDBA 3) ECDBA

08. இரண்டு தட்டுள்ள தராசில் ஒரு தட்டில் ஒரு கிலோ கனமான இரும்பும் மற்றைய தட்டில் ஒரு கிலோ லேசான பஞ்சும் வைக்கப்பட்டிருக்கின்றன. தராசின் நிறையைக் காட்டும் படம் பின்வருவனவற்றுள் எது?




09. 

அருகே உள்ள பெட்டியில் உருவங்கள் வரையப்பட்டுள்ள உருக்கள் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. நீங்கள் காணும் பக்கத்தினது எதிர்ப்பக்கத்தில் வரையப்பட்டுள்ளதும் அதே உரு ஆகும். பெட்டியைப் பிரித்து விரித்து வைக்கும் போது அதைத் திருத்தமாகக் காட்டும் முறையைத் தெரிவு செய்க.




*** 10ஆம், 11ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்ட சொற்கள் குறிப்பிட்ட சம்பவம் ஒன்றினைக் குறிக்கின்றன. அச் சொற்களால் குறிக்கப்படும் மிகவும் பொருத்தமான சம்பவத்தினைத் தெரிவு செய்க.**

10. காற்று, பட்டம், மரம், நூல்
1) மரத்தில் இருந்த நூல் காற்றினால் பட்டத்தில் விழுந்தது.
2) பட்டத்தின் நூல் காற்றினால் மரத்தின் மேலே சென்றது.
3) காற்றினால் பட்டத்தின் நூல் அறுந்து பட்டம் மரத்தில் சிக்கியது.

11. ஆசிரியர், வகுப்பறை, மாணவர்கள், வணக்கம்
1) வகுப்பறைக்கு வந்த மாணவர்களும், ஆசிரியரும் எல்லோருக்கும் வணக்கம் தெரிவித்தனர்.
2) வகுப்பறை மாணவர்கள் வணக்கம் கூறும் ஆசிரியராவர்.
3) ஆசிரியர் வகுப்பறைக்கு வந்ததும் மாணவர்கள் வணக்கம் தெரிவித்தனர்.

12. 5 △ 1 ○ 3 = 12
9 △ 4 ○ 1 = 5
7 △ 5 ○ 3 = ?

எண் தொடர்புகளைக் கவனித்து அதற்கு ஏற்ப - ?- இனால் காட்டப்படும் எண் எது எனத் தெரிவு செய்க.
1) 15
2) 5
3) 6

13. காந்தனின் வயது சுமனின் வயதைப் போல் மூன்று மடங்காகும். குமாரின் வயது காந்தனின் வயதைப்போல் மூன்று மடங்கு ஆகும். இவர்கள் மூவரின் வயது களினதும் கூட்டுத்தொகை 39 வருடங்கள் ஆகும். எனின் குமாரின் வயது யாது?
1) 12 வருடங்கள் 2) 15 வருடங்கள் 3) 27 வருடங்கள்

*** 14ஆம், 15ஆம் வினாக்களுக்குத் தரப்பட்ட எண்கோலத் தொடர்புகளை கவனத்திற் கொண்டு விடுபட்ட இடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.**

14.

| | | |
|---|---|---|
| 4 | 1 | 2 |
| 3 | 5 | 7 |
| 8 | 9 | 6 |

| | | |
|---|---|---|
| 1 | 3 | 4 |
| 2 | 8 | 6 |
| 4 | 5 | 7 |

| | | |
|---|---|---|
| 5 | ? | 4 |
| 3 | 4 | 3 |
| 2 | 1 | 1 |

1) 4
2) 5
3) 6

15.


| | | |
|---|---|---|
| 18 | 19 | 20 |
| 14 | 36 | 22 |
| 16 | 17 | 18 |


| | | |
|---|---|---|
| 19 | 20 | 21 |
| 3 | 25 | 22 |
| 4 | 5 | 6 |

| | | |
|---|---|---|
| 12 | ? | 11 |
| 14 | 18 | 4 |
| 7 | 11 | 6 |

1) 7
2) 9
3) 11

*** 16ஆம், 17ஆம் வினாக்களுக்கு முதலில் தரப்பட்ட படத்துடன் நெருங்கிய தொடர்புடைய படத்தைத் தெரிவு செய்க.**

16. 


17. 


18. முயற்கொம்பு தேடி அலைந்தது போல என்பதற்குப் பொருத்தமான சந்தர்ப்பம் பின்வருவனவற்றுள் எது?
1) இல்லாத பொருளைத் தேடி அலைதல்
2) அலைந்து திரிந்து தேடிய பொருளைப் பெறுதல்
3) வழிதவறி நிற்பவனிடம் வழி கேட்டல்


19. நரி கோபமடைந்து ஆமை ஒன்றை நீரில் தள்ளி விட்டபோது ஆமை நீரில் அமிழ்ந்து இறந்து போனது. இவ்வாக்கியத்தின் கருத்து பிழையானது. வாக்கியத்தின் கருத்து பிழையாவதற்குக் காரணமான விடயம் எது?
1) ஆமைக்கு நரியைச் சந்திக்க வாய்ப்புக் கிடைப்பதில்லை
2) நரியைக் கண்டவுடன் ஆமை பயப்படுவதற்குக் காரணம் எதுவுமில்லை.
3) ஆமை நீரில் அமிழ்ந்து இறப்பதற்கு இடமில்லை.

*** 20ஆம், 21ஆம் வினாக்களில் உள்ள சொல் வரிசைகளில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல் இடம்பெறும் சொல் வரிசையின் கீழே கோடு இடுக.**

20. 1) போஞ்சி, கோவா, கரட், லீக்ஸ்
2) சிவப்பு, மஞ்சள், நிறம், நீலம்
3) மேசை, கதிரை, கட்டில், அலுமாரி

21. 1) இசைக்கருவி, புல்லாங்குழல், தபேலா, ஹார்மோனியம்
2) சுறா, அறக்குளா, சூரை, நெய்த்தோலி
3) கிரிக்கெற், கரப்பந்தாட்டம், காற்பந்தாட்டம், கொக்கி

22. கீழே தரப்பட்டுள்ள எல்லாக் கருத்துக்களுடனும் மிகப் பொருந்துகின்ற உருவைத் தெரிவு செய்க.
போக்குவரத்துச் சாதனம் - வெளிநாட்டு உற்பத்தி - எரிபொருள்களினால் செயற்படுத்தப்படுவது




23. பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது ஆண்டு நிறைவு விழா 2005 ஆம் ஆண்டில் நடைபெற்றது. அவ்விழாவில் பங்குபற்றியபோது பிரியாவின் வயது 10 ஆகும். அப்பாசாலையின் நூற்றாண்டு நிறைவு விழா நடைபெறும்போது பிரியாவிற்கு எத்தனை வயதாகும்? விடையைத் தெரிவு செய்க.
1) 40 2) 50 3) 60

*** பின்வரும் பாடலை வாசித்து 24 ஆம், 25 ஆம் வினாக்களுக்கான விடைகளைத் தெரிவு செய்க.**

> கற்ற கல்வி ஒருவரின்
> சிறந்த செல்வமாகும்
> நல்ல பண்புகள் இருப்பின்
> நாடு உங்களைப் போற்றும்


24. ஒருவரின் சொத்தாக விளங்குவது எது?
    1) கற்ற கல்வி
    2) நற்பண்புகள்
    3) நற்பழக்க வழக்கங்கள்

25. நாடு உங்களைப் போற்ற வேண்டுமாயின் நீங்கள் யாது செய்ய வேண்டும்?
    1) சிறந்த கல்வி 2) நற்பண்புகளை விருத்தி செய்தல்
    3) நன்நடத்தை

26. விளையும் பயிரை முளையில் தெரியும் என்பதன் கருத்து,
    1) பயிர் நன்றாக வளர நல்ல விதை தேவை
    2) ஒருவனின் சிறுவயதுப் பழக்கங்களை வைத்து அவனைப் பற்றி மதிப்பிடலாம்
    3) பெரியவர்களாக வளர்வதற்குச் சிறியவர்களுக்கு உதவுதல் வேண்டும்

27. 4 மீற்றர் நீளமும் 4 மீற்றர் உயரமும் உள்ள சுவருக்குப் பூச 2 லீற்றர் பூச்சுத் தேவைப்படுகிறது. 8 மீற்றர் நீளமும் 1 மீற்றர் உயரமும் உள்ள அத்தகைய ஒரு சுவருக்குப் பூச எத்தனை லீற்றர் பூச்சு தேவைப்படும்?
    1) 1 லீற்றர் 2) 2 லீற்றர் 3) 4 லீற்றர்

28. வசந்தி என்னும் பெயர் பின்வரும் குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளது.



அதே குறியீடுகளைப் பயன்படுத்தி சமந்தி என்னும் சொல் எழுதப்பட்டுள்ள விதத்தைப் பின்வரும் விடைகளிலிருந்து தெரிவு செய்க.

1) 2) 3)



* **29ஆம், 30ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள படங்கள் சரியான ஒழுங்கில் தரப்படவில்லை அவற்றை சரியாக ஒழுங்குபடுத்தினால் வர வேண்டிய விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.**


29. 



1) DACB
2) BCAD
3) DCAB

30. 


1) DBCA
2) BDAC
3) CDBA

* **31ஆம், 32ஆம், வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருவை B திசை வழியே பார்க்கும்போது அது தோன்றும் விதத்தைக் காட்டும் விடையின் கீழ்க் கோடு இடுக.**

31. 


32. 


☞ **33 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குச் சரியான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

* **கீழே ஒவ்வொரு உருவுக்கும் ஒரு பெறுமானம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**


| | | | |
|---|---|---|---|
| □ | + | △ | = 9 |
| △ | - | □ | = 5 |
| □ | × | □ | = 4 |
| △ | + | ◇ | = 8 |

33. □ × △ இன் பெறுமானம் யாது? (..........................)

34. △ × △ இன் பெறுமானம் யாது? (..........................)

35. ◇ × ◇ இன் பெறுமானம் யாது? (..........................)


* **கீழ் தரப்பட்டுள்ள உருவங்களின் உள்ளே பொருட்களின் விலையைக் கவனித்து 36ஆம், 37ஆம் வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**




36. பந்தின் விலை யாது? (....................ரூபா............சதம்)

37. தண்ணீர் போத்தலினதும், பந்தினதும் மொத்த விலை யாது? (....................ரூபா............சதம்)

38. மாலையில் ஒருவர் நடந்து செல்லும்போது அவரின் நிழல் அவருக்கு வலது கைப்பக்கத்திற்கு விழுகிறது எனில் அவர் நடந்து செல்லும் திசை யாது? (..........................................)

39. 


கமல், அமல் ஆகிய இருவரும் சமமாக விளையாட ஆரம்பித்தனர். இதில் அதிக தூரம் சென்று விளையாடியவர் யார்? (..........................................)

40.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | 8 | 5 | 7 | 6 | 4 | 5 | 8 |
| 3 | 6 | 7 | 4 | 7 | 5 | 3 | 8 |
| 4 | 6 | 8 | 3 | 5 | 7 | 8 | 4 |

இங்கு அதிக தடவை குறிக்கப்படும் இலக்கம் எது? (..........................................)

சுட்டெண் : ..........................................

## வினாத்தாள் II

நேரம் : 1 மணி 15 நிமிடங்கள்

**01) பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

அந்தப் பிரதேசம் முழுவதும் சந்திரனின் வெளிச்சத்தினால் ஒளி பெற்றிருந்தது. நீலவானில் முத்துக்கள்போல் மின்னும் நட்சத்திரங்கள் என்னைப் பார்த்துப் புன்முறுவல் பூப்பதுபோல எனக்குப் புலப்பட்டது. சுற்றுப்புறச் சூழலில் உள்ள மரஞ்செடிகளில் வேறு நாட்களில் உறங்கிக்கொண்டிருக்கும் குருவிகள் இன்று விழிப்புடன் இருந்தன. அவை பயமின்றிக் கூட்டமாகக் கீதம் இசைத்தன. நான் முன்னோக்கிப் பயணம்செய்யும்போது அழகான சிறு நீர்த்தேக்கம் ஒன்று எதிர்ப்பட்டது. வானில் பிரகாசிக்கும் சந்திரனின் நிழலை நான் அதனுள் கண்டேன். அசைந்து ஆடாத தண்ணீர் பெரிய கண்ணாடி போன்றது. சிறிது தூரம் சென்றதும் ஐயோ மகனே! நீங்கள் தூரம் போகிறீர்களா? என்று அம்மா சொல்வது எனக்கு கேட்டது.

01. மேலே பந்தியில் குறிப்பிடப்படுவது ஒரு நாளின் எந்த வேளை ஆகும்?
..........................................

02. பந்தியில் இடம்பெற்றுள்ள உவமைத்தொடர் ஒன்றை எழுதுக.
..........................................

03. இணைமொழி ஒன்று எழுதுக.
..........................................

04. வினையடைமொழி ஒன்றை எழுதுக.
..........................................

05. ''குருவிகள் இன்று விழிப்புடன் இருந்தன'' என்னும் வாக்கியத்தை ஒருமை வாக்கியமாக மாற்றி எழுதுக.
..........................................

06. ''உறக்கம்'' என்பதன் ஒத்தகருத்துச்சொல் ஒன்று எழுதுக.
..........................................

07. ''அசையாத'' என்பதன் எதிர்க்கருத்து.
..........................................

08. அஃறிணை, படர்க்கை வினைமுற்று ஒன்று தருக.
..........................................

09. பெண்பால் ஒருமைச் சொல்லொன்று எழுதுக.
..........................................

**02)** "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்னும் பழமொழியின் கருத்தை எழுதுக.
..........................................

**03) ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.**

01. பிறந்த / சூழல் / காட்சிகளைக் / நான் / கொண்டது / இயற்கை / அழகான
..........................................

02. தனது / கொடுக்கின்றது / தேடிக் / குஞ்சுகளுக்கு / உணவு / கோழி
..........................................

**04) வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிந்து அதன்கீழ் கோடிடுக.**

01. திருகோணமலைத் துறைமுகம் இலங்கையில் உள்ள .......................... துறைமுகமாகும். ( இயக்கை / இயற்க்கை / இயற்கை )

02. வேலைகளை இலகுபடுத்த நாம் பல்வேறு .......................... பயன்படுத்துகிறோம். (உபகரணங்களைப் / உபகரனங்களைப் / உபகறனங்களைப் )

**05) தனிச்சொல்லை எழுதுக.**

01. ஒரு நாட்டின் பிரதான நகரம் - ..........................................

02. நூறு வருடங்கள் கழிந்தது - ..........................................

**06) பன்மையாக எழுதுக.**

01. குயில் கூவியது -
..........................................

**07) உவமைத்தொடரின் கருத்தை எழுதுக.**

01. நீர்க்குமிழி போல - ..........................................

02. தூண்டில் புழுப்போல - ..........................................

**08) குறியீடு இடுக.**

01. ஆகா என்ன அழகான ஓவியம்

02. நான் வந்தேன் ஆசிரியரைக் கண்டேன்

**09) பின்வரும் சொற்களின் மரபுப் பெயர்களை எழுதுக.**

01. நண்டின் ஆண் - ..........................................

02. நண்டின் பெண் - ..........................................

**10) பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குறிக்குள் தரப்பட்ட சொல்லிலிருந்து தெரிந்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

(sweep / pluck / clean)

01. I want to .......................................... flowers.

02. I will .......................................... the class room.

03. I will .......................................... the blackboard.

**11) பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்களச் சொல்லை (தமிழ் உச்சரிப்பில்) எழுதுக.**

01. பாடசாலை - .............................. 02. கதிரை - ..............................

03. பத்து - .............................. 04. மூக்கு - ..............................

**12) பின்வரும் தமிழ்ச் சொற்களின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.**


01. பாண் - ..........................................
02. மருந்துக்கடை - ..........................................
03. விமான நிலையம் - ..........................................
04. துவிச்சக்கரவண்டி - ..........................................

***13) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (x). எனவும் அடைப்புக்குறிக்குள் அடையாளமிடுக.***

01. தேசியக் கொடியில் முழுக் கொடியையும் சுற்றி தீட்டப்பட்டுள்ள மஞ்சள் நிறம் இலங்கை வாழ் மக்களின் ஒற்றுமையைக் காட்டுகிறது. ( )
02. தேனீ மனிதனுக்குப் பயனற்ற ஒரு பூச்சியாகும். ( )
03. களிமண் தண்ணீரை நன்றாக உறிஞ்சிக் கொள்ளும். ( )
04. ஓணான் முட்டை மூலம் இனம் பெருகும் ஒரு பிராணியாகும். ( )
05. செண்பகம் பயிர்களுக்குச் சேதத்தை விளைவிக்கும் நத்தை முதலான பிராணிகளை அழித்து ஒழிக்கும். ( )

***14) பின்வரும் படங்களின் பெயர்களை எழுதுக.***

01. 02. 03. 04.



.................... .................... .................... ....................


***15) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.***

01. இலங்கையின் தேசியக் கொடியில் உள்ள பச்சை நிறம் காட்டும் இனத்தவர்,
1) தமிழர்கள் 2) சிங்களவர்கள் 3) முஸ்லிம்கள் 4) பறங்கியர்கள்

02. கடல் தண்ணீரை ஒரு பாத்திரத்தில் இட்டுச் சூடாக்கினால்,
1) ஒன்றும் எஞ்சமாட்டது 2) வெள்ளை நிறமான தூள் மிஞ்சும்
3) கறுப்பு நிறமான தூள் மிஞ்சும் 4) பனிக்கட்டிகள் மிஞ்சும்

03. பச்சை நிறத்தைத் தயாரிக்கும் முறை,
1) நீலமும் சிவப்பும் சம அளவில் கலப்பது
2) மஞ்சளும் கறுப்பும் சம அளவில் கலப்பது
3) நீலமும் மஞ்சளும் சம அளவில் கலப்பது
4) சிவப்பும் பச்சையும் சம அளவில் கலப்பது

04.




தண்ணீர் கொதிக்கும் போது கேத்திலில் இருந்து நீராவி வெளியேறும் இடத்தில் பீங்கான் ஒன்றைப் பிடித்தால் பீங்கான் மீது காணக்கூடியது,
1) தண்ணீர்த்துளிகள் 2) புகை
3) கரி 4) எதையும் காண முடியாது

05. பெண் கடலாமைகள் முட்டையிடுவது,
1) கடற்கரை மணலில் 2) கடல் நீரினுள்
3) கற்பாறையில் 4) கடற்தாவரங்களின் மீது

06.



இவ்வுருவில் காட்டப்பட்டவாறு ஒரு நடுகைப் பாத்திரம் அமைத்துக்கொள்ளத் தேவைப்படுவது,
1) பழைய டயர் ஒன்று 2) மழைப்பீலி ஒன்று
3) காய்ந்த வாழைச் சருகுகள் 4)தென்னம் மட்டைகள்

07. இவ் ஆணியைக் கழற்றுவதற்கு மிக உகந்த உபகரணம்,



1) 2) 3) 4)

08. ஆறுகால்கள் உள்ள பிராணி,
1) பூரான் 2) தேள் 3) எறும்பு 4) சிலந்தி

09. இறைச்சியை உணவாக உட்கொள்ளாத பறவை,
1) கொக்கு 2) கிளி 3) பருந்து 4) மீன்கொத்தி

10. கூட்டமாக அங்கும் இங்கும் செல்லாத ஒரு பிராணி,
1) கறையான் 2) எறும்பு 3) நுளம்பு 4) தேனீ


11. கொழுப்புச் சத்துக் கூடிய ஓர் உணவாகக் கருதப்படுவது
1) கருவாடு 2) நிலக்கடலை 3) மீன் 4) கீரைவகை

12. வித்து ஒன்று முளைக்கத் தேவையற்றது
1) வெப்பம் 2) காற்று 3) நீர் 4) இடவசதி

13. பிரதான வீதிகளில் உள்ள வீதிச் சமிக்ஞைத் தூண்களில் காணப்படும் வர்ணங்களினை மேலிருந்து கீழ் நோக்கி எழுதினால் அமையும் முறை,
1) சிவப்பு, செம்மஞ்சள், பச்சை 2) பச்சை, செம்மஞ்சள், சிவப்பு
3) செம்மஞ்சள், சிவப்பு, பச்சை 4) பச்சை, சிவப்பு, செம்மஞ்சள்

14. இலங்கைக்கே உரிய தாவரம் ஒன்றல்லாதது,
1) ஆம்பல் 2) இறப்பர் 3) கடல் மாங்காய் 4) எண்ணெய்

***16) தரப்பட்ட வரைபானது ரவி ஐந்துமாதங்கள் சேமித்த பணத்தைக் காட்டுகின்றது. இதன்படி பின்வரும் வினாக்களுக்கான விடைகளை எழுதுக.***




01. ஆவணி மாதம் சேமித்த பணம் எவ்வளவு?
(..............................)

02. எந்த மாதத்தில் மிகக்குறைந்த பணத்தை சேமித்தான்?
(..............................)

03. கார்த்திகை மாதத்தில் சேமித்த பணத்தின் இரு மடங்கு பணத்தை சேமித்த மாதம் எது?
(..............................)


04. ஐப்பசி மாதத்தைவிட ஆடி மாதம் எவ்வளவு பணம் குறைவாகச் சேமித்தான்?
(..............................)

05. ஐந்து மாதத்திலும் சேமித்த மொத்தப் பணம் எவ்வளவு?
(..............................)

***17) கணித்து எழுதுக.***

01. பின்வரும் சமவலுப் பின்னத்தின் வெற்றிடத்தை நிரப்புக. $\frac{2}{3} = \frac{\square}{12} = \frac{4}{\square}$


02. இந்தச் செவ்வக வடிவக் காட்போட் அட்டையின் நீளம் சென்ரிமீற்றரில் அளக்கப்பட்டுள்ள முறையை உருவப் படம் காட்டுகிறது இந்தச் செவ்வக வடிவக் காட்போட் அட்டையின் நீளம், அகலத்தைவிட 3.5 cm கூடியதாகும். அதன்படி, இக்காட்போட் அட்டையின் அகலம் யாது?




(......................................)

03. பயணத்தின் 6km 300m ஐ பூரணப்படுத்த இன்னும் பயணஞ் செய்ய வேண்டிய தூரம் 1km 400m எனின், இப்போது பயணஞ் செய்த தூரம் யாது?
(......................................)

04.



இவ்வுரு அமைந்துள்ள ஒரு பக்க நீளம் 1cm கொண்ட 8 சிறிய சதுரங்களாலானது. அதன்படி, இங்கு நிழற்றியுள்ள பகுதியின் பரப்பளவு யாது?
(......................................)

05. 500g அரிசியின் விலை ரூபா 200 ஆயின் 2kg 750g அரிசியின் விலை யாது?
(..............ரூபா.............சதம்)

06. 1 லீற்றர் தேங்காயெண்ணெயின் விலை ரூபா 60 எனின் 750 மில்லிலீற்றர் தேங்காயெண்ணெயின் விலை யாது?
(..............ரூபா.............சதம்)

07. மூன்று முட்டைகளின் விலை ரூபா 15.00 ஆகும். அதன்படி 7 முட்டைகளின் விலை யாது?
(..............ரூபா.............சதம்)

08. நான் கடைக்குச் சென்று ஒரு பென்சில் ரூபா 6.00 வீதம் 4 பென்சில்களும் ஒரு குமிழ்முனைப் பேனா ரூபா 12.00 வீதம் 4 பேனைகளும் வாங்கி 100 ரூபா கொடுத்தால் மீதிப்பணம் எவ்வளவு?
(..............ரூபா.............சதம்)

09. ஒரு செங்கற் குவியலில் 41,000 செங்கற்கள் இருந்தன. அச் செங்கற் குவியலில் இருந்து ஒரு செங்கல் எடுக்கப்பட்ட பன் மீதியாக உள்ள செங்கற்கள் எத்தனை?
(......................................)

10. 2 மீற்றர் நீளமுள்ள ஒரு கம்பியில் இருந்து 20 சென்ரிமீற்றர் கொண்ட எத்தனை துண்டுகள் வெட்டலாம்?
(......................................)

11. 0.2, 0.4, 0.6, 0.8 எனும் இவ்வெண் கோலத்தில் வெற்றுக் கூண்டுக்குள் வரவேண்டிய எண்ணை எழுதுக.
(......................................)

12. ஒரு விழா முற்பகல் 10.45 மணிக்கு ஆம்பமாகி பிற்பகல் 3.30 மணிக்கு நிறைவுற்றது. அதன்படி, விழா நடைபெற்ற கால அளவு யாது?
(......................................)

13. 75cm கம்பியின் விலை 30.00 ஆகும். அதன்படி 1m கம்பியின் விலை யாது?
(......................................)

***18) நான் காலையில் நேரத்தோடு பாடசாலைக்குச் சென்றேன். எமது வகுப்பிற்குள் நுழைந்தபோது வகுப்பறைக் கூரையின் மேலிருந்த புறாக்கூட்டில் இருந்து புறாக்குஞ்சு ஒன்று கீழே விழுந்து கிடந்தது....*** இதனைத் தொடர்ந்து ஆறு வாக்கியங்கள் எழுதுக. (எழுவாய் பயனிலைத் தொடர்பு திருத்தமான ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.)

01. ..............................................................................
..............................................................................
02. ..............................................................................
..............................................................................
03. ..............................................................................
..............................................................................
04. ..............................................................................
..............................................................................
05. ..............................................................................
..............................................................................
06. ..............................................................................
..............................................................................



**வி. அன்பழகன்,**
யாழ் / இந்து ஆரம்ப பாடசாலை, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 077 3068999.

# அறிவும் செல்வமும்

இந்த உலகத்தில் நாம் நன்றாக வாழ வேண்டுமானால் அதற்கு முக்கியமாக இரண்டு தேவைப்படுகிறது. ஒன்று செல்வம் மற்றொன்று அறிவு.

சரி..''இந்த இரண்டில் எது சிறந்தது?'' என்று ஒரு கேள்வியைக் கேட்டால் அதற்கு என்ன பதில் சொல்வது?''

இதே கேள்வியை ஹஸ்ரத் அலியிடம் பத்து பேர் கேட்டிருக்கிறார்கள். ஹஸ்ரத் அலி ஒரு பெரிய அறிஞர். கேள்வியைக் கேட்டவர்களும் சாதாரண ஆள்கள் இல்லை.. அவர்களும் அறிஞர்கள் தான்.

ஒரு நாள் ஹஸ்ரத் அலியிடம் பத்து அறிஞர்கள் வந்து, ''ஐயா, நாங்கள் பத்து பேரும் உங்களிடம் ஒரே கேள்வியைக் கேட்க வந்துள்ளோம். ஆனால் எங்கள் பத்து பேருக்கும் நீங்கள் தனித்தனியாகப் பதில் சொல்ல முடியுமா?'' என்று கேட்டார்கள்.

அதாவது, அவர்கள் ஒரே கேள்விக்கு இவரிடமிருந்து பத்து விதமான பதில்களை எதிர்பார்த்தார்கள்.

''சரி, கேளுங்கள். என்ன கேள்வி?'' என்றார் ஹஸ்ரத் அலி. அதற்கு அவர்கள், ''செல்வம், அறிவு ஆகிய இந்த இரண்டில் எது சிறந்தது?'' என்ற கேள்வியை அவரிடம் எழுப்பினார்கள்.

ஹஸ்ரத் அலி அவர்களை ஒவ்வொருவராகக் கூப்பிட்டு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பதிலைக் கூறி அனுப்பினார்.

முதலில் அலி அவர்களை ஒவ்வொருவராகக் கூப்பிட்டு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பதிலைக் கூறி அனுப்பினார்.

முதலில் ஒருவரிடம், ''அறிவு என்பது தீர்க்க தரிசிகள், மகான்கள், பெரியோர்கள், சான்றோர்கள் போன்றவர்களது பரம்பரைச் சொத்து. ஆனால் செல்வமோ கொடுங்கோலர்களின் ஆயுதம். அதனால் அறிவு தான் சிறந்தது'' என்றார்.

இரண்டாமவரிடம், ''உங்களிடம் செல்வம் இருந்தால் நீங்கள் தான் அதைக் காப்பாற்ற வேண்டும். ஆனால் அறிவு உங்களை எப்போதும் காப்பாற்றும். ஆகவே அறிவு தான் மேலானது'' என்றார்.

மூன்றாவது ஆளிடம், ''செல்வம் இருப்பவனுக்கு எப்போதும் விரோதிகள் அதிகம். ஆனால் அறிஞனுக்கு நண்பர்கள் அதிகம். அதனால் அறிவுதான் உயர்வானது'' என்று விளக்கினார்.

அடுத்தவரிடம், ''செல்வம் அடுத்தவர்களுக்கு கொடுக்க கொடுக்க குறையும். ஆனால் கல்வியோ மற்றவர்களுக்குக் கொடுக்க கொடுக்க அதிகரித்துக் கொண்டேயிருக்கும். எனவே அறிவுதான் சிறந்தது'' என்றார்.

இன்னொருவரிடம், ''அறிவுள்ளவன் அதை எப்போதும் அடுத்தவர்களுக்கு வாரி வழங்கிக் கொண்டேயிருப்பான். அதனால் அவனிடம் தாராளத் தன்மையிருக்கும். பணக்காரனிடமோ கஞ்சத்தன்மை தான் இருக்கும். எனவே அறிவு தான் சிறந்தது'' என்றார்.

ஆறாவது நபரிடம் ''செல்வத்தைக் கள்வர்கள் திருடிக் கொண்டு செல்ல முடியும். ஆனால் அறிவைக் கவர முடியாது'' என்றார்.


ஏழாவது நபரிடம், ''செல்வம் கால ஓட்டத்தில் அழிந்து விடும். ஆனால் அறிவைக் கால ஓட்டம் ஒன்றும் செய்ய முடியாது'' என்றார்.

எட்டாவது நபரிடம், ''செல்வம் கால ஓட்டத்தில் அழிந்து விடும். ஆனால் அறிவைக் கால ஓட்டம் ஒன்றும் செய்ய முடியாது'' என்றார்.

எட்டாவது நபரிடம், ''செல்வத்துக்கு எப்போதும் எல்லை உண்டு, நிறை உண்டு, கணக்கு உண்டு, ஆனால் அறிவுக்கோ அப்படிப்பட்ட எல்லை எதுவும் கிடையாது. அதனால் அறிவு தான் உயர்ந்தது'' என்றார்.

அடுத்தவரிடம், 'செல்வம் உள்ளத்தில் பிரகாசிக்கும் ஒளியைப் போக்கிவிடும் இருட்டை உண்டாக்கி விடும்; விரிந்த மனப்பான்மையைக் குறுகலாக்கி விடும். ஆனால் அறிவு அப்படியில்லை. அது இருண்ட உள்ளத்தில் ஒளியைப் பாய்ச்சி அதை விசாலப்படுத்தும். ஆதலால் அறிவுதான் சிறந்தது'' என்றார்.

கடைசியாகப் பத்தாவது நபரிடம், ''செல்வம் மனத்தில் கர்வத்தை உண்டாக்குகிறது; ஆணவத்தை ஏற்படுத்துகிறது. அதனால் அது, ''நானே கடவுள்' என்று நினைக்கும் அளவுக்கு மனிதனைத் தாழ்த்தி விடுகிறது. ஆனால் அறிவு பணிவையும் பண்பாட்டையும் வளர்க்கிறது. ஆதலால் அறிவுதான் உயர்ந்தது'' என்றார்.



ஆக இப்படி பத்துப் பேருக்கும் பத்து விதமான பதில்களைச் சொன்னதன் மூலம் ஹ்ஸ்ரத் அலி, அறிவுதான் செல்வத்தை விட உயர்ந்தது என்பதற்குப் பத்து காரணங்களைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# தமிழ் நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்டு ஸ்தாபிதம் செய்த வளலாய் பிள்ளையார்

**ஞானி**



**15** ஆம் நூற்றாண்டில் தமிழ்நாடு கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நாகர் கோயிலில் இருந்து நிலப் பிரபு வாள வீரமாணிக்கம் தன்னுடன் எடுத்து வந்து தான் தங்கியிருந்த அச்சு வேலி வளலாய் பகுதியில் பிரதிஷ்டை செய்து வழி பட்டதோடு கோயிலும் அமைத்தார்.

அந்த மூல விக்கிரக மான அருவுருவ மூர்த்த மான கல்லே இன்னும் மூலஸ்தானத்தில் பிர திஷ்டை செய்யப்பட்டுள் ளது.

1950 ஆம் ஆண்டு வேதாகம முறைப்படி உருவாக்கப்பட்ட பிள்ளையார் விக்கிரகத்தை மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்து அருவுருவ மூர்த்தத்தை இரண்டாவது மண்டபத்தில் வைத்து மகாகும்பாபிஷேகம் செய்த வேளையில் குட முழுக்கு நடத்திய முத்துக்குருக்களின் கனவில் இரவு தோன்றிய விநாயகப் பெருமான் அதிருப்தி தெரிவித்ததை அடுத்து காலையில் மீண்டும் அருவுருவ விக்கிரகம் மூலஸ்தானத்தில் பிர திஷ்டை செய்யப்பட்டது.

வேதாகம முறைப்படி உருவாக்கப்பட்ட விக்கிரகம் இரண்டாம் மண்டபத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இன்றும் மூலஸ்தானத்தில் அருவுருவ வடிவமே பிரதிஷ்டை செய்யப்பட் டுள்ளது.

அச்சுவேலி வளலாய்ப் பிள்ளையார் அச்சுவேலி தொண்டமானாறு பிரதானவீதியில் தம்பாலைச் சந்தியில் இருந்து மேற்கு நோக்கி செல்லும் பலாலிவிமான நிலைய வீதியில் இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. அண் மைக்கால யுத்த நடவடிக்கையால் சேதமடைந்த நிலையில் உள்ள ஆலயம் பெரும்பொருள் செலவில் புனரமைப்புச் செய்யப்படுகின்றது.

ஆலயத்தின் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள அருவுருவ மூர்த்தம் நிலப்பிரபு வான வீரமாணிக்கம் கைகளுக்கு கிடைத்ததே அற்புதம்.

வளலாய் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் உள்ள பகுதி 'குருக்கள் வளவு' என இன்றும் அழைக்கப்படு கின்றது. குருக்கள் வளவில் இருந்து கோயிலுக்கு நடைப்பாதை இருந்து வந்தது. அந்தப் பகுதி இன்றும் 'வழிநடை' என்றே அழைக்கப்படு கின்றது.

தமிழ்நாடு கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நாகர் கோயில் பகுதி சேரமரவினரான திருவிராங்கூர் மன்னர் ஆட்சியில் இருந்த காலப்பகுதியில் நிலப் பிரபுவான வீரமாணிக்கம் உண வுப் பொருள்களைக் களஞ்சி யப்படுத்தி வைத்து பற்றாக்குறை ஏற்படும் காலத்தில் விநியோகம் செய்வதற்கு பொறுப்பாக இருந் தவர், அவர் தனது விளை நிலங்களை ஒரு நாள் பார்வை யிடச் சென்ற வேளையில் கேணி ஒன்றில் சிறுவன் ஒருவன் நீச்சல் அடித்து விளையாடிக் கொண்டி ருந்தான். புதியவனான சிறுவன் கேணியில் நீச்சல் அடிப்பதை அவதானித்த வீரமாணிக்கம் சிறுவனை அதட்டி, ''நீ யார்?,என வினாவினார் குறும்புத்தனமாக பதில் கூறாமல் சிறுவன் விளை யாடினான். கோபம் அடைந்த வீரமாணிக்கம் சிறுவனை பிடித்து தண்டனை வழங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு கேணியில் இறங்கினார். சிறுவன் நீரில் மூழ்கி மறைந்தான். வீரமாணிக்கமும் நீரில் மூழ்கி சிறுவனைத் தேடி னார் சிறுவனைக் கண்டு கொள்ள முடியவில்லை வித்தியாசமான கல் ஒன்று கையில் சிக்கியது.

சிறுவனுக்கு என்ன நடந்தது என்ற ஆழமான சிந்தனையோடு கவலை அடைந்த வீரமாணிக்கம் சிறுவனை கேணிக்கு வெளியேயும் தேடியதோடு கையில் சிக்கிய வித்தியாசமான கல்லை மர அடியில் வைத்துவிட்டு மறைந்த சிறுவனை எண்ணியவாறு வீட்டிற்குள் வந்து கவலையோடு இருந்தார். அன்று இரவு வீரமாணிக்கத்தின் கனவில் தோன்றி ''கேணியில் சிறுவனாக நின்றது தான் என்றும்; வித்தியாசமான கல்லாக இருப்பது தானே என்றும்; அதனை பிரதிஷ்டை செய்து வழிபாடு செய் என்றும்'' பிள்ளையார் கூறினார். கனவில் கேட்டதை சிரமேற்கொண்டு தன்னுடன் எடுத்துச் சென்று வழிபாடு செய்து வந்தார்.

சில தினங்களில் அரசருக்கும் அவருக்கும் ஏற்பட்ட மனக் கசப்பை அடுத்து புலம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். யாழ்ப்பாண அரசனை சந்தித்து தனது நிலையை எடுத்துக் கூறி தனக்கு கௌரவமான வாழ்வு வழங்குமாறு விண்ணப்பித்தார்.

யாழ்ப்பாண அரசன் வளம்பெற்று விளங்கிய வளலாய் பகுதியை வீரமாணிக்கத்துக்கு வழங்கி தமிழ் நாட்டில் மேற்கொண்ட பணியை மேற் கொள்ளுமாறு பணித்தாகவும் வளலாயில் தங்கி தனது பணியை மேற்கொண்ட வீரமாணிக்கம் தன்னோடு எடுத்துவந்த அருவுருவ மூர்த்தமாகிய கல்லை வளலாயில் பிரதிஷ்டை செய்து சிறுகோயில் அமைத்து வழிபாடு இயற்றி வந்தார்.

குடிசைக் கோயிலுக்கு சுண்ணாம்பினால் கட்டடம் அமைத்து வழிபட்டார் கோயில் அமைத்த பின்னர் அவரது வாழ்வு மேலும் சிறந்தது. மக்கள் பிள்ளையாரை வியந்து வழிபட்டனர். நேர்த்திகள் நிறைவேறின. வீரமாணிக் கத்துக்குப் பின்னர் அவரது சந்ததியினரும் வளலாய்ப் பகுதியில் வசித்து வந்த நகரத்தார் எனப்படும் வர்த்த சமூகத்தினரும் கோயிலை பராமரித்தனர்.

போர்த்துக்கீசரது ஆட்சியில் இந்து ஆலயங்கள் இடித்த ளிக்கப்பட்ட வேளையில் வள லாய்ப் பிள்ளையார் மூலவிக்கிர கமான அருவுருவ மூர்த்தம் இந்துக்களினால் பொருத்தமான முறையில் மறைக்கப்பட்டு வைக் கப்பட்டதோடு மத அடக்கு முறை ஒழிந்து மீண்டும் சைவ ஆலயங்கள் வழிபாட்டுக்கு நிர் மாணிக்கப்பட்ட வேளையில் மறைத்து வைத்த மூல விக்கிர கத்தை மீண்டும் வைத்து மக் கள் வழிபட்டதோடு கோயில் கட்டி வழிபட்டனர். வளலாய் பகுதி யில் வாழ்ந்த நகரத்தாரும், வேதா ரணியக் குருக்கள்மாரும் ஆல யத்தை உரிய முறையில் பராமரித்து பூசை வழிபாடுகள் உற்சவங்களை மேற்கொண்டு வந்தனர்.

வளலாய் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் உள்ள பகுதி 'குருக்கள் வளவு' என இன்றும் அழைக் கப்படுகின்றது. குருக்கள் வளவில் இருந்து கோயி லுக்கு வழிநடைப்பாதை இருந்து வந்தது. அந்தப் பகுதி இன்றும் 'வழிநடை' என்றே அழைக் கப்படு கின்றது. நகரத்தார் வாழ்ந்த பகுதி ''நகரத்தார் வளவு'' செட்டி வளவு என்றே இன்றும் அழைக்கப்படுகின் றது. கோயில் அமைந்திருக்கும் காணியும் அதன் சுற்றாடலும் 'வீரமாணிக்கம் புலம்' என்றே அழைக் கப்படுவதோடு காணிகளின் உறுதி ஆவணங்களிலும் அவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளது.

(தொடரும்)

# போராட்டத்தின் அடுத்த கட்டத்தை கிழக்கு தமிழ் மக்களே தீர்மானிப்பர்

## அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு



எருவில்,ஓக.24

இன்று சர்வதேசத்தின் வாசற்படியில் தட்டிக்கொண்டிருக்கின்ற தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் அடுத்த கட்டத்துக்கு நகர்வதற்கான வழி கிழக்கு மாகாண மக்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, சாகாமம் வீதியில் கூட்டமைப்பின் வேட்பாளர் சின்னையா சியாம் சுந்தரின் கட்சி அலுவலகம் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நல்லிணக்க ஆணைக்குழுவில் இருக்கின்ற பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென ஐ.நா. சபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தபோது ஆதரவாக இருந்த வல்லரசுகளான அமெரிக்கா, இந்தியா உட்பட 25 நாடுகள் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமெனக் கொடுத்த அழுத்தம் இப்பொழுது இருக்கிறது. இந்த அழுத்தம் இலங்கை அரசுக்கு நெருக்கடியான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த அழுத்தத்தில் இருந்து அரசு தப்புவதற்காக கிழக்கு மாகாணசபைத் தேர்தலை கையிலே எடுத்துள்ளது.

ஆகவே, இந்த நெருக்கடிக்கு எந்த வகையில் பதில் கொடுக்க வேண்டும் என்பது கிழக்கு மாகாண தமிழ் மக்கள் எடுக்கின்ற முடிவாக இருந்து கொண்டிருக்கின்றது.

கடந்த 4 வருடங்களாக கிழக்கு மாகாணத்தில் வீதி அபிவிருத்தி, உள்கட்டுமானம், பாலம், குளம், உள்வீதிகள் போன்றவைகளை புனரமைப்பதற்கு ஜப்பான், கொரியா மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி, பிரான்ஸ், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனம் என்பன நிதியுதவி வழங்கியிருந்தன. வடக்கு, கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் அபிவிருத்திக்காக கொடுக்கப்பட்ட பல மில்லியன் ரூபாவைக் கொண்டே இந்தப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை அரசால் எந்தவிதமான நிதி ஒதுக்கீடும் ஒதுக்கப்படவில்லை- என்றார். (ச-31)

> வல்லரசுகளான அமெரிக்க இந்தியா உட்பட 25 நாடுகள் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமெனக் கொடுத்த அழுத்தம் இப்பொழுது இருக்கிறது.



வாழைச்சேனை கைலாசபிள்ளையார் ஆலயத்தின் தீர்த்தத் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை வாழைச்சேனை பாசிக்குடா கடலில் நடைபெற்றது.

# மட்டு. நகரை அழகுபடுத்த நிதியை வழங்கத் தயார்

## கோத்தபாய கூறுகிறார்



எருவில்,ஓக.24

மட்டக்களப்பு நகரத்தை அழகுபடுத்துவதற்குத் தேவையான அனைத்து நிதியுதவிகளையும் பெற்றுக்கொடுக்கத் தான் ஆயத்தமாக உள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற மட்டக்களப்பு நகர அபிவிருத்தி தொடர்பான மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பு மாநகரம் அழகாகக் காட்சியளிக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டம் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்த இடமாகும். இங்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றார்கள். இந்த நகரத்தைச் சுத்தமாக வைத்திருப்பதுடன் அழகாகவும் வைத்திருக்க வேண்டும். இதனால் இங்குள்ள புராதன சின்னங்கள், இடங்கள் பாதுகாக்கப்படல் வேண்டும்.

மட்டக்களப்பு மாநகரத்தை எனது அமைச்சின் கீழுள்ள நகர அபிவிருத்தித் திணைக்களத்தினுடாக அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நிதியுதவியை வழங்கத் தயாராக உள்ளேன். இந்தநிலையில் நீங்கள் அதற்கான திட்டத்தைத் தந்தால் அதற்கு உதவத் தயாராக உள்ளேன்.

எமது அரசு மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திக்காக மிகக் கூடுதலான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. அதன் மூலம் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைபெற்று முடிந்துள்ளன. அதேபோன்று மேலும் பல அபிவிருத்திகள் நடைபெற்று வருகின்றன. இங்குள்ள பழைய இடங்களைப் பாதுகாத்துக் கொள்வது நமது பொறுப்பாகும். எதிர்காலத் தில் இந்த அரசின் மூலம் மட்டக்களப்புக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க ஆயத்தமாக உள்ளேன் - என்றார். (ச-31)

# கந்தளாயில் ஆயுதங்களுடன் ஒருவர் கைது

திருகோணமலை,ஓக.24

திருகோணமலை, கந்தளாய்ப் பகுதியில், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களை வைத்திருந்த நபர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் இருந்து கைக்குண்டு ஒன்றும், ரி 56 ரக தோட்டாக்கள் 26 மற்றும் துப்பாக்கி ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

தம்பலகாமம் நீதிமன்றத்துக்குஅண்மையில் வைத்தே இவர்கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் மற்றும் குற்றப் புலனாய்வு பிரிவினர் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச)



சாமிமலை மாநெலி தோட்டத்தைச் சேர்ந்த மாக்கலை பிரிவில் திடீரென ஏற்பட்ட தீ விபத்துச் சம்பவத்தில் எரிந்து கிடக்கும் லயன்களைக் காணலாம்

# அரசுடன் இணைந்து கிழக்கு நிர்வாகத்தை ஏற்படுத்த முனைவது வரலாற்றுத் துரோகம்

## ஜனநாயக மக்கள் முன்னணியின் செயலாளர் கூறுகிறார்

மட்டக்களப்பு,ஓக.24

கிழக்கு மாகாண நிர்வாகத்தை எவரும் அரசுடன் இணைந்து ஏற்படுத்த முயல்வதானது, வரலாற்றுத் துரோகமாக அமையும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் செயலாளர் ந.குமரகுருபரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் பேசும் மக்களான தமிழர்கள், முஸ்லிம்கள் தமது அரசியற் தலைமையை எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலூடாகத் தெளிவாக அடையாளம் காண்டு ஒன்றிணைந்து கிழக்கு மாகாண நிர்வாகத்தைக் கைப்பற்றவேண்டும்.

கிழக்கு மாகாணத்தின் ஆட்சியை ஒருபொழுதும் தனிமனித தலைமைகள் உதிரிக் கட்சிகளால் ஏற்படுத்த முடியாது. மாறாக, களயதார்த்தத்தைப் பார்க்கும்போது முஸ்லிம் காங்கிரஸும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பரஸ்பரம், ஒருமைப்பாட்டுடன் இணைந்தே நல்லாட்சியைச் சிறந்த உதாரணமாக முன்னெடுக்கவேண்டும். முஸ்லிம் காங்கிரஸுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கிழக்கு வாழ் தமிழ் பேசும் சமூகம் சார்ந்த வரலாற்றுக் கடமை ஒன்றிருக்கின்றது.

தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஒருபோதும் தெற்கில் ஆட்சியில் பங்குபோட முனையவில்லை. ஆனால், அதிகாரப் பகிர்வைச் செய்ய விரும்பாத அரசியற்தீர்வை இதுவரை தரமுடியாத, பள்ளிவாசல்களையும், கோயில்களையும் இல்லாமற் செய்யும் கைங்கரியத்திற்கு ஆதரவு வழங்கும் அரசுடன் இணைந்து பூர்வீக தமிழ் பேசும் மாகாணத்தில் ஆட்சி அமைப்பது வரலாற்றுத் துரோகம் மட்டுமல்ல, ஏனைய சமுதாயங்களும் சர்வதேசமும் பரிகசிக்கும் விடயமுமாகும். எனவே, தமிழ், முஸ்லிம் மக்களின் ஏகோபித்த அரசியற்தலைமைகள் இணைந்தே கிழக்கின் நிர்வாகத்தைக் கைப்பற்றவேண்டியது காலத்தின் கட்டாயம் என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும்.- என்றார். (ச)

# எனது ஏறாவூர் பேச்சைத் திரிபுபடுத்தி அரசியல் கபடம் செய்ய சிலர் முயற்சி

## பசீர் சேகுதாவூத் குற்றச்சாட்டு

> நான் ஏறாவூரில் பேசிய பேச்சை தவறாக விளங் கிக்கொண்டு அதை வைத்து அரசியல் இலாபம் தேட சிலர் முயற்சிக்கின்றனர். இது அவர்களின் அரசியல் வங்குரோத்துத்தனமாகும்.

மட்டக்களப்பு, ஓக.24

நான் என்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கே வாக்களிக்குமாறு கூறுவேன். எனது ஏறாவூர் பேச்சை திரிபுபடுத்தி அரசியல் கபடத்தைச் செய்ய சிலர் முயல்கின்றனர். இது அவர்களின் அரசியல் வங்குரோத்துத்தனமாகும் என்று பிரதி அமைச்சர் பசீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

அதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நான் ஏறாவூரில் பேசிய பேச்சை தவறாக விளங்கிக்கொண்டு அதை வைத்து அரசியல் இலாபம் தேட சிலர் முயற்சிக்கின்றனர். இது அவர்களின் அரசியல் வங்குரோத்துத்தனமாகும். இந்தக் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் அரசுடன் இணைந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடும் என இருந்தது.

இதற்கான பேச்சுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அந்தத் தருணத்தில் எனது சொந்த ஊரான ஏறாவூரை ஒற்றுமைப்படுத்துவதற்காக ஏறாவூர் நகரசபை தலைவர் அலிசாஹீர் மௌலானவை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைக்க விரும்பினேன். அந்த வகையில் இதற்கான பேச்சிலும் ஈடுபட்டேன். இந்தப் பேச்சில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமும் கலந்துகொண்டார்.

இந்தவேளையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அரசும் இணைந்து கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட இருந்த சூழ்நிலையில், அலிசாஹீர் மௌலானா ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் பட்டியலில் கையொப்பம் இட்டார்.

இதன் பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்த போது, அவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிட முன்வந்தாலும் அவர் ஏற்கனவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் கையொப்பம் இட்ட காரணத்தினால் அதை அங்கு இரத்துச்செய்துவிட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர் பட்டியலில் களமிறங்க முன்வந்தார்.

எனினும், இரண்டு கட்சிகளிலும் கையொப்பம் இட்டால் சட்ட ரீதியாக அவரின் பெயர் இல்லாமல் போய்விடும் என்ற காரணத்தினாலும் அவர் அங்கு வெளியே வரமுடியாமல் இக்கட்டில் மாட்டிக்கொண்டதால் மௌலானா ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடுகின்றார்.

இந்தத் தேர்தலின் பின்னர் அலிசாஹீர் மௌலானாவை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைப்பதற்கு முயற்சிக்கின்றேன்.

அந்த வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களிப்பவர்கள் முஸ்லிம் காங்கிரஸுக்கும் ஏறாவூரில் கேட்கும் வேட்பாளர் நசீர் ஹாபீஸுக்கும் வெற்றிலைக்கு வாக்களிப்பவர்கள் அலி சாஹீர் மௌலானாவுக்கும் வாக்களிக்க வேண்டும் என்பதையே கூறினேனே தவிர வெற்றிலைக்கு அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்று நான் கூறவில்லை.

எனவே, அனைவரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களிப்பதுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை வெற்றியடையச் செய்ய வேண்டும்-என்றார். (ச)

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எடுத்துக்கொண்ட பணிகளை சிறப்பாகச் செய்து முடிக்க, தீவிர முயற்சி மேற்கொள்வீர்கள். தொழிலில், சிற்சில சிரமங்கள் ஏற்பட்டு விலகும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களில், சில இடர்பாடுகள் ஏற்பட்ட போதும், பெரிய பாதிப்பு எதுவும் இருக்காது.

**இடபம்:** நீங்கள் நினைத்ததைச் செய்து முடிக்க, தயக்கம் கொள்ள மாட்டீர்கள். பெற்றோரின் உதவிகள் மிகுந்த பயன் தரும். வீட்டிலும், வெளியிடங்களிலும் என்ன தான் நல்லவிதமாக செயற்பட்டாலும், நற்பெயர் என்பது கொஞ்சம் கஷ்டமே.

**மிதுனம்:** காரணமற்ற கோபம், மனக் குழப்பம் காணப்படும். தேவையற்ற அலைச் சல்களை தவிர்த்துக் கொள்ளுங்கள். சந்திப்புகள் மன நிறைவை கூடுதலாக்கும். எதிர்கால சிந்தனைகள் சற்று அதிகம் இருக்கும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களால், வீண் அலைச்சலும், செலவுகளும் தான்.

**கடகம்:** மனநிறைவும், உற்சாகமும் அதிகரிக்கும். புதிய பொறுப்பு ஒன்று ஏற்படும். நிதி சம்பந்தப்பட்ட வகையில், எதிர்பார்க்கும் உதவிகள் கிடைக்கப் பெறும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள், மிகுந்த பயனுள்ளதாக இருக்கும்.

**சிங்கம்:** உங்கள் எண்ணங்கள் ஈடேறும். குடும்பம் மற்றும் தொழில் சம்பந்தப்பட்ட வகையில், அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கி முன்னேறுவீர்கள். நிதி நிலையில் எதிர்பாராத பற்றாக்குறை ஏற்பட்ட போதும், சாதுர்யமாகச் சமாளிப்பீர்கள். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களில், மிகுந்த கவனமான செயல்பாடு, நட்டத்தைத் தவிர்க்கும்.

**கன்னி:** உடல்நிலையையும் பொருட் படுத்தாது, பணிகளில் கவனம் செலுத்துவீர்கள். குடும்பப் பொறுப்புகளில், சில விடயங்கள் அதிகமாக யோசிக்க வைத்தபோதும், அதைத் தவிர்க்க முடியாது என்பதனை நினைவில் கொள்ளுங்கள். புதிய அறிமுகங்களால், எதிர் பார்த்த நன்மை கிடைக்கப் பெறும்.

**நாளை**

ஆவணி- 09 சனிக்கிழமை 25.08.2012
திதி: அட்டமி கா. 07.29 வரை
நட்சத்திரம்: அனுசம் பி.ப. 12.15 வரை
சுபநேரம்: 03.05- 04.35 வரை
ராகு காலம்: 09.05- 10.35 வரை

**துலாம்:** மனநிலையில் சோர்வு காணப்பட்ட போதும், சமாளித்து பணிகளைச் செய்து முடிப்பீர்கள். கல்வி, வேலை வாய்ப்பு வகையில் எதிர்பார்க்கும் தகவல்கள் கிடைக்கும். சில விடயங்களை பொறுமையோடும், பொறுப்போடும் செய்து முடிக்க வேண்டியிருக்கும். உறவினர்கள் உதவ முன் வருவர்.

**விருச்சிகம்:** எந்தவொரு காரியத்திலும், உங்களின் செயற்பாடுகள் எடுத்தோம், கவிழ்த் தோம் என்று இருக்கும். சற்று யோசித்த செயற் பாடுகள் அதிருப்தியைத் தவிர்க்கும். பணம் வரும் என்ற நம்பக்கையில், செலவுகளை தாராளமாக மேற்கொள்வீர்கள். குடும்பத்தில் கோப தாபங்களுக்கு குறைவிருக்காது. அமைதி காப்பது நல்லது.

**தனுசு:** மனதில் நினைத்த காரியத்தை நினைத்தபடி செய்து முடிப்பீர்கள். பண வரவுகள் திருப்தி தரும். உறவினர்கள், நண்பர்கள் வகையில் விருந்து, உபசரிப்புகள் உண்டு. உடல் ஆரோக் கியத்திற்காக, அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும்.

**மகரம்:** சில முக்கியஸ்தர்கள் சந்திப்பால், காரியங்களை எளிதாகச் செய்து கொள்வீர்கள். கணவன், மனைவியரின் கருத்து வேறுபாடுகள் நீங்கும். உறவினர், ஒருவரின் செயற்பாடு அதிகம் யோசிக்க வைக்கும். அலுவலகப் பணிகளில் வழக்கத்துக்கு மாறாக, சில செயற்பாடுகள் இருக்கும்.

**கும்பம்:** மறதி, அசதி, தாமதம் என்று இருந்தபோதும், அதையும் மீறி காரியங்களை வெற்றிகரமாக முடிப்பீர்கள். எதிர்பார்க்கும் வெளிவட்டார உதவிகள் கிடைக்கக் கூடும். நண்பர்களின் பழக்க வழக்கங்களால், செலவுகள் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்களுக்கும் வாய்ப்பு உண்டு.

**மீனம்:** மரியாதை நிமித்தமாக சிலரின் சந்திப்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள். சில பணிகளை மனதில் கொண்டு, விரைவாகச் செயற்படத் திட்டமிடுவீர்கள். ஓரளவுக்கு, உங்களின் திட்டம் நிறைவேறும். பணி முடிந்த போதும், பணவரவு சற்று தாமதப்படும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 5 | | 9 | | | |
| 7 | | 9 | 2 | | | | 1 | |
| | | | 8 | | 4 | 7 | | 9 |
| | | 2 | | 5 | 8 | 3 | | |
| 5 | 6 | | | 9 | | | 8 | 1 |
| | | 1 | 3 | 4 | | 2 | | |
| 8 | | | 6 | | 5 | | | 4 |
| | 2 | | | | 1 | 5 | | |
| | | | 4 | | 7 | | 6 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 6 | 4 | 9 | 7 | 8 | 1 | 5 |
| 4 | 7 | 1 | 2 | 8 | 5 | 6 | 9 | 3 |
| 9 | 5 | 8 | 3 | 6 | 1 | 7 | 2 | 4 |
| 6 | 8 | 9 | 1 | 5 | 3 | 2 | 4 | 7 |
| 5 | 4 | 7 | 9 | 2 | 6 | 1 | 3 | 8 |
| 2 | 1 | 3 | 7 | 4 | 8 | 9 | 5 | 6 |
| 1 | 6 | 4 | 5 | 7 | 9 | 3 | 8 | 2 |
| 8 | 3 | 5 | 6 | 1 | 2 | 4 | 7 | 9 |
| 7 | 9 | 2 | 8 | 3 | 4 | 5 | 6 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# நினைவஞ்சலி



தோற்றம்
16.08.1933

மறைவு
25.08.2008

தோற்றம்
01.02.1939

மறைவு
26.05.2010

அமரர் தா.இராமலிங்கம்
[ஓய்வு பெற்ற அதிபர், யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்]

திருமதி இ. மகேஸ்வரி

எமது வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்
வழிகாட்டிய எங்கள் பாசமிகு
பெற்றோரின் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மீசாலை வடக்கு, கொடிகாமம்.

[20851][5-6-7]



மாலைதீவு ஜனாதிபதி முஹம்மட் வாஹிட் ஹசன் நேற்று வியாழக்கிழமை இலங்கை வந்தடைந்தார். அவரை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்ட அரச முக்கியஸ்த்தர்கள் வரவேற்றனர்

# குழுக்களிடையே தகராறு; ஒருவர் வெட்டிக் கொலை

கொழும்பு,ஓக.24

இரத்மலானையில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதுடன், அவரது மனைவி கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இரண்டு குழுவினருக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறே இந்தச் சம்பவத்துக்குக் காரணம் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்த இரு குழுவினரும் சட்டவிரோத வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தமை தொடர்பில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் கூறினர். (ச)

# கைத்துப்பாக்கி மீட்பு

தம்புள்ள நீதிமன்றத்துக்கு அண்மையில் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் கைத்துப்பாக்கி ஒன்றை நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை பொலிஸார் மீட்டுள்ளனர்.

தம்புள்ள பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து இந்தக் கைத்துப்பாக்கி மீட்கப்பட்டது.தம்புள்ள நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்பான தடயப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்த அறையில் இருந்து இந்த கைத்துப்பாக்கி திருடப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ச)

# தெரிவுக் குழுவுக்கு வாருங்கள் கூட்டமைப்புக்கு அரசு அழைப்பு

**தாகமெனில் நீரைப் பருகுங்கள் என்று தண்ணீர் காட்டினார் அமைச்சர்**

''தாகம் என்றால் தண்ணீர் பருகவேண்டும். அதை விடுத்து தாகம் தாகம் எனக் கதறுவதில் பயனில்லை'' என்ற விடயத்தை உதாரணமாக சுட்டிக்காட்டி நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இலங்கை அரசு மீண்டும் அழைப்பு விடுத்துள்ளது.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் நடைமுறை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் பதிலளித்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா அரசின் சார்பில் மேற்கண்ட அழைப்பை விடுத்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் நலன்கள் பற்றி இன்று ஜே.வி.பியினர் அதிக அக்கறையுடன் பேசுகின்றனர். வங்குரோத்தடைந்துள்ள அரசியலைப் பலப்படுத்திக்கொள்வதற்காகவே தமிழர்கள் தொடர்பில் அவர்கள் நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர். அதிகாரப் பரவலாக்கலை எதிர்க்கும் ஜே.வி.பி. இன்று ஏன் நீலிக் கண்ணீர் வடிக்கின்றது ?

வடக்கில் போன்று தெற்கிலும் இனவாதிகள் உள்ளனர். அதனால்தான் இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு பொதுவானதொரு களமாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமித்தோம்.அதன் காலவரையறையை ஆறுமாதங்கள் எனவரையறுத்தோம். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்தக் குழுவுக்கு வரவில்லை. நாம் ஆரம்பத்தில் அழைப்பு விடுத்தபோது தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு இடம்பெற்றிருந்தால் தற்போது அறிக்கையைப் பெற்றிருக்கலாம்.

கடந்தகாலத்தைப் பற்றிப் பேசினால் நாம் பின்நோக்கியே செல்ல நேரிடும். இதைத் தடுக்கவேண்டும். - என்றார். (ச-சி)

# வட பகுதி இளைஞர்களை ஆயுதம் ஏந்த வழிவகுக்காதீர்

## விஜித ஹேரத் எம்.பி. ஆவேசம்

கொழும்பு,ஓக.24

வடக்கில் காணிகள் சுவீகரிக்கப்படுவது தொடர்ந்தால் மீண்டும் இனவாதம் துளிர்விடும். எனவே, வட பகுதி இளைஞர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்த வழி வகுக்க வேண்டாம். தமிழகத்தில் டெசோ மாநாட்டை கருணாநிதி நடத்துவதற்குக் கூட பக்கபலமாக - காரணமாக இருந்ததும் இலங்கை அரசுதான் என்று நாடாளுமன்றில் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் நடைமுறை தொடர்பான ஒத்திவைப்புவேளை பிரேரணை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் அரசியல் கைதிகள் சிறைக்காவலர்களை ஏன் சிறைப்பிடித்தார்கள்? அதற்கும் காரணம் இருக்கிறது. ஏற்கனவே, அங்கு சத்தியாக்கிரகம் இருந்த கைதி இடமாற்றம் செய்யப்பட்டு அவர் தொடர்பான தகவல்கள் மர்மமாக இருந்ததால்தான் சிறைக்காவலர்கள் சிறைப் பிடிக்கப்பட்டார்கள்.

ஜுலம்பிட்டிய அமரே சத்தியாக்கிரகம் மேற்கொண்டபோது அவருடன் பேச்சு நடத்தினீர்கள். பாதாளக் குழுத் தலைவர்களில் ஒருவரான அமரேவுடன் பேச்சு நடத்தும் நீங்கள் வவுனியாவில் சத்தியாக்கிரகம் இருந்த தமிழ்க் கைதிகளுடன் ஏன் பேச்சு நடத்த முன்வரவில்லை.

அவர்களைத் தாக்கினீர்கள். நிமலரூபன், டெல்றொக்ஷன் ஆகிய தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டார்கள். எனவே இந்தப் படுகொலை குறித்து நியாயமான விசாரணை நடத்த வேண்டும்.

> பாதாளக் குழுத் தலைவர்களில் ஒருவ ரான அமரேவுடன் பேச்சு நடத்தும் நீங்கள் வவுனியாவில் சத்தியாக்கிரகம் இருந்த தமிழ்க் கைதிகளுடன் ஏன் பேச்சு நடத்த முன்வரவில்லை.



1956 ஆம் ஆண்டும் இப்படியான சம்பவங்கள் இடம்பெற்றன. அதன் பின்னர்தான் கறுப்பு ஜூலையும் உருவானது. அதன் பெறுபேறுகளை நாம் கடந்த 30 வருடங்களாக அனுபவித்தோம். கடந்த காலங்களை மறந்து விடுங்கள் எனக் கூறும் அரசு இவற்றை திரும்பிப் பார்க்க வேண்டும்.

கருணா, கே.பி. ஆகியோருக்கு உயர் அந்தஸ்தை வழங்க முடியுமானால் தமிழ் அரசியல் கைதிகளை ஏன் உங்களால் விடுவிக்க முடியாது? எனவே, தமிழ்க் கைதிகளையும் விரைவில் விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசு மனித உரிமைகளைப் பேணி நடக்க வேண்டும். அதைவிடுத்து சர்வதேசத்தைத் திருப்திப்படுத்துவதற்காக நீங்கள் எடுக்கும் முடிவுகள் நாட்டு மக்களையே பாதிக்கும் - என்றார். (ச-சி)

# சட்டத்தை மீறி நடந்தால் முறைப்பாடு செய்யப்படும்

## தேர்தல்கள் ஆணையாளர் எச்சரிக்கை

கொழும்பு,ஓக.24

தேர்தல் சட்டங்களை மீறிய செயற்பாடுகள் மற்றும் அரச சொத்துக்களை பிரசாரங்களுக்கு பயன்படுத்தப்படுதல் தொடர்பில் ஊழல் ஒழிப்பு திணைக்களத்துக்கு முறையிடவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் இடம்பெறவுள்ள மூன்று மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக கட்சி செயலாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணையாளருக்கும் இடையிலான கலந்துரையாடலின்போதே, தேர்தல்கள் ஆணையாளர் இந்த விடயம் குறித்து தகவல் தெரிவித்ததாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோகண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

தபால் மூல வாக்களிப்பு பணிகளுக்காக கூடுதல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் தேர்தல் ஆணை யாளர் தெரிவித்தார். (ச).

# ஆணின் சடலம் மீட்பு

மாத்தளை,ஓக.24

மாத்தளை, யட்டவத்தை பகுதியில் நடுத்தர வயதுடைய ஆண் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை யட்டவத்தைப் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலத்தை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

மாத்தளை நீதிமன்ற நீதிவானின் உத்தரவுக்கு அமைய சடலத்தை பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கவும் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ச)

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க உடன் நடவடிக்கையை ஆரம்பிக்குக

## சபையில் சுவாமிநாதன் கோரிக்கை

கொழும்பு,ஓக.24

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். சுவாமிநாதன் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்தார்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் நடைமுறை தொடர்பிலான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மூன்று தசாப்த கால போர் முடிவடைந்து மூன்று வருடங்கள் கழிந்துள்ள இந்தச்சந்தர்ப்பத்தில் வடக்கு, கிழக்கு மக்கள் நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் மக்கள் அனுபவிக்கும் சுதந்திரத்தை அனுபவிக்கின்றார்களா என்பதைப் பற்றி சற்றுச் சிந்திப்பது சிறந்ததாகும்.

வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் என்ற செயற்றிட்டங்கள் அரசினால் முன்வைக்கப்பட்டு வருகின்ற போதும் உண்மையிலே அந்த வசந்தத்தையோ, அந்த உதயத்தையோ மக்கள் அனுபவித்து வருகின்றார்களா என்பதைப் பற்றி ஆராய்வது முக்கியமாகும்.

அண்மையில் வெளிநாட்டுப் பிரதிநிதி ஒருவர் வடக்குக்குச் சென்றபோது தெரிவித்த கருத்தை அடிப்படையாக வைத்து எமது மக்கள் அனுபவிக்கும் துன்பங்களைக் கோர்த்துக் கூறுவதற்கு இந்தச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கிறேன். அந்த வெளிநாட்டுப் பிரதிநிதி கூறிய கருத்து என்னவெனில் பாதைகளை அமைத்துவிட்டு பிரதேசத்தை அபிவிருத்தி செய்துவிட்டதாகக் கூறமுடியாது. பாதைகள் அமைப்பது அங்குள்ள மக்களின் பட்டினிக்கு ஈடாகாது என்ற சாயல்படக்கூறிய கருத்தை அவதானிக்க வேண்டும். 30 வருட கால போரின் கோரப்பிடியில் சிக்குண்டு தமது வாழ்க்கையை சீரழித்த மக்கள் போர் முடிவடைந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்திலும் துன்பத்தை அனுபவிப்பதற்கு இடமளிக்க முடியாது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு ஏன் காலதாமதம் ஏற்படுத்தி வருகிறது? இந்த அறிக்கை அரசின் அறிக்கையாகும். அதனை நடைமுறைப்படுத்துவதற்கு ஏன் காலதாமதம்?

அரசும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதற்கு முன்னர் பல்வேறு கட்டப் பேச்சுகளை நடத்திய போதும் அவையனைத்தும் தோல்வியிலேயே முடிந்ததைக் காணலாம். தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்க அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து காலம் கடத்தாது அரசு பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

ஒருவரை ஒருவர் குறை கூறி இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. இதய சுத்தியுடனும் திறந்த மனப்பான்மையுடனும் இப்பிரச்சினையைத் தீர்க்க முற்பட்டாலே சிறந்த ஒரு பெறுபேற்றைக் காண முடியும்.

வடக்கு கிழக்குப் பிரதேச இளம் தலைமுறையினருக்கு ஒரு சிறந்த எதிர்காலம் உருவாக்கப்பட வேண்டும். பிறந்த நாள் முதல் அவர்களின் காதுகளுக்கு எட்டிய தோட்டாச் சத்தம், குண்டுச் சத்தம், விமானக்குண்டுச் சத்தம் இனியும் இவர்களது காதுகளுக்கு வேண்டாம். வீணைச் சத்தமும், மேளச் சத்தமும் இவர்களது காதுகளுள் கேட்க வேண்டும். இவர்கள் விரும்புவதும் இதுவே. தோட்டாச் சத்தம் அல்ல- என்றார். (ச-சி)

## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையில்
கடந்த பல வருடங்களாகக்
கடமையாற்றி இறைபதம்
அடைந்த

**Dr.குமாரசாமி**
**சண்முகரெத்தினம்**

அவர்களின் மறைவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிசங்கம்,**
**பிரதேச வைத்தியசாலை, நயினாதீவு.** (22071) (2-6-7)

## 8 ஆம் ஆண்டு நினைவுகளில்....



தோற்றம்
09.12.1928

மறைவு
23.08.2004

### அமரர் செல்லையா தியாகராஜா

(ஓய்வு பெற்ற மதுவரி உதவி ஆணையாளர்)
திதி:- 24.08.2012

**அன்புள்ள அப்பாவுக்கு;**
எண்ணில்லாத உங்கள் அன்பைப் பிரிந்து
எட்டு ஆண்டுகள் ஓடியதோ? இல்லை;
எண்ணமெல்லாம் உங்கள் நினைவுடனே
எம் என்பு உருகும் வரை....

- அன்புடன் குடும்பத்தினர்.

*இல. 116, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.* (22049)(2-6-7)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை பரமநாதர்



காரைநகர், வேதரடைப்பை பிறப்பிடமாகவும் வேம்படி, காரைநகரை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பரமநாதர் ( நீர்ப்பாசனத் திணைக்கள இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர்) 21.08.2012 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற அருளம்பலம்- கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தேவகியம்மாவின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், ரவிமோகன், மாலினி, ரவிராஜன், ரவிரஞ்சன், சாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், லீலா, சிறீதரன், கலைமகள், ஜனார்த்தனன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, இராமநாதன், இலட்சுமணப்பிள்ளை, கணேச பிள்ளை, இராசம்மா, அருணாசலம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற பாலேந்திரா மற்றும் இராஜேந்திரா, யோகேந்திரா, குலேந்திரா ஆகியோரின் மைத்துனரும், ரவீனா, ஸ்ரபான், அஸ்மீரா, அஞ்சலி, ஹரிஸ், கார்த்திக் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.08.2012 ஞாயிற்றுக் கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
சிறி- (416)283-3746
மோகன் -(416) 566-1455
ரஞ்சன் - (416)726-8474
ஜனா-(416)918-4353

தகவல்:
அ.யோகேந்திரா,
வேம்படி, காரைநகர். (22043)(5-6-7)


## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வேம்படி, சென்றல் பாடசாலைகளுக்கு அருகில் முதலாம் குறுக்குத்தெருவில் வீட்டுடன் கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- 0776917030 (22035) (2-6-7)

## காணி விற்பனைக்கு உண்டு

சுன்னாகம், கந்தரோடை, ஆலடி ஒழுங்கையில் தனிக்கிணற்றுடன் கூடிய ஏழே முக்கால் (7¾) பரப்புக்காணி விற்பனைக்குண்டு. வயல்காணி.
தொடர்பு: 077 990 6054
075 040 6828
(22055)(5-6-7)

## பாடலாசிரியர் தேவை

இலங்கையில் தயாரிக்கப்படவுள்ள இசை அல்பம் ஒன்றிற்கு பாடல்கள் எழுத ஆர்வமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
facebook.com/Jaffnacinema
தொடர்பு: 077 036 5001
(22051)(5-6-7)

## காணி விற்பனைக்கு

முதலிய கோயிலடி கொக்குவில் மேற்கில் (கே.கே.எஸ். வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில், சேச் முன் ஒழுங்கை) 2 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:-
0776366308, 021 3735562 (22056) (2-6)

## காணி விற்பனைக்கு

நல்லூர் கோயில் வீதியில் கைலாசபிள்ளையார் கோயில் சந்திக்கு அருகில் பிரதான வீதியில் இருந்து 30 மீற்றர் தொலைவில் 12 அடி அகலப் பாதையில் அமைந்த 1¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.தொடர்பு:-0778275755 (22062) (2-6)

## காணி விற்பனைக்கு உண்டு

சுன்னாகம், கந்தரோடை, ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு முன்பாக, அருளானந்தப்பிள்ளையார் கோயிலுக்குச் செல்லும் வீதியில் கிணற்றுடன் கூடிய நெற்பரப்பு ஏழே முக்கால் (நெ.ப.7 ¾) (நிலப்பரப்பில் 05 பரப்பு) விஸ்தீரணமுள்ள காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:-0779672893 (22059) (2-6)

## விற்பனைப்பிரதிநிதிகள் (D.S.R) தேவை

எமது நிறுவனத்துக்கு விற்பனைப்பிரதிநிதிகள் (Sales rep) தேவைப்படுகின்றார்கள்.
விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் சுயவிவரக்கோவையுடன் சனிக்கிழமை (25.08.2012) காலை 9.30 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.
**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (22063) (2-6)

## வேலை வாய்ப்பு

கனேடிய இனோவேச் (Canadian Innovage) நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளைக்கு முகாமைத்துவப் பயிலுனர்கள் பின்வரும் பகுதிகளுக்குத் தேவைப்படுகின்றனர். Supervisor, Assistant Manager, Manager, Customer Care, Administration.
O/L, A/L தகைமையுடையோர் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
021 7200867, 0775566224
வயதெல்லை 18 - 3 0 வரை (22061) (2-6)


## துயர் பகிர்கின்றோம்

எமது கலாசாலை ஆசிரியை
கிறேஸ் மற்றில்டா அவர்களின்
பாசமிகு தாயார்

**கிறகோரி தங்கராஜா**
**செல்லம்மா**

அவர்கள் 28.07.2012 அன்று
இறைபதம் அடைந்து விட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஆங்கில மன்றம்,
பலாலி ஆசிரியர் கலாசாலை.
(22054)(5-6-7)


## Chundikuli Girls' College Jaffna

### New Admissions – 2013

**English Medium Nursery**

- For 3+ class only( Boys & Girls)
- Only limited vacancies
- Age: Born on or after 01.02.2009 and on or before 31.01.2010.
- Applications close on 14.09.2012
- Application forms (limited number) will be available at the College office from 23.08.2012.
- Interviews will be called soon after the submission of the applications.

Principal

(C/2585)(2-6)


## விழிநீரில் விளக்கெரியும் 09 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஜெகதீசனாய்
03.04.1959

ஜெகதீபமாய்
03.09.2003

திதி: பூர்வபக்க அட்டமி
(24.08.2012)

### அமரர் வைத்திலிங்கம் ஜெகதீஸ்வரன்

இல்லத்தின் இனிமையென உள்ளத்தில் உயிரென
புன்னகை பூவென நாம் பூரித்த உறவே....
இன்று நீயில்லை எனது ஏக்கம்
ஆண்டுகள் ஒன்பதாய்... ஆயிரம் வலிகள்
வாழ்ந்து களித்து வையக நியதியில்
போகுமுன்.... உனை காலன் அழைத்த
கடுகதி, அது கொடுவிதி.
இன்று நீயிருந்தால் எம் முற்றம் முழுக்க
முல்லை சிலிர்த்த வாசமிருக்கும்
பாசத்தேரில் எமை ஏற்றி
வீதியுலா வந்திருப்பாய்... வீடு
உன்னால் வெண்ணிலவென சிரித்திருக்கும்
நித்தமும் உன் நினைவு வெள்ளம் நீங்காத பாசமுகம்....
உனக்கேங்காத நாளில்லை
மீதி வழிபோகுமெங்கள் பாதையிலே
அன்புக்குரல் எடுத்து அழைத்துப் போவாய்
பாசத்தின் எம் திருவுருவே.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல*
*வெங்கடேஸ்வரப் பெருமானை வேண்டி உங்கள்*
*பாதத்தில் கண்ணீர்ப் பூக்களைச் சொரிகின்றோம்....*

*"ஸ்ரீரங்கம்",*
*374, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

என்றென்றும் உங்கள் நினைவில வாழும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள். (22205) (2-6-7)

## மரண அறிவித்தல்

### கந்தன் குணமாலை



புங்குடுதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சென்னை, பனையூரை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் குணமாலை 18.08.2012 சனிக்கிழமை சென்னையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன்-அன்னமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற யோசப்பு மற்றும் மேரிமெற்றலின் தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானசீலியின் பாசமிகு கணவரும், றஞ்சிதமலர்(கனடா), லீலாமலர், வசந்தமலர், தவசீலன் (லண்டன்), காலஞ்சென்ற றதிக்குமார் மற்றும் சந்திரமலர் (இந்தியா), உதயகுமார் ஆகியோரின் தந்தையும், சத்தியசீலன் (கனடா) காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் ஞானேஸ்வரன், கஜேந்திரன்(லண்டன்), பிரியாராணி (லண்டன்), தர்மினி ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற சபாரெட்ணம் (சபா) மற்றும் இராமசாமி (குட்டிக்கந்தன்), நாகேஸ்வரி (கிளி- சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(22060)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

# பொறுத்தது போதும்; பொங்கி எழுவோம்

## நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் ஆவேசம்



அகதிகள் சிறப்பு முகாம்களை இழுத்து மூடக் கோரி நாளை மறுதினம் மறியல் போராட்டம் நடத்த இருப்பதாக நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

சிங்கள பௌத்த இனவாத அரசின் திட்டமிட்ட இனப்படு கொலையில் இருந்து உயிர் தப்பி தமிழகத்தில் ஏதிலிகளாக அடைக்கலம் புகுந்த நம் ஈழத் தமிழ்ச் சொந்தங்களை சிறப்பு முகாம்களில் அடைத்து வதைத்து வரும் கொடுமைக்கு முடிவு கட்ட மீண்டும் போராட்டக் களத்தில் குதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

செங்கல்பட்டிலும், பூந்தமல்லியிலும் சிறப்பு முகாம்கள் என்ற பெயரில் தமிழக காவல்துறையின் கியூ பிரிவின் கண்காணிப்பில் இருந்து வரும் சித்திரவதை முகாம்களில் 40இற்கும் மேற்பட்ட ஈழத் தமிழ் சொந்தங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தங்கள் மீதான வழக்குகளில் அவர்கள் பிணை விடுதலை பெற்றுவிட்ட பின்னரும் இப்படி காலவரையற்று அடைத்து வைப்பது ஏன்? என்று நாம் எழுப்பிய கேள்விகள் அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்காகப் பயனற்றுப் போய் விட்டது.

**வதைக்கப்படும் எமது சொந்தங்கள்**

ஈழத் தமிழ் சொந்தங்களுக்கு அரசியல் சம உரிமை பெற இலங்கை அரசை இந்திய மத்திய அரசு வற்புறுத்த வேண்டும் என்று சுதந்திர தின உரையில் கூறிய தமிழக முதல்வர், நம் ஈழத்துச் சொந்தங்கள் அவரது ஆட்சியில் இங்கு தமிழ்நாட்டிலேயே வதைக்கப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று நாம் தமிழர் கட்சி கோரிக்கை விடுத்தது.

ஆனால் அதற்கு பயனெதுவும் கிட்டவில்லை. ஈழத் தமிழ் மக்களைக் கொன்று குவித்தபோது மௌனம் காத்த தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி, சென்னையில் கூட்டிய டெசோ மாநாட்டில் இங்குள்ள சிறப்பு முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளோரை விடுவிக்குமாறு ஒரு தீர்மானம் போடவில்லை. இப்படிப்பட்ட நிலையில் மீண்டும் போராட வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

கடந்த மாதம் 11ஆம் திகதி செங்கல்பட்டு முகாமை மறியல் செய்யச் சென்ற நாம் தமிழர் கட்சித் தொண்டர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். அதன் பிறகு விடுதலை செய்கிறோம் என்று உறுதியளித்து விட்டு மீண்டும் ஏமாற்றியுள்ளனர் தமிழக பொலிஸார் கியூ பிரிவு. தங்களை விடுவித்து தமிழ்நாட்டின் இதர முகாம்களில் வசிக்கும் சொந்தங்களுடன் வாழ விடுங்கள் என்பதுதான் சிறப்பு முகாம்களில் வாடும் நம் சொந்தங்களின் ஒரே கோரிக்கையாகும்.

ஆனால், அதற்கு மாவட்ட நிர்வாகங்களும், தமிழக காவல்துறையும் இதுவரை செவி சாய்க்கவில்லை. இலங்கையில் வன்னியில் இன்னமும் நம் சொந்தங்களை வதைக்கும் முள்வேலி முகாம்களை போல, இங்கே செங்கல்பட்டு, பூந்தமல்லி முகாம்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

**பட்டினிப் போராட்டம்**

ஏமாற்றத்திற்குள்ளான ஏதிலிகளில் ஒருவரான செந்தூரன், கடந்த 6ஆம் தேதி முதல் பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார். அவருடைய போராட்டத்தை கியூ பிரிவு பரிகாசம் செய்துள்ளது. இதனால் நொந்து போன செந்தூரன் இப்போது தண்ணீர் கூட குடிக்காமல் கடும் பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார். இதற்கு மேலும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது, மீண்டும் களமிறங்கிப் போராடித்தான் ஆக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

எனவே நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பூந்தமல்லி முகாம் முன்பு மறியல் போராட்டத்தில் ஈடுபடுவோம்என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

# செயற்கை அவயவ உற்பத்திக்கு பயிற்சி

## பெண்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஓக.24

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தினால் செயற்கை அவயவம் மற்றும் சார்புறுப்பு உற்பத்திப் பயிற்சி நெறிக்கு மாற்றுவலுவுடைய பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சின் பணிப்பாளரினால் ஸ்ரீலங்கா செயற்கை அவயவ உற்பத்திப் பயிற்சிக் கல்லூரியில் நடத்தப்படவுள்ள 3 வருட கால பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதற்கு அமைவாகவும், யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் செயற்கை அவயவம் மற்றும் சார்புறுப்பு உற்பத்தியில் பயிற்சி பெற்ற தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு வெற்றிடம் இருப்பதனாலும் யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் பரிந்துரை செய்யும் விண்ணப்பங்கள் சுகாதார அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

அதன் பொருட்டு விண்ணப்பதாரர்கள் க.பொ.த. சாதாரண பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் தமிழ்மொழி ஆகிய பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் பௌதிகவியல் அல்லது உயிரியல் பாடங்களில் திறமைச் சித்தியுடன் 3 விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் 18 முதல் 30 வயதுக்கு உட்பட்ட மாற்றுவலுவுடைய பெண்களாகவும் இருத்தல் வேண்டும்.

தகுதியுடையோர் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக இல.05, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்துக்கு தமது விண்ணப்பங்களை தபால் மூலமாக அனுப்பலாம்.

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தால் பரிந்துரை செய்யப்பட்டு பயிற்சி நெறியை முழுமையாகப் பூர்த்தி செய்பவர்களுக்கு யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தில் வேலைவாய்ப்பு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-14)

# வீதி புனரமைப்புப் பணி ஆரம்பம்

சாவகச்சேரி நகராட்சி மன்ற நிதியில் மேற்கொள்ளப்படவுள்ள தாளையடி அம்மன் கோயில் முதலாம் ஒழுங்கை ஒரு மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. நகராட்சி மன்ற உறுப்பினர் ந.திருக்குமரனின் வேண்டுகோளின் பிரகாரம் மன்ற நிதியில் ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டன. (3-9)

# 6 மாத காலப் பகுதியில் 120சிறைக் கைதிகள் தப்பியோட்டம்

இந்த ஆண்டின் கடந்த 6 மாத காலத்துக்குள் 120 சிறைக்கைதிகள் தப்பித்துச் சென்றுள்ளனர் என்று சம்பந்தப்பட்ட சிறைச்சாலைகளின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களுள் ஏறத்தாழ 70 பேர் வரையில் திறந்தவெளிச் சிறை முகாம்களிலிருந்தும் மற்றும் வெளி வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தபோதுமே தப்பித்துச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இதேபோல மருத்துவமனைகள் மற்றும் நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்த சந்தர்ப்பங்களிலேயே இவர்களுள் பெருமளவு சிறைக் கைதிகள் தப்பித்துச் சென்றுள்ளனர்.

2011 ஆம் ஆண்டில் மாத்திரம் 286 சிறைக் கைதிகள் தப்பித்துச் சென்றிருந்ததோடு அவர்களுள் 112 பேர் மீளவும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் சிறைச்சாலைகளின் அறிக்கைகள் தெரிவிக்கின் றன. சிறைச்சாலைகளில் உத்தியோகத்தர்களுக்கு நிலவும் பற்றாக்குறையே இந்த நிலைமைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.(3-22)

# நிதி ஒதுக்கீடு

வரணி பொது நூலகத்துக்கு புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்கும் மாசேரி கிழக்கு காட்டுப்புலம் வீதி புனரமைக்கவும் 1 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தனது 2012 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்தே இந்த நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார். (3-122)

60 ஆவது அகவை வாழ்த்தும்
32 ஆவது குருத்துவ நிறைவுநாள் வாழ்த்தும்



இன்று (24.08.2012) தனது 60 ஆவது பிறந்த நாளிலும் 29.08.2012 அன்று தனது குருத்துவ பணிவாழ்வின் 32 ஆவது ஆண்டு நிறைவிலும் மகிழ்வுற்றிருக்கும் அமல மரித்தியாகிகள் சபையின் வடமாகாண குரு முதல்வரும் எமது பங்கு ஈன்றெடுத்த மூத்த குருமணியுமாகிய அருட்பணி ம.போல்நட்சத்திரம் அடிகளார் (அ.ம.தி) அவர்கள் உடல், உள ஆன்மீக நலத்துடன் பணிவாழ்வில் மேலும் பல சிறப்புக்களைப் பெற்று வாழ்கவென புனித மிக்கேலின் பரிந்துரையுடன் இறையருள் வேண்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

பங்குத்தந்தையும், பங்கு மக்களும்.
புனித மிக்கேல் ஆலயம், உரும்பிராய். (ச/2567) (2-6-7)

மணிவிழா வாழ்த்து 24.08.2012



வல்லிபுராழ்வார் தேவஸ்தான பிரதமகுரு சக்கர அருள்முகவரதன் பிரம்மஸ்ரீ க.புருஷோத்தமக் குருக்கள் J/P, ஸ்ரீமதி ரஜனி அம்மா அவர்கள் அறுபதாவது ஆண்டை (ஷஷ்டியப்த பூர்த்தியை) எட்டுகின்ற இவ் வேளையில் தீர்க்காயுஷோடு நீடூழி வாழ குல தெய்வமான மிந்திரன் கண்ணகை அம்பாளை வேண்டுவதோடு அவர்களின் ஆசீர்வாதத்தையும் வேண்டுகின்றோம்.

சிவஸ்ரீ சி.இந்திரராஜா குருக்கள் குடும்பம்
மிந்திரன் கண்ணகை அம்மன் தேவஸ்தானம்
பரம்பரை பூசகரும் ஆதீனதர்மகர்த்தாவும்
(18725)(2-6-7)

**Raveens English Medium Classes Karaveddy**

மேற்படி நிறுவனத்துக்குரிய Grade 11 மாணவர்கள் பங்கு பெறும்
IMPROMPTU ORATORY (ENGLISH)
and
PRIZE GIVING DAY
முன் ஆயத்தமில்லாப் பேச்சும் பரிசளிப்பு விழாவும்

குறிப்பு: சபையோர் வழங்கும் விடயத்தலைப்புக்களுக்கே மாணவர்கள் பேசுவார்கள்
இடம்: யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி
காலம்: 26.08.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி
தலைவர்: இ.இராகவன் (அதிபர்)
யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி

**CHIEF GUEST** Mr.S.Srikuganeshan
(Senior Superintendent of Police, Jaffna District)
**GUEST OF HONOUR** Mr. Nada Rajeevan
LLB, (Attorney - at - Law)

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.
(18724)(6-7-2) ப.ஈஸ்வரநாதன் (நிர்வாகி)

மணிவிழாவில் மகிழ்வுறுவோம்

1952.08.24 - 2012.08.24



அருட்திரு
ம.போல்நட்சத்திரம்
(அ.ம.தி)

உரும்பையூரின் முதல் முத்தே
திருமகனின் பணிபுரிய
திருவுளங்கொண்ட எம்
அருட்கொடையே
அகவை அறுபதில் அன்புப் பணி தொடர
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

சின்னக்கா (அமலோற்பவம்) குடும்பம்.
எட்வின் — சோபியா, பிள்ளைகள்.
மக்ஸ்வெல் — வயலினி குடும்பம்.
உரும்பிராய் கிழக்கு.
(22053) (2-6-7)





## கூகுள் டூடில்

கூகுள் தன் தேடல் தளத்தில் விடுமுறை நாள்களிலும், சிறப்பு நிகழ்வுகள் கொண்ட நாட்களிலும் லோகோவினை அந்த நாளுக்கு ஏற்றவாறு உருவாக்கும். இதனை டூடில் (Doodle) என அழைக்கின்றனர். இது பார்ப்பதற்கு ரசிக்கும் வகையில் இருக்கும். அந்த நாளுக்குப் பின்னர், வழமையான லோகோ காட்டப்படும். அடடா! மிக நன்றாக, வேடிக்கையாக இருந்ததே பிரதி செய்திடாமல் போய் விட்டோமே என்று கவலைப்படுபவர்கள் பலர் இருக்கின்றனர்.


இவர்களின் கவலையைப் போக்கும் வகையில் கூகுள் ஒரு புதிய வசதியை அளிக்கின்றது. இதற்கு முதலில் Google Doodles இங்கு கிளிக் செய்து குறிப் பிட்ட தளத்துக்குச் செல்லவும். இந்தத் தளம் சென்றால் கூகுள் டூடில்ஸ் அனைத்தும் சேர்த்து வைத்திருப்பதைக் காணலாம். இடது பக்கம் ஆண்டு வாரியாகத் தேடிக்காணும் வசதியும், வலது பக்கம் நாடு வாரியாகக் காணும் வசதியும் தரப்பட்டிருக்கும். இதில் நமக்குத் தேவையானதைக் கிளிக் செய்து காணலாம். இதில் ஏதாவது ஒரு டூடிலில் கிளிக் செய்தால், அதனை ஏன், எதற்காக, எப்படி உருவாக்கினார்கள் என்ற தகவல் கட்டுரையையும், டூடில் உருவாகும் பல்வேறு படிநிலைகளையும் காணலாம்.

## விண்டோஸ் - 8

இயங்குதள வடிவமைப்பில் முடிசூடா மன்னனாகத் திகழும் மைக்ரோசொப்ட் நிறுவனமானது தனது புதிய பதிப்பான விண்டோஸ் 8 இயங்குதளம் பற்றிய தகவல்களை வெளியிட்டு வந்தது. இந்தநிலையில் தற்போது, 3 மாதங்களுக்குப் பயன் படுத்தக்கூடிய பரீட்சார்த்த பதிப்பை(trial version) வெளியிட்டுள்ளது. மெட்ரோ இடைமுகம் உட்பட பல நவீன வசதிகளை உள்ளடக்கி வெளியிடப்பட்டுள்ள விண்டோஸ் 8 ஆனது 32&bit , 64&bit ஆகிய பதிப்புக்களின் அடிப்படையில் காணப்படுகின்றது. விண்டோஸ் பயனர்கள் மத்தியில் இவ் இயங்குதளத்திற்கு ஆரம்பம் முதலே பெரும் எதிர்பார்ப்பு நிலவி வந்தமை குறிப்பிடத்தக்கது.




## மாணவர்களுக்கான கலக்ஸி ரப்




தற்போதைய தொழில்நுட்ப உலகில் அதிகரித்து வரும் கணினிப் பாவனையின் காரணமாக பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் கணினிக் கல்வி இன்றியமையாததாகக் காணப்படுகின்றது.

எனவே சம்சங் நிறுவனமானது மாணவர்களை இலக்காகக் கொண்டு தனது புதிய டேப்லெட் பதிப்பான Samsung Galaxy Tab 2 ஐ அறிமுகப்படுத்துகின்றது.

இதன் திரையானது ஏழு அங்குல அளவுடையதாகவும் 1024 X 600 பிக்சல்கள் உடையதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. தவிர புரோசசர் ஆனது 1GHz வேகமுடையதுடன் TI OMAP4 வகையைச் சார்ந்தது. பிளாஸ்டிக்கினாலான வெளி உடலமைப்பைக் கொண்ட இந்த டேப்லெட்டில் பிரத்தியேக கீ போட் இணைக்கக்கூடியவாறு USB இணைப் பானும் காணப்படுகின்றது. இதன் பெறுமதியானது 249.99 அமெரிக்க டொலர்கள் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## மீள்சுழற்சி மடிக்கணினி





அசுர வேகத்தில் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்து வரும் மடிக்கணினிகளை (laptops) பல்வேறு நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு தயாரித்து வருகின்றன. அதேவேளை ஜப்பானின் பிரபல்யமான நிறுவனங்களில் ஒன்றான Fujitsu சற்று வித்தியாசமான முயற்சியில் இறங்கியுள்ளது.

அதாவது பாவனைக்கு உதவாத CD, DVD களைப் பயன்படுத்தி அதிநவீன மடிக்கணினிகளை உற்பத்தி செய்யத் தயாராகி வருகின்றது. பிளாஸ்டிக் மீள்சுழற்சியின் அடிப்படையில் மேற்கொள்ளப் படவுள்ள இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 10 தொன் எடைகொண்ட பிளாஸ்டிக் பொருள்கள் (CD, DVD) இந்நிறுவனத்தால் பயன்படுத்தப்பட விருப்பதுடன், இதனால் 15 வீதமான காபனீரொட்சையிட் வெளியேற்றத்தையும் தடுக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பேஸ்புக் டிப்ஸ்

பேஸ்புக்தளம்குழந்தைகள் பாவிப்பதற்கு பாதுகாப்பு அற்ற தளங்களுள் ஒன்றாக இதுவரை காலமும் கருதப் பட்டு வந்தது. பேஸ்புக் தளம் மீதான குழந்தைகளின் ஆவலையும் நன்கு அறிந்து கொண்ட பேஸ்புக் தள நிபுணர்கள், தற்போது குழந்தைகளும் பாவிக்கக் கூடிய வகையில் அமைந்துள்ள Timeline ஐ அறிமுகப்படுத்தியுள்ளனர்.




## புதிய அறிமுகம்

மீண்டும் மீண்டும் மின்னைச் சேமித்துப் பயன்படுத்தும் மின்கல வகைகளுள் ஒன்றான AA அளவு கொண்ட மின் கலங்களை USB இணைப்பு மூலம் கணினிகளில் இணைத்து மின்னேற்றம் செய்யக் கூடியவாறு உருவாக்கி புதிய புரட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. Wonchul Hwang மின்கல வடிவமைப்பாளர்களினால் உருவாக்கப்பட்ட இந்த மின்கலத்தில் காணப் படும் USB இணைப்பு மூலம் மின்கலத்தை மின்னேற்றம் செய்வதுடன், குறித்த மின் கலத்தில் கோப்புக்களை சேமித்து வைக்கும் விசேட வசதியும் காணப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு புதிய புரட்சியுடன் அறிமுகமாகியுள்ள இந்த மின் கலங்கள் மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப்பெறும் என எதிர் பார்ப்பதாக Wonchul Hwang நிறுவனம் தெரிவித்துள்ளது.

## சாதனை படைக்கும் விண்டோஸ் 7




உலகளவில் விண்டோஸ் எக்ஸ்பி இயங்குதளத்தை விட, விண்டோஸ் 7 இயங்குதளத்தைப் பயன்படுத்துபவர்கள் தான் அதிகம் என்பது அண்மைய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

விண்டோஸ் எக்ஸ்பி 42.8% பங்கினைக் கொண்டு மாதந்தோறும் 1% இழந்து வருகிறது. விண்டோஸ் 7, 42.2% பங்கினைக் கொண்டு மாதந்தோறும் 1% உயர்ந்து வருகிறது. விண்டோஸ் விஸ்டா ஏறத்தாழ மொத்தமாகத் தன் பங்கை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

மிக உறுதியான இயங்குதளமாக விண்டோஸ் 7 வடிவமைக்கப்பட்டுள்ளதே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நம்பிக்கையுடன் செயல்படும் தன்மை கொண்டது, பாதுகாப்பானது மற்றும் நாம் விரும்பி இயக்கும் அப்ளிகேஷன் புரோகிராம்களுடன் இணைந்து இயங்குதல் போன்றவையும் காரணங்களாக தெரிவிக்கப்படுகிறது.

## களமிறங்குகிறது மைக்ரோமக்ஸ்

இந்தியாவைச் சேர்ந்த மைக்ரோமேக்ஸ் நிறுவனம் சில காலம் மொபைல்களைத் தயாரிப்பதில் அதிக கவனம் செலுத்தி வந்தது. ஆனால் தற்போது டேப்லெட் துறையையும் தனது புதிய டேப்லெட்டுகளால் கலக்க இருக்கிறது.

குறிப்பாக வரும் செப்ரெம்பர் மாத ஆரம்பத்திலேயே இரண்டு புதிய டேப்லெட்டுகளை இந்தச் சந்தையில் மைக்ரோ மேக்ஸ் களமிறக்க இருக்கிறது. இந்தப் புதிய டேப்லெட்டுக்கு பின்புக் அல்பா மற்றும் பின்புக் இன்பினிட்டி என்ற பெயர்கள் சூட்டப்பட்டிருக்கிறது.

# 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



HAPPY BIRTH DAY

24.08.2012

ஜொனி ஜெக்சன் மயூறி தம்பதியரின்
செல்வப் புதல்வன்

## ஷெறீவ் (றிதிஸ்)

இன்று (24.08.2012) தனது முதலாவது
பிறந்த தினத்தைத் தனது இல்லத்தில் வெகு
விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.



அவரைச் சகல செல்வங்களும்
பெற்றுப் பல்லாண்டு காலம்
வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**அம்மா, அப்பா,**
**அத்தை, மாமா, சித்தப்பா**
**மற்றும் உறவினர்கள்.**
இல.6, சென்.ஜேம்ஸ் மேற்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

# பதவி வெற்றிடம்

01. போட்டோசொப் டிசைனர்
(Photo shop Disignar)
(அல்ப வேலை தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
02. போட்டோ கிறாபிக், வீடியோ கிறாபிக்
03. வீடியோ எடிட்டிங்
04. அலுவலக உதவியாளர்
05. பாதுகாப்பு ஊழியர்
(30 வயதுக்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது)

மேற்குறிப்பிட்ட துறைகளில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ உரிய ஆவணங்களுடன் 26.08.2012 அன்று 9.00 am - 12.00 pm நேரில் வரவும்

## சிறிநந்தியா
## டிஜிற்றல் கலர்லாப்,

108 A, லக்ஸன் பிளாசா கட்டடம்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி. 021 222 8412

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்
17
01
1940

விண்ணில்
26
07
2012

## திருமதி பொன்னம்மா சிவபாதம்

அன்னார் துன்னாலை தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும் அமரர் சிவபாதத்தின் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், தங்கராஜா (கனடா), மோகனராஜா (இ.போ.ச. பிரதம லிகிதர், பருத்தித்துறை), சிவராஜா (பிரான்ஸ்), புகழேஸ்வரராஜா(கனடா), ஸ்ரீஸ்கந்தராஜா (கனடா) பொன்பாதராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், மதன்மோகன்(மதுவரி அத்தியட்சகர், திருகோணமலை), சண்முகறஜனி, மங்களாம்பிகை, யசோதராதேவி, சியாமளா, ஜோதிமாலா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சுலோஜன், டைஸ்மன், ஹரிஷா,திலீபன்,பிரதீபன், பார்த்தீபன், குணதீபன், பிரதீபா, பிரதீன், பாமினி, பிரசாந், பிரவீனா, கல்பனா, கபிலன், மதுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசியில் அனுதாபங்களை பகிர்ந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (24.08.2012) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.


துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

(சி/2590)(5-6-7)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி அஞ்சலா செபஸ்ரியன் தம்பிராஜா



இல.14,டேவிற் றோட், யாழ்ப்பாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட திருமதி அஞ்சலா ஜெனிவி தங்கராஜினி செபஸ்ரியன் தம்பிராஜா 21.08.2012 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்ரியன் தம்பிராஜா(ஓய்வுபெற்ற மின்சார சபை அலுவலர், வல்வெட்டித்துறை, முன்னாள் செயற்குழு உறுப்பினர், யாழ். S.P.C.O.B.A) அருமை மனைவியும், காலஞ்சென்ற பற்றீசியா-செபஸ்ரியனின் தாயாரும், காலஞ்சென்றவர்களான A.P.எதிர்மன்னசிங்கி (Retired Chief Clerk, P.W.D), குளோரியா எதிர்மன சிங்கியின் மூத்த மகளும், R.தம்பிராஜா(Retired Excise Inspector,வல்வெட்டித்துறை), றோஸ்மரிய ரெட்ணம் தம்பிராஜாவின் அருமை மருமகளும், U.K. யில் வசிக்கும் மேர்வின் எதிர்மனசிங்கி,ஞானேந்திரா,ஜோசப் சுவின்ரா, இராஜேஸ்வரன், திருமதி கார்மலிற்றா,தேவநாயகம்,திருமதி K.அன்ரோநெற்,ஜெயம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும்,திருமதி M.திரேசா, திருமதி G.மேர்சி, திருமதி J.ஜெனற், திருமதி R.டெலோரிஸ், தேவநாயகம், மைக்கல் குமார்,கிருஷ்ணசிங்கம்,திருமதி J.வசந்தி, திருமிகு அன்ரன் தம்பிராஜா(RTD.Teacher,St. Henry's College, Illavalai) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை (25.08.2012) பிற்பகல் 3.00மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து புறப்பட்டு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

அன்னார் சமாதான ஒளியில் ஒளிர்வாராக. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.14,டேவிற் றோட்,
யாழ்ப்பாணம்.

(22074)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

# சமுர்த்தி நிவாரணம் இன்றி மணலாறு மக்கள்

கொழும்பு, ஓக.24

மணலாறு குடியிருப்பிலுள்ள ஆயிரத்து ஐநூறு பேர் வரையிலான சமுர்த்திப் பயனாளிகளுக்கு 2012 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்திலிருந்து சமுர்த்தி நிவாரணங்கள் கிடைக்கவில்லை என்று அந்தப் பிரதேசத்தின் மக்கள் அமைப்புகள் தெரிவிக்கின்றன.

மணலாறு குடியிருப்பில் மீளக் குடியமர்ந்துள்ள கிராமங்கள் உள்ளிட்ட 15 கிராமங்களில் வாழும் சமுர்த்திப் பயனாளிகள் எவருக்கும் இந்த ஆண்டின் ஜனவரி மாதத்திலிருந்து சமுர்த்தி நிவாரணங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை என்று அந்த அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

அரசு காலத்துக்குக் காலம் மணலாறு குடியிருப்புக் கிராமங்களின் நிர்வாகச் செயற்பாடுகளை அனுராதபுரம் மாவட்டச் செயலகத்திலிருந்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கும் முல்லைத்தீவு மாவட்டச் செயலத்திலிருந்து அனுராதபுரம் மாவட்டச் செயலகத்துக்கும் மாற்றி விடுகிறது. இதன் காரணமாக மேற்படி சமுர்த்தி நிவாரணங்கள் கிட்டாது போயுள்ளதாக மணலாறு மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்தச் சமுர்த்தி நிவாரணங்களை நம்பி வாழ்க்கையை செலுத்தி பிரதேசத்திலுள்ள அப்பாவி மக்களுக்கு சமுர்த்தி நிவாரணங்கள் கிட்டாது போயுள்ளமையால் தாம் துன்புறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அந்தப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள் எனவும் மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.

(ம-22)

## மரண அறிவித்தல்

### திருமதி பஞ்சலிங்கம் பூமணி



தாவடியைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் ஞானவைரவர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பஞ்சலிங் கம் பூமணி (22.08.2012) புதன்கிழமை அதிகாலை 4 மணிக்கு இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகளும், சின்னத்தம்பி பஞ்சலிங்கத்தின் அன்புத் துணைவியும், காலஞ்சென்றவர்களான ராமநாதன், பாக்கியம், வீரசிங்கம் மற்றும் தம்பிராசா, தங்கரத்தினம் ஆகியோரின் சகோ தரியும், காலஞ்சென்ற தவறோஜினி மற்றும் தவநேசன் (இத்தாலி, நாப்போலி சிற்றி-081401410),வர்லட்சுமி (மகிந்தா- கனடா), வரதன்(ஜேர்மனி), வக்சலா,நிகிலா ஆகியோரின் அன்புத்தாயாரும், சிவலிங்கம் (கோப்பாய்), சுதர்சினி (சுதா- இத்தாலி),பரமானந்தம் (கனடா), உசேந்திரன் (நில அளவை உதவியாளர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவராகினி, காலஞ்சென்ற திருமால் மற்றும் பவ தாரணி, ஆதவன், திருமகள்,தர்சிகா(இத்தாலி), தரணியா (இத்தாலி), தனுசிகன் (இத்தாலி),பிரபா(கனடா),தமிழினி(கனடா), திலீபன் (கனடா), கலைவேந்தன், திவேதிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று( 24.08.2012) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞான வைரவர் கோயிலடி,
உரும்பிராய் கிழக்கு. (22070)(5-6)

தகவல்:
சி. பஞ்சலிங்கம் (கணவர்)


## விற்பனைக்கு

★ முந்திரிகை கொடி வெட்டும் கத்தரிக்கோல்
★ காளான் வெட்டும் கத்தி
என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: ரெலஸ் வோச் வேக்ஸ்
பிரதான வீதி,சங்கானை.
077 651 0447, 071 275 4992
(வி/2591)(5-6-7)

## வீடு விற்பனைக்கு

ஏழாலை மேற்கில் உதய சூரியன் சனசமூக நிலையத்திலிருந்து 100 யார் தொலைவில், சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 949 3731,078 780 1648
தொடர்புநேரம்:-காலை 9மணிமுதல் மாலை 4 மணிவரை
(22069)(5-6-7)

# Free Seminar

Study , Work, Skilled Migration Visa
Canada , Europe and world wide

25th August (Saturday) at
Green Grass Hotel Jaffna 9 AM - 1 PM

100,000 Skilled jobs , 10,000 Scholarships in Canada + world wide.
Canadian + European Migration Agent Advice you.
Kid English, Spoken English, IELTS Band 5-6-7-8.
Free advice from British Council , City & Guilds Approved Lecture.
Study & Work in Australia / UK / New Zealand
Swiss / Germany / Singapore / Malaysia / Cyprus.
* Condition Apply

**ICS STUDY OVERSEAS**
107 B, 1/1 Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel : 011 2553520 - 0773013060
E-mail : sutha@icslanka.com (வி/2606)(6-7)


## மரண அறிவித்தல்

### கந்தையா பத்மநாதன்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டைவசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பத்மநாதன் கடந்த (21.08.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (தில்லையர்) -பூரணம் தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான சேனாதிராசா- விசாலாட்சி தம்பதியரின் மருமகனும், சரஸ்வதி யின் அன்புக் கணவரும், சுதர்சினி(பிரதேச சபை, நல்லூர்), தாரணி, சுதாகரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிதம்பரநாதன், தில்லைநாயகி, உமாதேவி, கைலைநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரரும், உதயபாலா (சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, உடுவில்), கஜானி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும்,திஷாரகன்,அஜிஷன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (24.08.2012) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.50,டச்சு வீதி(G.P.Sவீதி),
கல்வியங்காடு. (22072)(5-6-7)

தகவல்
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
27.11.1940



மறைவு
25.07.2012

### திருமதி மருதமுத்துப்பிள்ளை நாகேஸ்வரி

கண்ணின் கருமணியாய் எம்மை
இன்று கண்ணீர் மல்க விட்டுச் சென்ற அன்னையே
விண்ணில் விடிவெள்ளியாய்ப் போன பின்பும்
எம் விழியில் ஈரம் தனைத் தந்ததேனோ
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
என்றும் உம் நினைப்பில் நாமிருப்போம்

இன்று (24.08.2012) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மரணச்செய்தி அறிந்து நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் கண்ணீர் அஞ்சலி ப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் மற்றும் தொலைபேசி, தந்திமூலம் ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுதுமலை மத்தி, மானிப்பாய். (22063) (2-6-7)

- குடும்பத்தினர்.


## காப்புறுதி சேவையில் 500 காப்புறுதி ஆலோசகர்களை இணைத்துக் கொள்ளல்

சர்வதேசதரத்திற்கு ஒப்பாக காப்புறுதி, முகாமைத்துவம் உளவியல், ஆங்கிலம், சமூகசேவை ஆகியவற்றில் பயிற்சி பெற்றவரும்,50 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் அரச காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் அகில இலங்கை அதிசிறந்த அமைப்பாளர் விருது பெற்றவருமான அமைப்பாளரின் கீழ் சேவையாற்ற வல்ல காப்புறுதி ஆலோசகர்கள் தேவைப்படுகின்றனர்.(அகில இலங்கை முழுவதும்) உ+ம்:-யாழ்ப்பாணம்,நெல்லியடி, கிளிநொச்சி, சாவகச்சேரி, பம்பலப்பிட்டி, புத்தளம்,சிலாபம்)

**தகைமைகள்:**

(1) G.C.E. O/L (கணிதம் உட்பட 6பாடங்களில் சித்தி),A/L கணினி, ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.
(2) நாளாந்தம் ஆகக்குறைந்தது 2 மணித்தியாலங்கள் காப்புறுதிச் சேவைக்காக அர்ப்பணிக்கக் கூடிய ஆற்றல்.
(3) வயது- 18 வயதிற்கு மேல்.

**நன்மைகள்:**

(1) மாத வருமானமாக 1 லட்சத்திற்கு மேல் பெறக்கூடிய வாய்ப்பு.
(2) அகில இலங்கை ரீதியில் காப்புறுதி ஆலோசகர் முதலிடம் பெறக் கூடிய வாய்ப்பு.
(3) இங்கிலாந்து,அமெரிக்கா, கனடா,பிரான்ஸ், சீனா, இந்தியா, ஐக்கிய அரபு இராச்சியம், மலேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு செல்லக் கூடிய வாய்ப்பு.
(4) இலட்சாதிபதிகளின் சங்கம், தலைவரின் சங்கம், அபிவிருத்தி முகாமையாளரின் சங்கம்,பிராந்திய முகாமையாளரின் சங்கம் ஆகியவற்றில் அங்கத்துவம் பெறும் வாய்ப்பு.

★முக்கிய குறிப்பு: பொருத்தமானவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

தொலைபேசி இலக்கம், கிராமசேவகர் பிரிவு இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக்கோவையுடன் (Biodatas) விண்ணப்பங்களை 05.09.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

C/O உதயன்,
விளம்பர இல. 4395,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி/2586)(5-6-7)

## கண்ணீர் அஞ்சலி

### வைத்தீஸ்வரஐயர் யோகேஸ்வரசர்மா (ஆஸ்திரேலியா)



கற்பொக்குனை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் முன்னாள் பிரதம குருவும், தர்மகர்த்தாவும், பரிபாலன சபையின் ஆலோசகரும் கலைமதி சனசமூக நிலைய ஆலோசகருமாகிய யோகேஸ்வரசர்மாவின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வ தோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய விநா யகரின் அருள்வேண்டிநிற்கின்றோம்.

உடுவில் கற்பொக்குனை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயப் பரிபாலனசபை.

(22111)(3.14)

## பதவி வெற்றிடம்

ராம் சுப்ப சிற்றி
306, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 0212221252

01. கணினி இயக்குநர் (இருபாலாரும்)
02. கணக்காளர் (பெண்)
03. பொதி செய்வோர் (பெண்)
04. விற்பனையாளர் (பெண்)

காலம்: 25.08.2012 நேரம்: முற்பகல் 10 மணி
தகைமையுடையவர்கள் உரிய ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் அளிக்கவும்.

(சி/2596)(3.14)

## மரண அறிவித்தல்



### திருமதி சிற்றம்பலம் சோதிமலர்

ஏழாலை தெற்கு விழிசிட்டியை பிறப்பிடமாகவும் சூராவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிற்றம்பலம் சோதிமலர் நேற்று (23.08.2012) வியாழக்கிழமை இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலத்தின் (ஆயுள்வேத வைத்தியர் - தொய்வு), அன்பு மனைவியும் கேமநளினி (ஆசிரியை- ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), பிறேமநளினி (லண்டன்), கௌரிபாலன் (பிரான்ஸ்), பாமநளினி (ஆயுள்வேதவைத்தியர்) றஞ்சிதநளினி (ஆசிரியை- ஏழாலை சைவ மகாஜனா), அம்பிகைபாலன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற கணேசமூர்த்தி மற்றும் குகேந்திரன், விஜயராணி, கந்தராசா, சண்முகநாதன், விஜயலக்சுமி ஆகியோரின் அன்பு மாமியும், சுகன்யா, கோமேதன், குகேஸ், கஜந்தி, நிலக்சன், கம்சத்வன், கஜனி, கஜந்தினி, கஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2012) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விஜயபவான்
சூராவத்தை, சுன்னாகம். (22108)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

# திருமலையில் ஆளுந்தரப்புக்கு 5 ஆசனங்கள்

திருகோணமலை,ஓக.24

கடந்த மாகாணசபைத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் கூட்டாகச் சேர்ந்திருந்த கட்சிகள் இந்தத் தடவை தனித்துப் போட்டி யிடுவதால் ஆசனங்கள் பெறுவது கேள்விக்குறியாகி விட்டது என்று திருகோண மலை மாவட்ட ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணி வேட் பாளர் ஆதம்பாவா தௌபீக் தெரிவித்தார்.

தனது இல்லத்தில் நடை பெற்ற கட்சி ஆதரவாளர் களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

திருகோணமலை மாவட் டத்தில் கடந்த மாகாண சபைத் தேர்தலில் கூட்டுச் சேர்ந் திருந்த கட்சிகள் இந்தத் தடவை தனித்துப் போட்டி யிடுகின்றன.

அதேவேளை, தனித்துப் போட்டியிட்டு நான்கு ஆச னங்களைப் பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இந்தத் தடவை ஐந்து ஆச னங்களைப் பெறுவது இலகுவானதாகும் என்று அவர் கூறினார்.

(ச)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111


## வீடு வாடகைக்கு

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு உடன் வாடகைக்கு உண்டு.அரச/தனியார், உத்தியோகத்தர்கள் விரும்பப்படுவர்

தொடர்பு: 077 015 4740, 077 858 7705

(21867)(5-6-7)

## தேவை

1. தாதியர் -அனுபவம் உள்ளவர்கள்
2. தாதிய பயிலுனர் (பெண்கள்)
3. பாதுகாப்பு உத்தியோகத்தர்
4. மருந்தாளர் - அனுபவமுள்ளவர்கள்
5. மருந்தாளர் பயிலுனர்
6. வரவேற்பாளர்கள்(பெண்கள்)

நேர்முகத்தேர்வு:

இடம்- புதிய யாழ் வைத்தியசாலை
315,பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி
காலம் : 25: 08 :12
நேரம் : காலை 9.30

(c/2597)

**T.P NO- 2223533/ 2221011**

## மரண அறிவித்தல்

### பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வர ஐயர் யோகீஸ்வரசர்மா

(உடுவில் முருக மூர்த்தி வித்தியாலய முன்னாள் அதிபர்,
உடுவில் கற்பொக்கணைப் பிள்ளையார் கோயில் தர்மகர்த்தா,
முன்னாள் ஆலய குரு)



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் உடுவில், கற்பொக்கணையை வசிப்பிடமாகவும் ஆஸ்திரேலியா சிட்னியை வாழ்விடமாகவும் கொண்ட வைத்தீஸ்வர ஐயர் யோகீஸ்வரசர்மா அவர்கள் 22.08.2012 புதன்கிழமை ஆஸ்திரேலியாவில் சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2012) வெள்ளிக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
தொலைபேசி. இல்-
61420569500
ஆஸ்திரேலியா.

(22103)(3.6.7)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## திருநெல்வேலி அபான்ஸ் வழங்கும் அதிரடிச் சலுகை

மிகக் குறைந்த ஆரம்பக் கொடுப்பனவு
திருநெல்வேலி அபான்ஸில் மாத்திரமே
இம்மாதம் 31ஆம் திகதி வரை



ஆரம்பக் கொடுப்பனவு
20,000/=
சௌத்தி லப்ரொப் கணினியோடு
HP பிரிண்டர்
மற்றும்
டொங்கிள் ஒன்றும் இலவசம்



ஆரம்பக் கொடுப்பனவு
4000/=
சௌத்தி LCD தொலைக்காட்சி
பெட்டி ஒன்றை
பெற்றுக்கொள்ளுங்கள்



ஆரம்பக் கொடுப்பனவு
2000/=
சௌத்தி 21 வர்ண CRT
தொலைக்காட்சி பெட்டி
5 வருட உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்ளுங்கள்




ஆரம்பக் கொடுப்பனவு
5000/=
சௌத்தி குளிர்சாதனப் பெட்டி
ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்

கையிருப்பு உள்ளவரை மட்டுமே இச்சலுகை
உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்
திருநெல்வேலி அபான்ஸ்

269, பலாலி வீதி,
கந்தர்மடம். (c/2598)(9.14)

T.P-021-222-0247


### அமரர் செல்லத்துரை பொன்னம்மா (திரவியம்)

(திதி :அட்டமி- 24.08.2012)

எங்கே போனீர்கள்?
ஆண்டு ஒன்று ஆனதுவோ
அனைவரையும் விட்டுச் சென்று
எம் இதயத்து வேதனை ஆறுமோ?
என்றும் உங்கள் நினைவுடன் வாழும்.

கடந்த 05.09.2011 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்ப குலவிளக்கு அமரர் செல்லத்துரை பொன்னம்மாவின் (திரவியம்) ஓராண்டு நிகழ்வு இன்று (24.08.2012 ) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப 10 மணிக்கு நடைபெறும்.
அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அரச வீதி,
நல்லூர்.

மகள்.க.இராஜேஸ்வரி
(அரசினர் வைத்தியசாலை, அச்சுவேலி.)
பேரன்- க. குகனேசன் (ஜேர்மனி)

(22164)(5.14)

## 17 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
18★ 04★ 1907

மறைவு
02★ 09★ 1995

அமரர்

**ஆறுமுகம் கந்தையா**

(இளைப்பாறிய தபாலதிபர், கோப்பாய்)

திதி: ஆவணி மாதம் பூர்வபட்ஷ அட்டமி (24.08.2012) வெள்ளிக்கிழமை

எம் அருமை அப்பாவே!
பதினேழு ஆண்டென்ன
பதினேழாயிரம் ஆண்டுகள் தான் உருண்டாலும் உங்களது நினைவுகள் எங்களை என்றும் விட்டு அகலா! உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கைதடி தெற்கு,
கைதடி.

க.குலராசன் (மகன்), ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

(22079) (2-7)



## தேவை

றெஜிபோம் எழுத்துக்கள் உருவங்கள் வெட்டுவதற்கு அனுபவமுள்ள பெண்கள் தேவை.

T.P.0789119307 (22078) (2-7)





ஜெய்குருதேவ்

## வாழும் கலை பயிற்சி பாகம் I

யோகாசனங்கள், தியானங்கள், பிராணாயாமா, சுதர்சன கிரியா ஆகியவை பயிற்றுவிக்கப்படுகின்றன. இலவச அறிமுக உரை.

இடம்:- மகேஸ்வரன் மணிமண்டபம்
(நல்லூர் கந்தசுவாமி கோயில் அருகில்)
காலம்:- 24.08.2012, பிற்பகல் 5.00 மணி
மேலதிக தொடர்புகளுக்கு:- 0770474757

(22080) (2-6-7)


# முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் மஹிந்தவால் ஓரம் கட்டப்படுகிறாரா?

## மட்டு.நகரில் கோத்தபாய நடத்திய கூட்டத்தில் பங்கேற்கவில்லை

மட்டக்களப்பு,ஓக.24

பாதுகாப்புச் செயலர் கோத்த பாய ராஜபக்ஷ மற்றும் அமைச் சர்கள் பலரும் கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப் பில் நடத்திய அபிவிருத்திக் கூட்டத்தில் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சந் திரகாந்தன் பங்கேற்க வில்லை. அவருக்கு அழைப்பும் விடுக் கப்படவில்லை என்று தெரிய வருகின்றது.

கோத்தபாய ராஜபக்ஷவின் கீழ் உள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையால் மட்டக் களப்பு அபிவிருத்தி குறித்து ஆராய இந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு அபிவிருத்தி குறித்து ஆராயப்பட்ட முக்கி யமான இந்தக் கூட்டத் தில் கலைக்கப்பட்ட கிழக்கு மாகாணசபை யின் முதல்வர் சந்திரகாந்தன் பங்கேற்கா தமை அவர் மஹிந்த அரசால் ஓரம்கட்டப்படு கிறார் என்ற சந் தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து கருத்து வெளி யிட்டுள்ள தமிழ்மக்கள் விடு தலைப் புலிகள் கட்சியின் பேச்சாளர் அசாத் மௌலானா,

"சந்திரகாந்தன் இப்போது முதலமைச்சராக இல்லை. ஆகவே, இந்தக் கூட்டத்தில் பங்கற்கவேண்டிய தேவை அவருக்கு இல்லை. சந்திர காந்தன் இந்த நிகழ்வில் பங் கேற்காததால், இலங்கை அரசு அவரை ஓரம்கட்டுகிறது என்ற முடிவுக்கு வரமுடியாது" - என்றார்.

இதேவேளை எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ள கிழக்கு மாகாணசபைத் தேர் தலில் முன்னாள் முதலமைச் சர் சந்திரகாந்தன், மட்டக்க ளப்பு மாவட்டத்தில் ஆளுந் தரப்பு முதன்மை வேட்பாள ராகப் போட்டியிடுகின்றார் . என்பது குறிப்பிடத்தக்கது.

ஆளும்கட்சி வெற்றியீட் டினால் சந்திரகாந்தன் மீண் டும் முதல்வராக நியமிக் கப்படுவதற்கு வாய்ப்பில்லை என்று தகவல் கள் வெளியாகி யுள்ளன. பிரதி அமைச்சர் முரளிதரனின் சகோதரி இந் தத் தேர்தலில் போட்டியிடு வதால் அவரை கிழக்கு முதல் வராக்க முயற்சிகள் நடக்கின் றன எனத் தகவல்கள் தெரி விக்கின்றன. (ச)


# பஜாஜ்

முச்சக்கர வண்டியுடன்

# விசேட கொடுப்பனவு!



டயர் 3 மற்றும் பெறுமதியான ஒரு சோடி பக்கத்திரை இலவசம்!

விலை ரூ. 450,100/-
மேற்குறித்த விலை VAT உள்ளடக்கப்பட்டுள்ளதோடு முன்னறிவிப்பு எதுவுமின்றி மாறுபடலாம்.

முந்துங்கள்! இக் கொடுப்பனவு
2012 ஓகஸ்ட் 3 லிருந்து 30 வரை
முற்பதிவு செய்து கொள்வனவு செய்யும் முச்சக்கர வண்டியுடன் மட்டுமே.*

(சி/2296)(2-6)

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600 பெக்ஸ்: 011-4700677
மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: www.dpmco.com


# குறைந்த விலைக்கு நெல் விற்பனை; விவசாயிகள் கவலை

அம்பாறை,ஓக.24

அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெல் அறுவடையில் ஈடுபடும் விவசாயிகள் தமது நெல்லை தனியார் கொள்வனவாளர் களுக்கு குறைந்த விலைக்கு விற்பனை செய்ய நேர்வதாக கவலை தெரிவிக்கின் றனர்.

அம்பாறை மாவட்டத்தில் இந்தமுறை நெல் விளைச்சல் அதிகரித்துள்ளபோதும், குறைந்த விலைக்கே அவற்றினை விற் பனை செய்ய வேண்டியுள்ளதாக விவசா யிகள் தெரிவிக் கின்றனர். ஏக்கரொன்றுக்கு 50 தொடக்கம் 60 மூடை வரையில் விளைச்சல் கிடைத்து வருகின்ற போதிலும் தனியாருக்கு கிலோ 21 ரூபா வீதமே விற்பனை செய்ய வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில், விவசாயிகளிடமிருந்து நெற் சந்தைப் படுத்தும் சபையினூடாக அரசு நெல்லைக் கொள்வனவு செய் யும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள போதும், விவசாயி ஒருவரிடமிருந்து ஏக்கருக்கு 50கிலோ கொண்ட 10 மூடை களையே நெற் சந்தைப் படுத்தும் சபை கொள்வனவு செய்கின்றது.

நெல் சந்தைப்படுத்தும் சபையினர் இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் ஒரு கிலோ நெல்லுக்கு 28 ரூபா வழங்கப்ப டுகிறது. ஏக்கருக்கு 60 மூடைகளை அறுவடையாக பெற்றுக் கொள்ளும் விவசாயி ஒருவர் தனது 10 மூடைகளை மட்டும் நெற் சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்கி விட்டு, ஏனைய 50 மூடைகளையும் தனியாரிடம் குறிந்த விலைக்கு விற்க வேண் டியுள்ளது. எனவே, இந்த நிலையைக் கருத்தில் கொண்டு, நெற்சந்தைப்படுத்தும் சபையினூடாக விவசாயிகளிடமுள்ள முழு நெல்லையும் அரசு கொள்வனவு செய்தல் வேண்டும். நெல்லுக்கான கட்டுப்பாட்டு விலையொன்றினை ஏற்படுத்தி அதை தனியார் கொள்வனவாளர்களும் பின்பற்றும் நடவடிக் கையையும் அரசு ஏற்படுத்துதல் வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுக்கின் றனர். (ச)

# மீளக்குடியமர்வுக்கென அழைத்து வரப்பட்டு பாடசாலைகளில் முகாம் வாழ்க்கை

## புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு மக்கள் விசனம்

*வவுனியா.ஒக 24*

*நலன்புரி நிலையத்தில் இருந்து சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கு அழைத்து வரப்பட்ட மக்கள் மீளக்குடியமர்த்தப்படாமல் பாடசாலைகளில் மீண்டும் முகாம் வாழ்க்கை வாழுவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.*

புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படுவதற்கென கடந்த 13ஆம் திகதி மெனிக்பாம்நலன்புரி முகாமில் இருந்து அழைத்துவரப்பட்டனர். புதுக்குடியிருப்பு கைவேலி கணேசா வித்தியாலயத்தில் மீளக்குடியமர்த்துவதற்காக பதிவுகளை மேற்கொண்ட பின் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

குறிப்பிட்ட பகுதியில் முழுமையாக கண்ணி வெடி அகற்றப்படாத காரணத்தால் அன்று மாலையே சகல குடும்பங்களும் கட்டாயப்படுத்தி தமது உடைமைகளுடன் வெளியேற்றப்பட்டு கோம்பாவில் விக்னேஸ்வரா பாடசாலை, புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை ஆகியவற்றில் தங்க வைக்கப்பட்டனர்.

தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேறும்போது நலன்புரி முகாமில் இருந்து கொண்டு வந்த வீட்டுத் தளபாடங்கள் எவற்றையும் உடன் எடுத்துச்செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. இதனால் அவற்றை தமது சொந்த இடங்களிலேயே கைவிட்டு வரவேண்டிய நிலையேற்பட்டது. அந்தப்பொருள்களைச் சென்று பார்ப்பதற்கும் இராணுவத்தினர் அனுமதி மறுத்து வருகின்றனர்.

இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி திருடர்கள் எஞ்சி இருக்கின்ற பொருள்களையும் முகாமிலிருந்து கொண்டுவரப்பட்ட பொருள்களையும் சூறையாடிவருகின்றனர்.

இரண்டு நாள்களில் மீண்டும் எமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கு அனுமதிக்கப்படும் என்ற உறுதி மொழியுடனேயே தம்மை இந்தப்பகுதிகளிலிருந்து வெளியேற்றியதாகவும் தற்போது ஒருவாரம் கடந்த நிலையிலும் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை.

தற்போது தங்கியுள்ள பாடசாலைகளில் மலசலகூட வசதி மற்றும் குடிதண்ணீர் வசதி என்பன சீராக இல்லாத நிலையில் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (எ-410)

# பாண்டியன்குளம் – மல்லாவியை இணைக்கும் பாலத்துக்கு அடிக்கல்



துணுக்காய்,ஒக 24

முல்லைத்தீவு மாவட்ட மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் மல்லாவிப் பிரதேசத்தை இணைக்கும் புதிய பாலம் நிர்மாணிப்புக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி திங்கட்கிழமை பாலியாற்று வாய்க்கால் பகுதியில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் ந.சிறிஸ்காந்தராசா தலைமை வகித்து பாலத்துக்கான அடிக்கல்லை நட்டு வைத்தார்.

மேலும் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய நீர்ப்பாசன திணைக்களத்தின் சிரேஷ்ட பொறியியலாளர் சிவானந்தராசா, வவுனிக்குளம் நீர்ப்பாசன பொறியியலாளர் பா.விகர்ணன் ஆகியோர் அடிக்கல்லை நட்டு வைத்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 8 மில்லியன் நிதியுதவியுடன் இந்த புதிய பாலம் நிர்மாணிப்பதற்கான வேலைகள் அதன் ஒப்பந்தக்காரர்களால் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பாலம் அமைக்கப்பட்டதும் வலயங்கட்டு, நவ்வி, குஞ்சுகுளம், மூன்றுமுறிப்பு, பனங்காமம், நட்டாங்கண்டல் சிறாட்டிக்குளம் பாண்டியன்குளம் கிராமத்து மக்கள் மிக இலகுவாக பயணத்தை மேற்கொள்ள முடியும்.

பாண்டியன்குளம் மல்லாவிப் பகுதியை இணைக்கும் இந்தப் பாலியாற்று வாய்க்கால் 50 வருடங்களுக்கு மேல் இரு பிரதேச மக்களின் பாவனைக்குப் பயன் பெற்று வந்தது.

மல்லாவியில் இருந்து பாண்டியன் குளத்திற்கும், பாண்டியன் குளத்தில் இருந்து மல்லாவிக்குமான, சுமார் 6 கிலோ மீற்றர் தூரத்தை மிக இலகுவாக பாலியாற்றால் கடந்து பயணிக்க முடியும் (எ-415)

# சிறந்த இலக்கியப் படைப்புகளை சமூகத்துக்கு தந்துள்ளார் நடராஜா

[illegible]

[illegible]

"ஒய்வு" எனும் சிறுகதை நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கும் மேலும் தெரிவித்ததாவது:-

நடராஜா திருநகர் கிராமத்தில் ஒரு சாதாரணமனிதராக வாழ்ந்த ஒருவர். தனது வாழ்வாதாரத்திற்காக ஒரு கட்டடத் தொழிலாளியாக இருந்து கொண்டு நல்லதோர் இலக்கியத்தை இந்த சமூகத்திற்கு தந்துள்ளார். எமது மாவட்டத்தின் ஒரு வரலாறாகவும் காலம் காலமாக பேணிப் பாதுகாக்க வேண்டிய ஒரு ஆவணமாகவும் இந்த சிறுகதை நூல் அமைந்துள்ளது- என்றார்.

நூல் வெளியீட்டுரையினை காவேரி கலாமன்றத்தின் இயக்குநர் வணக்கத்துக்குரிய ரி.எஸ்.யோசுவா நிகழ்த்தியதையடுத்து, நூலின் முதற்பிரதியை மாவட்ட அரச அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் வெளியிட்டுவைத்தார். தொடர்ந்து ஆய்வுரையை கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனையின் ஆசிரிய ஆலோசகர் பெ.கணேசன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் இலக்கிய படைப்பாளிகள் சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப்பலர்கலந்து கொண்டனர்.

# தனியார் பஸ் தரிப்பிடம் காரணமாக வவுனியா நகரினுள் நெரிசல்

வவுனியா, ஒக.24

வவுனியா முதலாம் குறுக்குத் தெருவில் தனியார் பஸ் தரிப்பிடம் அமைந்திருப்பதால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மல்லாவி, மன்னார், யாழ்ப்பாணம், பருத்தித்துறை போன்ற இடங்களுக்கான பயணிகள் சேவைக்காக வவுனியாவின் முதலாம் குறுக்குத் தெருவில் 40 இற்கும் மேற்பட்ட பஸ்கள் தரித்து நின்று பயணிகளை ஏற்றி இறக்கும் சேவையில் ஈடுபடுகின்றன.

தனியார் பஸ்கள் இந்த வீதியில் தரித்து நிற்பதால், போக்குவரத்து நெரிசலினால் விபத்துகளும் ஏற்படுகின்றன. மேலும் போக்குவரத்து நெரிசலினால் வைத்தியசாலை செல்வோர், வேலைக்குச் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இந்த வீதியின் அருகில் ஓட்டோ தரிப்பிடமும், எரிபொருள் நிரப்பு நிலையமும் அமைந்துள்ளமையால் வாகன நெரிசல் மேலும் அதிகரித்துள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயம் தொடர்பாக அக்கறை எடுத்து வாகன நெரிசலை தவிர்த்து மக்களின் போக்குவரத்துக்கு ஆவன செய்யுமாறு கேட்டுள்ளனர். (எ-402)

## உதயன் தரம்-5 புலமைப்பரிசில் வினாத்தாள் –04 இன் விடைகள்

### வினாத்தாள் 4 இல் வெளியான வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. 4 | 02. 4 | 03. 2 | 04. 3 | 05. 1 | 06. 3 | 07. 2 | 08. 2 | 09. 2 | 10. 1 | 11. 2 |
| 12. 2 | 13. 2 | 14. 1 | 15. 1 | 16. 2 | 17. 1 | 18. 1 | 19. 2 | 20. 1 | 21. 1 | 22. 3 |
| 23. 2 | 24. 3 | 25. 2 | 26. 1 | 27. 3 | 28. 2 | 29. 1 | 30. 2 | 31. 1 | 32. 3 | 33. 3 |
| 34. 2 | 35. 3 | 36.250g | 37. 2385 | | 38. வெள்ளிக்கிழமை | | | 39. நத்தை | | 40. 55 |

### வினாத்தாள் 4 இல் வெளியான வினாத்தாள் II இற்கான விடைகள்

01) 01. சந்திரன் / நிலா 02. சந்திரன் 03. அம்புயம், ஆம்பல் 04. வளர்ந்து வளர்ந்து / தளர்ந்து தளர்ந்து 05. சின்னஞ்சிறு 06. அம்மா 07. கூறாய் + அம்மா 08. நட்சத்திரங்கள் 09. அயல் 02) 01. தப்பி ஓடுதல் 02. வஞ்சித்தல் / ஏமாற்றுதல் 03) 01. உத்தம நட்பு
02. திருப்தியற்ற மனம் 04) 01. சிரமதானம் 02. அட்டாவதானி 05) 01. Hard disc
02. Font 06) 01. சிற்றுண்டிச்சாலை எங்குள்ளது 02. உங்கள் வீட்டு முகவரி என்ன?
07) 01. உங்களுக்கு என்ன விருப்பம்? 02. விமான நிலையம் 08) 01. 3 02. 1 03. 1 04. 1
05. 2 06. 1 07. 2 08. 3 09. 1 10. 1 11. 1 12. 1 13. 1 14. 3
15. 2 16. 2 17. 1 18. 3 19. 3 20. 1 09) A - மகாவலிகங்கை, B - வளவ கங்கை,
C - நில்வளவ கங்கை, D - ஜின் கங்கை, E - களனி கங்கை 10) 1) முன்னால் பாதுகாப்பான புகையிரதக் கடவை 2) முன்னால் சிறுவர் கடவை 11) 1) விருட்சிகம்
2) சிம்மம் 3) பெருநாய் 4) பெருங்கரடி 12) 01. $40cm^2$ 02. 8 மணி 30 நிமிடங்கள்
03. 41kg 400g 04. 10/12 / 5/6 05. 2750g / 2kg 750g
06. ரூ 288 07. 624 08. 2016 09. 12:50 h 10. 8 20
13) பொருத்தமான வாக்கியங்களுக்கு புள்ளி வழங்குக.






# ஆவரங்கால் இந்து அணியின் வெற்றிவேட்டை தொடர்கிறது



பண்டத்தரிப்பு, ஓக. 24

ஆவரங்கால் மத்திய விளையாட்டுகழகம் நடத்திய வடமாகாண ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுத்தொடரின் வெற்றிக்கிண்ணத்தை ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் சுவீகரித்துக்கொண்டது.

இந்தச் சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றது. இறுதிப்போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும், உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

போட்டியின் முதலாவது சுற்றை 25:20 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் கைப்பற்றிக்கொண்டது. எனினும் இரண்டாவது சுற்றில் சுதாரித்துக்கொண்ட உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகத்தினர் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் இரண்டாம் சுற்று 25:18 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக்கழக அணியினர் வசமானது.

எனினும் மூன்றாம், நான்காம் சுற்றுகளில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி மீண்டும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியது . மூன்றாம் சுற்றை 25:17 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் கைப்பற்றிக்கொண்டது. நான்காம் சுற்றில் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகத்தினர் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தாலும் இறுதி நேரத்தில் சிறப்பாகச் செயற்பட்ட ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தினர் நான்காம் சுற்றையும் 25:21 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் கைப்பற்றிக் கொண்டனர். இதனால் ஐந்தாம் சுற்றுக்கு அவசியமில்லாமல் போனது. இதனால் 3:1 சுற்றுக்கள் என்ற அடிப்படையில் இறுதிப்போட்டியில் வெற்றியீட்டிய ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி சம்பியன் கிண்ணத்தை தன் வசமாக்கியது.

அண்மைக்காலங்களாக யாழ். மாவட்டத்தில் கரப்பந்தாட்ட இறுதிப்போட்டிகளில் தொடர் வெற்றிகளை குவித்துவரும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் பெறும் தொடர்ச்சியான வெற்றிகளில் ஒன்றாக இதுவும் பதிவாகியுள்ளது. (ங-130)

**ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் பெறும் தொடர்ச்சியான வெற்றிகளில் ஒன்றாக இதுவும் பதிவாகியுள்ளது.**

## இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக்கழகம், 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரை நடத்தி வருகிறது. இன்று வெள்ளிக்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

பி.ப. 4 மணி

கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் டைமன்ஸ் விளையாட்டுக்கழகம்

* * *

புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகத்தின் 46 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியிலான மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை புத்தூர் வளர்மதி சனசமூக நிலைய முன்றலில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு-

இரவு 7.30 மணி

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் எதிர் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம்

* * *

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் வருடந்தோறும் நடத்தும் விளையாட்டு விழாவில், ஓர் அங்கமான யாழ். மாவட்டத்தின் முன்னணி நட்சத்திர விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றும் 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் பங்குபெறும் அணிகளின் விவரங்கள் வருமாறு-

முதலாவதாக இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக்ழக அணி மோதவுள்ளது.

இரண்டாவதாக இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் களமிறங்கவுள்ளது

* * *

மன்னார் பெரிய கடை ஸ்டார் ஈகிள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மன்னார் பிறிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில்இன்று வெள்ளிக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பெறவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு -

சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் இந்து முன்னணி விளையாட்டுக்கழகம்


ஏசியன் விளையாட்டுக்கழகம் எதிர் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம்

சென் .அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் சென். ஜோசப் விளையாட்டுக்கழகம்

இந்து முன்னணி விளையாட்டுக்கழகம் எதிர் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம்.

(ங-23-8)

## மேசைப்பந்தாட்ட பயிற்சி நாளை யாழ்ப்பாணத்தில்



யாழ்ப்பாணம், ஓக.24

யாழ். மாவட்ட வீரர்களுக்கு பயிற்சி வழங்கும் நோக்கில் இலங்கை தேசிய மேசைப்பந்தாட்ட அணித் தலைவர் றொகான் சிறிசேனா இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளார்.

யாழ். வரும் அவர் சனிக்கிழமை தொடக்கம் புதன்கிழமை வரை ஐந்து தினங்கள் யாழ். மத்தியகல்லூரி மேசைப்பந்தாட்ட உள்ளக அரங்கில் இடம்பெறவிருக்கும் மேசைப்பந்தாட்ட வதிவிட பயிற்சி முகாமில் கலந்து கொண்டு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வீர, வீராங்கனைகளுக்கு பயிற்சிகளை வழங்கவுள்ளார்.

யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்டச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த வதிவிடப் பயிற்சி முகாமில் பாடசாலைகள், கழகங்கள் என்பவற்றைச் சேர்ந்த மேசைப்பந்தாட்ட வீர, வீராங்கனைகள் கலந்து கொள்வர். (ங-23)

## மெய்வன்மையாளர்களுக்கான வதிவிட பயிற்சி முகாம் நிறைவு

வலி.வடக்கு, ஓக. 24

அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ள மெய்வன்மைப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள வட மாகாண வீர வீராங்கனைகளுக்கான நான்கு நாள் பயிற்சி முகாம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் நேற்று வரை நான்கு தினங்கள் நடைபெற்றது.

தென்னிலங்கையில் இருந்து வருகை தந்துள்ள விளையாட்டுத்துறையில் பல்வேறு நுணுக்கங்களில் தேர்ச்சி பெற்ற பத்து வளவாளர்களுடன் யாழ்.மாவட்டத்தைச்சேர்ந்த பத்து வளவளர்களுமாக மொத்தம் இருபது வளவாளர்கள் இதன்போது பயிற்சிகளை வழங்கினார்கள்.

குறிப்பிட்ட பயிற்சி முகாமில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 250 க்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் கலந்துகொண்டனர்.

இந்தப் பயிற்சி முகாமுடன் இணைந்ததாக வட மாகாணத்துக்கு உட்பட்ட 12 கல்வி வலயங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

மாகாண மட்டப்போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர்களும் வீராங்கனைகளும் தேசிய மட்டப் போட்டிகளில் சாதிப்பதற்கு இந்தப் பயிற்சி முகாம் பேருதவி புரியும் என்று இதில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். (ங-23-86)

## திக்கம் வென்றது

யாழ்ப்பாணம், ஓக.24

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் திக்கம் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றுள்ளது.

திக்கம் விளையாட்டுக் கழகஅணிக்கும் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையே இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (ங-23)



வடமாகாண விளையாட்டுத்திணைக்களத்தினால், விளையாட்டு உத்தியோகத்தர்கள், மாவட்ட பயிற்றுநர்கள், மாவட்ட விளை யாட் டுத்துறை அதிகாரிகள் என்போருக்காக வழங்கப்பட்ட காலணிகள், அலுவலக பைகள் போன்றன கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் .எஸ்.ஸ்ரீநிவாசன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழ்வின்போது கையளிக்கப்பட்டன. (ங-23)

# வலுவான நிலையில் இந்தியா



புஜாரா

புஜாரா - ஹோக்லி இணைப்பாட்டம் கை கொடுக்க இந்திய அணி முதலாவது நாளில் 5 இலக்குகளை இழந்து 307 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூஸிலாந்து அணி இரண்டு டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது. முதலாவது ஆட்டம் ஹைதராபாத்தில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

கம்பீர் - சேவாக் ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கியது. கம்பீர் ஆட்டத்தின் முதலாவது பந்தை பவுண்டரிக்கு விரட்டி ஓட்டக் கணக்கை தொடக்கி வைத்தார். பின்னர் கம்பீர் - சேவாக் ஜோடி நியூஸி. பந்து வீச்சை பதம் பார்த்து ஓட்டக்குவிப்பில் ஈடுபட்டது. மாட்டினின் பந்து வீச்சில் சேவாக் 21 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கொடுத்த ஆட்டமிழப்பு வாய்ப்பை நியூஸிலாந்து வீணாக்கியது. இதற்குப் பதிலாக அடுத்த பந்துப் பரிமாற்றத்திலேயே நியூஸிலாந்து கம்பீரை 22 ஓட்டங்களுடன் வெளியேற்றியது. முதலாவது இலக்குக்கான இணைப்பாட்டம் 49 ஓட்டங்களுடன் பறிக்கப்பட்டது.

அதன் பின்னர் புஜாரா களமிறங்கினார். மறுமுனையில் சேவாக்கின் ருத்திர தாண்டவம் தொடங்கியது. அதிரடி வேட்டை நடத்தி ஓட்டங்களைக் குவித்தார். சேவாக்கின் அதிரடி வேட்டை 47 ( 41 பந்துகளில் 9 பவுண்டரிகள் அடங்கலாக) ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. தொடர்ந்து இந்தியாவின் மாஸ்டர் பட்ஸ்மன் சச்சின் களமிறங்கினார். சச்சின் மீதான எதிர்பார்ப்புக்கள் அதிகமாக இருந்த போதிலும் அவரை நியூஸிலாந்து 19 ஓட்டங்களுடன் பவிலியனுக்கு அனுப்பி வைத்தது. அப்போது இந்திய அணி 125 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்திருந்தது.

அதன் பின்னர் இளைய வீரர்களான ஹோக்லி - புஜாரா இணைந்தனர். இவர்களது இணைப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி ஒரு வலுவான இலக்கை நோக்கி முன்னேறியது. ஹோக்லி ஓரளவு அடித்தாடி ஓட்டங்களைச் சேர்த்தார். அணி 194 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் புஜாரா 60 ஓட்டங்களுடன் ஸ்மித் பட்டேலின் பந்து வீச்சில் கொடுத்த பிடியெடுப்பை டானியல் பிளைன் தவறவிட்டார். இதன் பின்னர் ஹோக்லி 46 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கொடுத்த பிடியெடுப்பு வாய்ப்பையும் நியூஸிலாந்து அணி வீணாக்கியது.

இறுதியில் நான்காவது இலக்குக்காக 125 ஓட்டங்கள் இருவரிடையேயும் பகிரப்பட்ட நிலையில் ஹோக்லியை 58 ஓட்டங்களுடன் மாட்டின் வெளியேற்றினார். மறுமுனையில் அசத்திய புஜாரா தனது முதலாவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

தொடர்ந்து நுழைந்த ரெய்னா 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்திய அணி 260 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து திணறியது. இதன் பின்னர் களமிறங்கிய அணித்தலைவர் டோனி, புஜாராவுடன் இணைந்து தனது ஓட்ட வேட்டையைத் தொடர்ந்தார். இருவரும் இணைந்து இந்திய அணியை ஆட்டநேர நிறைவு வரையில் சிறப்பாக வழி நடத்தினர்.நேற்றைய முதலாம் நாள் ஆட்டநேர நிறைவில் இந்திய அணி 5 இலக்குகளை இழந்து307 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் புஜாரா 119, டோனி 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது உள்ளனர். பந்து வீச்சில் போல்ட் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (5)

## பீற்றர்சன் இல்லாமல் முதலிடம் பிடிப்போம்



இங்கிலாந்து அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் இன்றியே இங்கிலாந்து அணியால் டெஸ்ட் தரப்படுத்தலில் மீண்டும் முதலிடத்தை அடைய முடியும் என்று இங்கிலாந்துக் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் அன்டி பிளவர் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணி நிர்வாகத்தோடும், அணித்தலைவர், பயிற்றுவிப்பாளரோடும் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக இங்கிலாந்து அணியிலிருந்து கெவின் பீற்றர்சன் நீக்கப்பட்டுள்ள நிலையில் முதன்முறையாகக் கருத்துத் தெரிவித்துள்ள அன்டி பிளவர், இங்கிலாந்து அணி கெவின் பீற்றர்சனின்றி சிறப்பாகச் செயற்படும் எனத் தெரிவித்தார்.

எது வித சந்தேகங்களுமின்றி இங்கிலாந்து அணி சிறப்பாகச் செயற்படும் எனத் தெரிவித்த அன்டி பிளவர், இங்கிலாந்துக் கிரிக்கெட் மிகச் சிறப்பான வரலாற்றைக் கொண்டுள்ளதோடு, மிகச்சிறப்பான எதிர்காலத்தையும் கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இங்கிலாந்தின் கிரிக்கெட் எந்தவொரு தனி நபரையும் விடப் பெரியது எனத் தெரிவித்த அன்டி பிளவர், அது அணித்தலைவராகவோ, பயிற்றுவிப்பாளராகவோ அல்லது ஒரு வீரராகவோ இருந்தாலும் அவர்களைத் தாண்டிச் சென்று வெற்றிகளைப் பெறும் எனத் தெரிவித்தார்.

தங்களைப் பொறுத்தவரை முக்கியமான விடயமாக இங்கிலாந்தின் கிரிக்கெட்டிற்குச் சாதகமான முடிவை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்த அன்டி பிளவர், அந்த வகையிலேயே தங்கள் முடிவுகளும் அமைந்திருக்கும் எனவும் தெரிவித்தார். தான் அணியில் இணைந்தது தொடக்கம் தனது முடிவெடுத்தல் அவ்வாறே அமைந்திருந்தது எனத் தெரிவித்த அன்டி பிளவர், எதிர்காலத்திலும் அவ்வாறே அமைந்திருக்கும் எனவும் தெரிவித்தார்.

கெவின் பீற்றர்சனின் விவகாரம் இங்கிலாந்து அணிக்குப் பாதிப்பாக அமைந்ததாகத் தெரிவித்த அவர், கெவின் பீற்றர்சன் தனது பிரச்சினைகளை முகத்துக்கு முகம், நேரடியாகக் கதைத்துத் தீர்த்துக் கொள்ள முயல வேண்டும் எனத் தெரிவித்தார்.

அத்தோடு இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் முழுமையாகப் பங்குபற்ற வேண்டும் என்ற கெவின் பீற்றர்சனின் விருப்பமும் ஆவலும் இந்தப் பிரச்சினைகளுக்கு முக்கிய தூண்டுகோலாக அமைந்ததாகத் தெரிவித்த அன்டி பிளவர், அவரது அந்த எண்ணம் காரணமாக அவரது நடத்தைகளில் மாற்றங்கள் ஏற்பட்டதாகவும் தெரிவித்தார். (5)

## லக்ஸ்மனுக்கு வேண்டா விருந்தாளியான டோனி





இந்திய கிரிக்கெட் அணியின் நான்காவது இன்னிங்ஸ் நாயகன் என்றழைக்கப்படும் மூத்த வீரர் வி.வி.எஸ்.லக்ஸ்மன் சமீபத்தில் சர்வதேச போட்டியிலிருந்து ஓய்வுபெற்றார்.

நியூசிலாந்துக்கெதிராக நேற்று ஆரம்பமான இரண்டு போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் இந்திய அணிக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தும், அந்தத் தொடருக்கு முன்பே லக்ஸ்மன் தனது ஓய்வு அறிவிப்பை வெளியிட்டது சர்ச்சையைக் கிளப்பியது.

இந்த நிலையில் லக்ஸ்மன் ஹைதராபாத்தில் உள்ள தனது வீட்டில் நேற்று முன்தினம் நண்பர்களுக்கு இரவு விருந்தளித்தார். சச்சின் டெண்டுல்கர், வீரேந்திர சேவாக், கம்பீர், சகீர்கான் உள்ளிட்ட மூத்த வீரர்கள் அனைவரும் இந்த விருந்தில் பங்கேற்றனர்.

ஆனால் இந்திய அணியின் அணித்தலைவரான மஹேந்திரசிங் டோனிக்கு, இந்த விருந்தில் கலந்துகொள்ளுமாறு லக்ஸ்மன் அழைப்பு விடுக்கவில்லை.

லக்ஸ்மன் அளித்த இரவு விருந்துக்கு உங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதா என்ற கேள்விக்கு? டோனி இல்லை என்று பதிலளித்தார்.

தனது ஓய்வு பற்றி பேசுவதற்காக அணித்தலைவர் டோனியை தான் தொடர்புகொள்ள முயன்றும், அது முடியாமல் போனதாக லக்ஸ்மன் கூறியிருந்தது பற்றி, டோனி ஊடகத்தினரிடம் பேசினார்.

அப்போது, நீங்கள் இதனை ஒரு சர்ச்சையாக நினைக்கிறீர்கள். ஆனால் என்னைப் பற்றி தெரிந்தவர்கள், என்னைத் தொடர்பு கொள்வது சற்று கடினம் என்று, என்னிடம் அடிக்கடி கூறுவதுண்டு. இது ஒன்றும் புதிதல்ல. இந்த விடயத்தில் என்னை மேம்படுத்திக் கொள்ள நான் பலமுறை முயன்றும், என்னால் அது முடியவில்லை. தனது ஓய்வுபற்றி பேச முயன்றபோது, லக்ஸ்மன் என்னை தொடர்பு கொள்ள இயலாமல் போனதற்கு இதுவும் ஒரு காரணம் என்று டோனி கூறினார்.

கடந்த நான்கு மாதங்களாக தீவிர பயிற்சி செய்து, சில உள்ளூர் போட்டியிலும் ஆடி நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்காக சிறந்த முறையில் தயாராகி இருந்த லக்ஸ்மன், இந்தத் தொடருக்கு முன்னதாகவே திடீரென ஓய்வு பெற்றதால், இந்திய வீரர்களுக்கிடையே ஒற்றுமை இல்லை என்பன போன்ற செய்திகள் உலாவுகின்றன.

இந்த நிலையில், நியூசிலாந்துக்கு எதிரான இரண்டு போட்டியும் லக்ஸ்மனுக்கு வழங்கப்பட்ட இறுதி வாய்ப்பு என்று தெரிவுக்குழுவின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர் எச்சரித்ததே, அவர் திடீரென ஓய்வுபெறக் காரணம் எனவும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சச்சின், டோனி, யுவராஜ் நடித்த சர்ச்சைக்குரிய விளம்பரத்தை நிறுத்த பி.சி.சி.ஐ. உத்தரவு



சச்சின், டோனி ஆகியோர் இறுதிச் சடங்கு செய்வது போல நடித்துள்ள சர்ச்சைக்குரிய விளம்பரத்தை உடனடியாக நிறுத்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ.) உத்தரவிட்டுள்ளது.

சகாரா நிறுவனத்தின் 'கி - ஷொப்' விளம்பரங்களில் சச்சின் டெண்டுல்கர் இறுதிச் சடங்கு செய்வது போலவும் யுவராஜ் சிங் இடுகாட்டுக் குழி தோண்டுவது போலவும் வரும் விளம்பரம் மோசமாக உள்ளது.

மேலும் 3 வீரர்கள்தான் ஒரு விளம்பரத்தில் தோன்ற அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த விளம்பரத்தில் 8 பேர் தோன்றுகின்றனர். இது உடன்பாடிக்கைக்கெதிரானது என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ.) எச்சரித்துள்ளது.

வீரர்களின் பிம்பம் முக்கியமானது. கிரிக்கெட் வீரர்களை இந்த விளம்பரங்களில் காட்டுவது போல் பார்க்க ஒருவரும் விரும்ப மாட்டார்கள், அது மோசமான ரசனையில் அமைந்துள்ளது உடனே அந்த விளம்பரத்தை நிறுத்தவேண்டும் என்று இந்திய கிரிக்கெட் சபை கூறியுள்ளது.

இந்த விளம்பரத்தை எதிர்த்து ஒரு வீரர் கூட முறைப்பாடு செய்துள்ளார். எனவே உடனடியாக இந்த விளம்பரத்தை விலக்கிக் கொள்வது நல்லது என்று இந்திய கிரிக்கெட் சபை கூறியுள்ளது. சச்சின் டெண்டுல்கரும் இந்த விளம்பரத்திற்கு எதிர்ப்பு தெரிவித்ததாக தெரிகிறது. இதனால் அந்த சர்ச்சைக்குரிய விளம்பரம் விரைவில் நிறுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (5)

# சகலகலா வல்லவனாக வேண்டும்



கிரிக்கெட்டில் பந்துவீச்சாக இருக்க லாம், துடுப்பாட்டமாக இருக்கலாம், களத்தடுப்பாக இருக்கலாம் அனைத்துப் பிரிவுகளிலும் முன்னேற்றத்தைச் சந்திக்க விரும்புவதாக இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஷ்வின் தெரிவித்துள்ளார்.

தன்னுடைய ஒட்டுமொத்தக் கவனமும் தான் வளர்ச்சியடைகிறேனா என்பதிலேயே இருக்கிறது எனத் தெரிவித்த ரவிச்சந்திரன் அஷ்வின், எந்தத் துறையாக இருந்தாலும் அதில் வளர்ச்சியடைய விரும்புவதாகத் தெரிவித்தார். தனது துடுப்பாட்டத்திலும் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவித்த ரவிச்சந்திரன் அஷ்வின், அணிக்குத் துடுப்பாட்டத்திலும் பங்களிக்க முயற்சிப்பதாகத் தெரிவித்தார்.

டெஸ்ட் போட்டிகளாக இருக்கலாம், ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளாக இருக்கலாம், 'ரி–20' சர்வதேசப் போட்டிகளாக இருக்கலாம் அனைத்திலும் அடிப்படையை மறக்கக்கூடாது எனத் தெரிவித்த அஷ்வின், நியூசிலாந்திற்கெதிரான டெஸ்ட் தொடரில் தூஸ்ரா வகைப் பந்துகளை வீச எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார். தூஸ்ரா வகைப் பந்தைத் தான் முயற்சி செய்து பழகியுள்ளதாகத் தெரிவித்த அவர், அதனைப் பயன்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.


## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
**S.N. குமாரசாமி**
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பில்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(20772) (15-14)



புதிய பிரிவுகள் ஆரம்பம்

**Chartered Accountancy**
Foundation level & Intermediate level
(CAB-I & CAB-II)
Medium :- English & தமிழ்
Minimum Requirement :- GCE A/L 3 Passes
" இம்முறை A/L பரீட்சை எழுதிய மாணவர்களும் பதிவினை மேற்கொள்ளலாம்

வங்கியில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான
வங்கியியல் கற்கைநெறிகள்
**CBF,DBF**
அடிப்படைத்தகமைகள்
G.C.E.( O/L) 06 PASSES WITH 05 Credits including Maths/Commerce & Accounts, and Language (Tamil/English)

**aat (Srilanka)**
Foundation level & intermediate level & Final
புதிய பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன

மருந்தாளர் (வெளிவாரி) பரீட்சை
PHARMACIST (EXTERNAL) Examination course
(Cylon Medical College Council, University of Colombo)
கல்வித்தகமைகள் :- GCE O/L ஆங்கிலபாடச் சித்தி
GCE A/L இரசாயன பாடம் உட்பட மூன்று விஞ்ஞான பாடங்களில் சித்தி

Further Detail.
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.0212223382 (c/2573)


## கண்ணீர் அஞ்சலி



எமது குடும்பத்திற்கு உற்ற துணையாய், வழி காட்டியாய், ஆதரவாய், நண்பனாய் இருந்த
**இ.சங்கர்**
அவர்களது மறைவு எமக்குப் பேரிழப்பாகும். அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

51, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.
த.அருணகிரிராஜா குடும்பம்


நாளை புதிய பிரிவுகள் ஆரம்பம்
Java OOP Swing Applet
4.00 pm
for 10 years...
PHP+MySQL Web Application
HTML JavaScript CSS 7.30 am
R.Kumaran-B.Sc.
(22060)
74, Sabapathy Lane, Jaffna - 0776577359



INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Telecommunication & Information Technology
MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, SriLanka.
Office : 021 222 3641
Fax No : 021 222 3643
அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
SEPTEMBER BATCH
* Dip.in PC Application & Office Management
* Dip.in Desktop Publishing
* Internet & e-mail (Workshop)
விண்ணப்ப படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 14-09-12
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 15-09-12
Centre for Information Technology
-Executive Officer-
(ம/2582) (2-6-7)



யாழ்ப்பாணத்தில்...
IELTS BRITISH COUNCIL
பரீட்சைகள் October 27th
IELTS FOR UK STUDENT VISA APPLICANTS
பரீட்சை நாள்வரை விசேட வகுப்புகள் நடைபெறும்
புதிய பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன
CITY COLLEGE OF ENGLISH
No.143, Adiyapatham Road, Thirunelvely - Jaffna.
Tel. 021 222 0384
077 8803887



## பணிநிலை வேண்டுகை

யாழ் நகரில் இயங்கும் பிரபல இலத்திரனியல் பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் உடன் தேவை.
* கணக்காளர்
* கணக்கு உதவியாளர்
ஆண், பெண் இருபாலாரும் சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.
MIDEA ELECTRO MART
No.1-I, 1H, Stanley Road, Jaffna.
T.P- 0212224566
(சி/2589)(3.6.7)


## மரண அறிவித்தல்

### இ.சங்கர் (செங்காரபிள்ளை)



(உரிமையாளர், பாரதி பதிப்பகம்)

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மூத்த பத்திரிகையாளரும், பாரதி பதிப்பக உரிமையாளருமாகிய இ.சங்கர் நேற்று (23.08.2012) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பூரணபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இந்திரராசா-செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம்-தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், கலாநிதி, அறிவழகன் (கணித புள்ளிவிவரவியல்துறை- யாழ். பல்கலைக்கழகம்), வைத்தியகலாநிதி அறிவுச் செல்வன் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி தயாநீ, வைத்தியகலாநிதி கலைமகள் (கண்டி போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனும், ஆரபி, இலக்கியா, அறிவுஆதித்தன், அறிவுஅரங்கன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆனைப்பந்தி நாவலர் ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் நாளை 25.08.2012 சனிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப 10 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

273/1, நாவலர் ஒழுங்கை,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தகவல்:
செ. அறிவழகன்-
(மகன்).


A/L 2012 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு கணினி மையம் கல்வியங்காட்டில்
கணினி கற்கைகளுக்கு 100% Diploma Course fee free
ஆரம்பத்தில் இருந்து கற்கலாம், பூரண அறிவிற்கான உத்தரவாதம்.
பதிவுகளுக்கு உங்கள் Name & index no என்பவற்றை 775520940 க்கு SMS அனுப்புங்கள்
MCAI CAMPUS 243,Adiyapatham Road
Facebook : MCAI CAMPUS
Supported by Jaffna Computer Society
Qualified Lectures panel, 12 Years Experience



கிருபா லேணர்ஸ் வழங்கும்
யாழ்ப்பாணம் - 021 2224353, சாவகச்சேரி,நெல்லியடி, சுன்னாகம், கிளிநொச்சி, விசுவமடு.
VIJAY TV ஜூனியர் சீனியர் சுப்பர்சிங்கர் வெற்றியாளர்களான
ஸ்ரீகாந் மற்றும் மாளவிக்காவுடன்
மற்றும் பல முன்னணிக் கலைஞர்கள் கலந்து சிறப்பிக்கும்
ஜூனியர் சீனியர் இசை நிகழ்ச்சி
26.08.2012 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
VIP ரிக்கட்டுக்களைக் கொள்வனவுசெய்யும் ரசிகர்களுக்கு இசை நிகழ்ச்சி முடிந்தவுடன் ரில்கோ ஹோட்டலில் மாளவிக்கா, ஸ்ரீகாந்துடன் புகைப்படம் எடுக்கும் சந்தர்ப்பம் இலவசமாக வழங்கப்படுவதோடு Tilko Hotel இனால் குறைந்த செலவில் வழங்கப்படும் இராப்போசன விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.
ரிக்கெட்டுகளுக்கு : கிருபா லேணர்ஸ் 021 2224353 மற்றும் நிகழ்வன்று மண்டபவாயிலிலும்
நுழைவுச்சீட்டுகள் : 200/= 300/= 500/= VIP
OUR SPONSORS
ராம்கோ RAMCO CEMENT
உதயா ஜுவல்லர்ஸ் 81, கஸ்தூரியார் வீதி, யாழ். 021 222 4434
TILKO 021 222 5969
தளபாடங்கள்
நல்லி சில்க்ஸ் 021 2225573
ராசி சில்க்ஸ் 021 2225571
FAMILY SUPER MARKET Jaffna Road, Manipay. Tel: 0773946487
மிலன் மோட்டோர்ஸ் யாழ்வீதி, மானிப்பாய் T.P : 021 2255312
Ranjanas CERAMIC
Event Management CAC Ceylon Art Creation


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.